12

206

206

ஸ்ரீ

வர்ம சாத்திரம் - அகத்தியர்

Copy from manuscript
of Mr. Daniel - Kanyakumari

128

copied from a leaf book on the 8th march 1925 by
M. Daniel.
Neyyur. K.K.

வற்ம சாத்திரம்.

ஆதியென்ற மூலவட்டக் கணபதியே காப்பு
அகண்ட பரிபூரணத்தின்றிவிலைலே
சோதியருள் நின்றிலிங்கும் பிராணதுபே
சூக்ஷ் மதை யாவரும் துலங்க வேண்டி
ஆதியென்னுமுலகத்தில் மானிடர்க்காய்
வகை விபரம் கைப்பாகம் வழியைச் சொல்ல
பாதி மதி தரித்த சிவன் தன்னைப் போற்றி
பராபரப் பொருளே பரனே காப்பு.

ஆதாரமானதொருவுலகத்துள்ளே
அகண்டமாயண்டமெல்லாம் நிறைமூர்த்தி
பாதாரந்தனைப்பணிந்து வற்ம சூத்திரம் பாடினர்
நாடி நரம்பினவாறும்
வேதாரம் கொண்டுணர்ந்து என்னையாண்ட
கடாக்ஷமது போகருட கருணையாலே
வாதாரம் மகிழ்ந்துரைத்த வற்ம சூத்திரம்
வையகத்தோர் காணாமல் மறை வில்வையே
மறைவில்தான் வைப்பதென்றால் மைந்தா கேளு
வகைவிபரம் கைப்பாகம் மறைப்பதொன்றில்லை
உறவாடி சிலபேர்கள் நூல் தரவென்று
ஒவியம் போல் மொழியே பேசி உன்னை ஏய்ப்பார்
திறமான நூலவர்க்கு வெளிவிடாதே
சிக்ஷனென்று பன்னிரண்டு வரக்ஷங்காத்தால்
அறிவான புதியவர்க்கிருந்ததானால்
அப்பனே பொருள் வாங்கி நீ லை தியே:

இவதுதான் யாருக்கு சிவயோகிக்கு
இகத்திலுள்ள வம்பருக்கு தந்தாயானால்
சாவது போல் கடல் நரகில் விழுவாய் சொன்னேன்
சண்டாளர்க்கியாதே தரணி மீதில்
நாமிதுவே வெளியாகச் சொன்னோம் மைந்தா
தாரணியில் இந்நூலை மறைத்தார் பாரு
ஆமிதுவே நின்றவர்க்கு வற்மமெல்லாம்
அட்வாகப் பலியாது அறிந்து பாரே.

பாரப்பா படுவற்மம் பன்னிரண்டும்
பாங்கான் தொடு வற்மம் தொண்ணூற்றாறும்

வேறப்பா மெய் தீண்டாக்காலமொன்று
வெற்றியென்ற பச்சிலையும் விளம்பக் கேளு
ஆரப்பா நாடி எழுபத்தீராயிரம்
ஆராய்ந்து சூத்திரத்தை அறிய வென்றால் சொல்லக் கேளு
தேடியேதான் சொல்லுகிறேன் தெளிந்து கேளே.

கேளடா மன்மதனை அடக்கவேணும் கெடியான
கோபமெல்லாம் தொலைக்க வேணும்
ஆரடா ஆணும் காலங்கொண்டால்
அப்பனே குருபரனைத் தேடவேணும்
பாரடா அநுமானைப் பூசை வேணும்
பத்திரமாய் அஞ்செழுத்தை சித்தி வேணும்
சீரடா சிதம்பர சக்கரத்தை எழுதி வைத்து
சீருலகில் அஞ்செழுத்தால் தியானம் செய்யே.

செய்யப்பா மூலியெல்லாம் சாபம் தீர்த்து
செயலான வாசனைத் தானுண்டு பண்ணி
கையப்பா வற்மத்தைத் தேற்ந்து கொண்டு
கருத்தான கை பாகம் அறியவேணும்
நையப்பா இதின் விபரம் நன்றாய் பார்த்து
நாதனருளால் பெருக்கத்தை நாடுவாயே
வையப்பா வற்மமெல்லாம் பகரக்கேளு
பராபரனை நெஞ்சதிலே நினைத்து நேரு

நேரப்பா நெற்றி நடு புருவத்தின் தன்னில்
நேராக நெல்லிடைக்குத்தாழ்வதாக
தாரப்பா திலதக்காலம் அதுக்குப்பேரு
தட்டெனவே முறிவு கொண்டால் பிழையாதப்பா
பிழையாத காலமிது திலதக்காலம்
பேசுகிறேன் திலதவற்மம் கொண்டால் கேளு
குடும்பி பிடி திருத்தி உச்சி குணமாகத்தட்டி
தலையாகப் பின்கலையும் செவியும்
சார்வான சுக்கு வைத்து ஊதிடாயே.

ஊயாமல் அன்னப்பால் சுக்கும் சேர்த்து
உத்தமனே கொடுத்து விட்டால் உறுதியாகும்

விளவாக இந்த வற்மம் செய்கின்றோர்க்கு
விசித்திரமாயிருந்து ஊதிடாயே.

ஊதியே அன்னப்பால் சுக்கும் சேர்த்து
உத்தமனே கொடுத்து விட உறுதியாகும்
சாதியெனும் நக்ஷத்திரங்காலந்தன்னே
தலங்குணமும் விபரமுடன் சாற்றக் கேளு
சோதியெனும் கண்டக் கண்ணி நிறைக்குள்ளே
தான் துலங்குகின்ற குழிவதிலே காலமப்பா
வாதியென்ற வற்மமது கொண்டுதானால்
மஞ்சள் போல் கண்முகமும் மாறும் பாரே.

முகம் மாறி வேர்வையுடன் விழி திகளாது
முதுகு விலா இருபுறமும் குளிர்ச்சி காணும்
யுகமான நாழிகை தான் இருபத்தேழில்
உத்தமனே இளக்குமுறை உரைக்கின்றேனே
சுகமாக கைவிரித்து மறுபுறத்தில் சூத்திரமாய் தட்டொன்று சுறுக்கில்லாமல்
நீ வகையாக இருபுறமும் தடவித்தாழ்த்து
மகிழ்ச்சியாக உச்சியிலோர் அடியும் போடே.

போடையா சுக்காலே ஊதிப்போடு
புத்தியுடன் சாமையரிசிப்பா லேயூட்டு
ஊட்டியே காதில் சிறு தண்டில் தாழ்த்து
கலங்காதே செவிக்குருத்திக் காலமென்பார்
வீடைய்யா செய்குணத்தை விளம்பக் கேளு
விழிரண்டும் தள்ளி வாயில் பதையுங் காணும்
நாடப்பா இக்குணத்தை நன்றாய் ப்பார்த்து
நாழிகைதான் இருபத்தி மூன்றுக்குள்ளே மாறும்.

மாறுமப்பா மறுபுறத்திலொன்றிக்குத்தி
மகத்தான கண் விழியும் தடவி தாழ்த்து
குருபதத்தை நினைந்து மடக்கி இருத்தி
கூசாமல் இருபுறமும் தடவித்தாழ்த்து நீ
கருவறிந்து கைபிணைத்து தலைமேல் வைத்து
கமலமதில் அடியடித்துக் காதிலூதி
அருகிருந்தோரறியாமல் இளகும் பாரு
அரிசியிட்டு அன்னப்பால் சுக்குமாமே.

ஆமப்பா இன்னுமொருகாலஞ் சொல்வேன்
ஆச்சரியம் ஆச்சரியம் இதுபோலுண்டோ
தாமப்பா வளைமுடிந்த தலத்தில்தான்
சார்வான குழிவதிலே பிடலிக்காலம்
ஓமப்பா ஓடிவிட்டனே அடிகள் குத்த
ஊக்கமுடனே கொண்டதென்றால் உடனே சாகும்
நாமப்பா தலை குழைந்து கண்ணுமூடி
நன்றாகத்தானதும் கண்டாய்.

நாடுமப்பா நாழிகைதான் மூவெட்டையா
நன்மையுடன் பிழக்குமுறை நவிலக்கேளு
ஓடுமப்பா அறயாமல் உத்தமனே
உச்சியிலோர் அடியும் பேட்டே
ஆடுமப்பா கண்டத்திலனுவாகத்தான்
அப்பனே உச்சியிலோர் அடியும் போடு
கொள்ளுமப்பா பிடரியின் கீழ்ஒன்று குத்தி
கூசாமல் பிடரிவட்டம் தடவிடாயே.

தடவியே விட்டு அப்பால் கொள்ளு
தப்பாமல் இந்த வர்மம் இளகும் பாரு
தொட்ட குறியாக இன்னுமொன்று சொல்லுகிறேன்
தும்மி நின்ற காலந்தன்னை
விட்டபடி தொண்டையின் கீழ்குழியிலையா
மேலான் வற்மமது கொண்டுதானால்
கட்டமென்ன மேல்துடிக்கும் கண்ணுமூடும்
கமலமென்ற நாசி நீர் ஒலிக்கும்பாரு.

ஒலிக்குமப்பா முகம் கறுக்கும் வேர்வையுண்டாம்
உத்தமனே நாழிகை பதினெட்டுக்குள்
பலிக்குமப்பா நாசி செவி சுக்காலூதி
அன்னப்பால் சீக்கிரத்தில் அருந்திடாயே
அலிக்குமப்பா ஆச்சரியம் நெருவற்மம் தடவக்கேளு
நலிக்குமப்பா கும்பில் இருவிரலின்தாழே
நலமான திலதால வற்மம் கொண்டால் கேளு
இருக்கையிலே செத்தது விழும் இதுக்கலைதானும்
இமையாலே செத்தும் விழும்

பொரிந்திடவும் நாழிகைதான் பதினெட்டுக்குள்
புத்தியுடன் உச்சியிலோர் அடியும் போடு
அரிந்திடவே காலமது இளகும் சொன்னேன்
அடக்கமென்ற பச்சிலையை தாக்கச் செய்து
துறந்திடவே இந்த, வற்மம் அடக்கம் தட்டு
துரோகிகளை பாராதே தட்டிப் போடு
போடப்பா அடையுடனே புறங்கால் கொண்டு
புத்தியுடன் முதுகு வரியில் தலத்தைச் சொன்னேன்
வெத்தியுடன் இன்னுமொரு அடிவுக்கேளு
மூடப்பா முன்டெலும்பில் இறையோன் மூன்றில்
இயல்பான தியான பக்கத்தில் அட்டப்பக்காலம்.

காலமென்றால் செய்குறிகள் கருதிக் கேளு
கடினமாடா தளர்ச்சையுண்டாம் விளிகேளாது
கோலமென்ன காலமது குறியான தேகமெல்லாம்
எடுத்து இருத்தி கை பிணைத்து உச்சியிலோர் அடியும் போடு
கரைக்கவே செவிநின்றும் தூக்காதி
கால்மடக்கி முதுவரியில் கருத்தாய் தட்டி
விரைக்கவே சரீரமெங்கும் தடவித் தூக்கி
விட்டுவிடு அன்னப்பால் சுக்கும் சேரு
விரைக்கவே எழுந்திருப்பான் நிசமாய்ச் சொன்னேன்
நிண்ணயமாயின்னமொரு அடவுகேளு.

பலியாது அதிசுக்குரகி என்பார் நாளடா
காலமது கொண்டுதானால்
நால்பது நாளிதிலே முதிர்ந்து போகும்—காலமென்ன
மறுபுறத்தில் புறங்கால் கொண்டு தட்டியே
முதுகு நெஞ்சு தடவித்தாந்து
வேலெனவே நாழிகைதான் பதினெட்டுக்குள்
வெற்றியுடன் அன்னப்பால் கொடுத்திடாயே.

அன்னம்போம் இன்னமொரு அடவுகேளு
அப்பனே நேருவற்மதலத்தின் கீழேதானே
சூக்ஷமடா உறுமியென்ற காலந்தன்னை
இன்னுமப்பா கண் விழிக்கும் விளி கேளாது

இரைந்து மேல் மூச்சிட்டு இளகும்பாரு
மன்னுமப்பா நாழிகை தான் இருபத்தேழு
உத்தமனே இளக்குமுறை உரைக்கின்றேனே.

ஆகுமப்பா இளக்குமுன் அறியக் கேளு
அணைதிருத்தி மறுபுறத்தில் புறங்கால் கொண்டு
வேகுமே தட்டொன்று தலைமேல் கையும்
விபரமுடன் அணைத்தடிக்கா வீச்சுமாகும்
போகுமப்பா முதுகுவரியில் புறங்காலாலே
புத்தியுடன் தட்டிவிடு புதுமையாக
ஏகுமப்பா சேர்த்தணைத்து தடவும் போது
எழுந்திருப்பான் இந்த வர்மம் எல்லாருமெய்க்கு.

மெய்ப்பதென்ன கறியுப்பு அன்னப்பாலும்
மைந்தனே கொடுத்து விடுமாறு நந்தானே
மெய்ப்பதென்ன இளகாவிட்டால் அடக்கக்காலம்
மனஞ் சேர்ந்து குறிகள் கண்டு இளக்குவாயே
இப்புவியதோர்கிந்த வர்மம் செய்ய வேண்டாம்
இருக்கையிலே மண்டலத்தில் இறந்து போகும்.

இறந்து போம் முன்டெலும்பில் இறையோன் மூன்றில்
இயல்பான சிறிய அத்தி சுருக்கிக் காலம்
பந்து போல வலிய அத்தி சுருக்கிப் போல
பாலகனே குணமிது தான்பகரக்கேளு
சிறந்ததன்ன நாழிகைத்தான் இருபத்தேழில்
சேர்த்திருத்தி இருபுறமும் சிராய் தட்டி
அறிந்த தன்ன அப்பனே முதுகு வரியில் புறங்கால் கொண்டு
அறிந்து நீ தட்டென்று அறிந்திடாயே.

அறிந்து நீ கை பிணைத்து தலைமேல் வைத்து
ஆச்சரியம் உச்சியிலோர் அடியும் போடு
சிறந்து நீ வெற்றிலை கபத்திலும் சுக்கும் சேர்த்து இரண்
டுகாதிலும் சிறக்க ஊது
தேர்ந்து நீ சேர்ந்தெடுத்து உதறும் போது
தெய்வக்குரு கிருபையினால் இளகும்பாரு
கார்த்துமே அரிசி உரிபலமே சுக்கு
கணக்காக அன்னப்பால் கணக்கில் சேரே.

சேரப்பா அன்னப்பால் கொடுக்கும்போது
சித்திரமாய் இந்த வர்மம் இளகும்பாரு
ஆசப்பா கல்லட காலம் சொல்வார்
ஆச்சரியம் ஆச்சரியம் தீதாமப்பா
ஊனப்பா மனிதருக்கு கொண்டுதானல்
உத்தமனே விரை இரண்டும் காணதப்பா
ஓரப்பா கல்லேறும் தளர்ச்சையாகும்
உத்தமனே சத்தங்கள் மூச்சுப்போகாது.

போத்திதன்ன நீர்பிடிக்கும் வயறும் ஊறும்
பொருந்தவே மூச்சு விடாது உறங்கும்பாரு
சாத்தன்ன இரத்தம் வந்துக் கெட்டிடக்கொள்ளும்
சதை வளர்ந்து முடுகுமடா விரைவராதே
பாதத்தன்ன கலசம் மூன்று அண்டைக்கூட்டி
பத்திரமாய் ஆளொன்றைப் பிடிக்கச் சொல்லி
கூறத்தன்ன நெற்றி தன்னில் விரல் கொண்டு
கைமுறையாய் உச்சியிலோர் அடியும் போடே

போடய்யா முதுகு வரியில் புறங்கால் கொண்டு
புத்தியுடன் தட்டிவிடு புதுமையாக
ஆடைய்யா கால்தூக்கி சேர்த்திருத்தி
அப்பனே கல்இறங்கும் நிறமாகத்தானே
விடைய்யா விரல் பிடித்து துணியைச் சுற்றி
வித்தகனே நீரொலப்பாய் திரிநாள்மட்டும்
நாடைய்யா மந்திரத்தைச் சொல்லக்கேளு
மங்கு மங்கு சிங்கு வங்கு சிறியும் நலமாய் ஓதே

ஓதவே ஓங்கார வாசிவா என்று உத்தமனே உங்கன்று உறுதியாக
போதவே ஓதிவிடு நூற்றெட்டைய்யா
புத்தியுடன் சித்திரத்தைப் புகலக்கேளு
வாதுடனே ஐங்கோணு மேலே வட்டம்
வளமான சூலமுனையும் சிறியும் நாடி
ஆகவே அஞ்செழுத்தை அதன் மேல் நாட்டி
அருமையாய் செய்திருவாய் ஆறும்பாரே.

பாரப்பா படுவற்மம் பன்னிரண்டு
பாங்கான கைப்பாகம் படியேச் சொன்னேம்
ஊரப்பா அடக்கம் என்ற கலம்தன்னை
உனக்கறியர்த் உரைப்பேனப்பா
ஆரப்பா ஆளும் காலம் கொண்டால்
அப்பனே கொண்ட திதலம் குழிந்துக் காணும்
வேறப்பா சோதனையைக் கொண்டு
வித்தகனே திரை வளைந்து இளக்குவாயே

வாழ்மென்ன இளகாத காலத்துக்கு
மாத்திரைத்தான் ஏதிலி மாயோன் மாயோன்
மாயமென்ற குருமுடிப்பு மதிக மூலி
அறிவாய் சொன்னேன் நியாயமாய் சாய்புழிந்துதாக்கும்போது
நாயகனே வற்மம் எல்லாம் இளகும்பாரு
தாயென்னத்தட்டுமுறைச்சாற்திறக் கேளு
சார்ந்த உடல் சேர்த்து இரண்டு துடையும் கூட்டி
எடுத்துதறிப்போடே.

கூட்டியே எடுத்தறிக்குத்தும்போது
குணமாக உச்சியிலோர் அடியும்போடு
கூட்டியே செவிரண்டும் சுக்காலூதி
கால்மடக்கி முதுகு வரியில் கருத்தாய் தட்டி
பாட்டிலே சொன்னதெல்லாம் விட்டிடாதே
பலம்பெறவே இல்லையடா அடக்கக்காலம்
காட்டினதோர் செய்குறிகள் கருதிக் கேளு
கடினமடா காலமென்ற கைப்பாகம் அறியவேணும்.

பாலமது போட்டாப்போலே நூறுக்குள்ளே
பாடினேன் பன்னிரண்டு தழுமய்யா
ஆழ்முண்டகண்டருட அருளைப் போற்றி
அறிவுணர்ந்தோர் பூரணமாயெவ்வுயிர்க்கும் கோபமொன்றும்
இல்லையடா குருவின் பாதம் கும்பிட்டாலம்பிகையும் // குறி சொல்வாதே

குறிப்பான தட்டுவற்மம் எட்டேயாகும்
குருவினடி பணிந்தாக்கால் இந்நூல் வாய்க்கும்
அறிவுடைய பிள்ளைகளே இந்தச் செய்தி
ஆர் சொல்வார் நாலும் சாதித்தியந்தானே

நெறியுடையோர் நின்ருக்கால் வாய்க்கும் வாய்க்கும்
நிச்சயமாய் காலமூம் கொண்டுதாலல் பிரிவுடனே நாழிகைதான்
மூன்றுதன்னில்//ஏழைகள் தூள் பிராணன் வரும்.
பார்க்க வேண்டாம் பேயிமக்கள்
கிரமம் விட்டாலுயிரும் போச்சே.

போச்சப்பா கணயோடு குளிகைநெய்யும்
பொருந்தவே கஷாயமொடு பொடிகள் வைத்து
ஆச்சப்பா கைமுறையும் செய்முறையும் சொன்னேன்
ஆன்திலுலருமுறையென்றட்கர்ஞ் செய்தார்
போச்சப்பாயிந்நூலின் பெருமையெல்லாம்
பேராண்ட சித்தர்களும் சொல்லார் சொல்லார்
போச்சைய்யா நாத விந்தை ஆதிபிண்டம்
முறையறிந்தோர்வற்மமாணி முழுதும காணர்.

காணவே முளுஉமதுள்ளழுதுள்ள
கலங்கவே இடிகளடி கொண்டுதானல்
கோணவே விழிமயங்கி ஒளிதான் வீசும்
சோரையுடன் தளர்ச்சையுண்டாம் துட்டர்களாகும்
தோணவேதொகு வற்மத்தருமைதானே
பித்தர்களே சத்தியமாய் பேசக்கேளு
நாணவே உச்சி தனில் குழியோ ரத்தில்
நன்ருன இடிகளடிநாந்தானே.

நாசமாம் புறந்த லையில் செவி நேர்பற்றி
நன்ருன பெரு நரம்பில் காலமொன்றில்
தோஉஷமில் லை சுழியாடி வற்மத்தின் கீழ்
சொல்லுகிறேன் காலமொன்று சூஉமாது
பேசக்கேள் சிரசுவட்டம் ~~அம்மறிமான்த்தாற்றேனைகாற்றேனை~~ அட்டறியான்
காற்றேனே காற்றேனே கண்டறின் மேலுள்ள
கடிதான் காலமது மூன்றும் போக
கையான இதுகது ஒற்றல் ஒடிகாயிவடறிந்த
செய்யாவிட்டால் நூலேத ஊனயும் பாழாய்ப் போச்சே
கருத்துடனே மருந்து செய்தால் கேளு
பேப பேறுள்ளவர்க்கு கிட்டு மின்னால்

பேசுகிறேன் தொடுவர்மம் பேர் சொல்வேனே.

பேரென்ன முதுகுவரியில் புட்டிக்கு மேல்
கபரிடா கொண்டவர்மம் பேசக்கேளு
ஆனைகையடி எல்லின் மேலாய் அருகுப்பற்றி
இடிகள் அடிகள் கொண்டால் ஆறுநாளில்
சின்னுக விளங்க இருமல் தோன்றும்
திருமேனி எண்ணையிலுல் தீரும் கண்டாய்.

கண்டாயே சுளியாடி வர்மத்தின் கீழ்
ன்கைப்புட்டி எல்லின் மேல் கமுக்குளியில் தானே
துண்டாய் இடிகள் கொண்டால் துடிக்கும் தேகம்
சோரமயமாய் இருமையிலே வறட்சைக் கண்டாய்
விண்டது கேள் இடும்பருக்குசொன்னேன் மைந்தா
மேலான எண்ணையிலுல் விட்டுப் போகும்
அண்டர்களும் அறிவார்களோ விண்டதுண்டோ
ஆச்சரிய தொடுவர்மத்தருமைதானே.

தானென்ற புட்டியின் மேல் சுளியின் கீழாய்
தாக்கடா நடுவரியில் இடிகள் கொண்டால்
பின்னப்பா திரிவாரத்துள்ளே மைந்தர்
பேசருது சரநோயும் சுரம் உண்டாகும்
முன்னேதான் முதுகு வரியில் புட்டிப்பற்றி
மூறகமுடன் இடிகள் கொண்டால் முடவனுவான்
என்னைத்தான் இதற்கெல்லாம் என்னைவைக்க
இசம்புகிறேன் பின்னுலே இதற்குமைந்தா.

ஆக்கமுள்ள துடையின் கீழ் கூன் எலும்பின் மேலாய்
இடிகள் கொண்டால் ஆறுநாளில்
வாய்க்குளறி கபம் தொந்தமாகும் சுரம் தோன்றி
மசங்கிடும பின் தலைசுளத்தி வாந்தியுண்டாம்
பார்க்கும் முன்னே நாக்குளறி மாண்டான்
பட்டிதரும கை விடுவார் பாரேன்பார்
பார்க்கும் முன்னே நாக்குளருது இருந்தேயானுல்
மருந்து செய் எவ்வுயிரும் மாளாதென்றே.

மாளாத மாத்திரைதான் கடந்தேதானல்
வனமார்தனை கண்டறி நீ மருந்தியாதே
தளராத தீ துஷ்டருக்க என்று இந்த
சாத்தியமாய் வற்மமாணி சாற்றினேமே
பாளான சொல் ஒன்றும் சொல்லவில்லை
பரீட்சையாய் என்றுச் சொல்லி படித்திட்டேயான்
கோளான எட்டுமுகம் வற்மம் தன்னை
சூர்ந்து பார்தலம் சூழும் சாற்றக்கேள்.

மாரவிலிரு விரலின் மேலாய்
கூன்எலும்பில் கொண்ட வற்மம் மாறக்கேள்
வெள்ளிரல் சோரை வற்றிமதியான ரவி மீறி
அனலாய் மூழ்கி வாறு கொள் அக்கினியாய் சுரமுதோன்றி
மந்தமுடன் கிடக்கொட்டாது
கவலை கேள் இப்படியே திசை எட்டுக்கும்
மைந்தனே வற்ம எட்டுக்கும் வழி சொல்வேனே
இன்றுதான் சொல்லி வைத்த நூல்கள் மெத்த
வீணக போச்சுதந்த வார்த்தையெல்லாம்
கையென்றும் காலென்றும் அறியாமூடர்
கற்றவர்போல் வற்மமெல்லாம் கைக்குள் என்பார்
பொய்சொல்லி வயிறு பிழைக்கு குறவர் கூட்டம்
பொறி அறிந்தேன் என்று சொல்லி பொருள் தாயென்பார்
ஐயையோ கருவ தொன்னூ த்தாறுக்குள்ளே
அடங்கி நின்ற தலம் அறியார் அசடர்தானே.

தானென்கிற தட்டுமுறை தடவு மார்க்கம்
தலங்கண்டு இருந்தமுறை தடவு மார்க்கம்
வானென்ற அடி ஒடிகள் கொண்டால்
வகை வகையாய் கைப்பாகம் அறியவேணும்
கொனென்ற என்குருவை தான் பணிந்து
கூறுவேன் அடக்கத்தில் குறிகள் நாட்டி
ஏனென்ற எட்டு வற்மம் மார்பிலையா
இடங்கள் கண்டு விலாச்சுற்றி எதுவானாலும்

ஆனும் மார்பிலெட்டு வற்மம் கொண்டுதானல்
அடவான விச நரம்பு குளிந்து தாழ்ந்து

மரனேகேள் உடம் பெல்லாம் உளைச்சல் சோம்பல்
மகத்தான மாணநின்ற நிலைகளெல்லாம்
துடிதுடிக்கும் அபான முதல் அன்னமங்கே செல்லாட்டாது
அறிவு பிரிதல் தேகம் எல்லாம் உலர்ந்து போகும்
நாணை சயரோகம் வந்துச் சேரும்
நானூறு நாளையிலே தேகமது

ஏதுவான புட்டிக்கும் இட நடுவில்தானே
ஏகனொரு சங்குத்திரி அங்குண்டைய
பொதுவான சங்குத்திரி கொண்டவர்க்கு
பொங்கமுடன் நீர்பிடிக்கும்போகாது
கெதுவான கால்முடங்கல் உளைச்சல் சோம்பல்
கெளிதமுடன் நிமிர் ரொண்ண வளைவுமாகும்
சதுரான திருமேனி எண்ணை வைத்து
தாக்கடா இந்த வற்மம் தீர்ந்துப்போகும்.

போகுமடா சுருக்கியின் மேல் மூவிரலுக்குள்ளே
பொறி கலங்கி முன்டெலும்பில் வற்மம் கொண்டால்
ஆகுமடா ஆகமெல்லாம் பொறி கலங்கி பேதி தளரும்
அப்பனே குளிர் சுரமும் மயக்கமாகும்
ஏகுமடா அடக்கத்தை தடவி மெள்ள
எழுந்திருந்தால் செந்தெங்கு கஷாயந்தாக்கே
ஆகுமடா சுவராதி எண்ணெய் வாரு
அப்பனே இந்த வற்மம் அடக்கந் தீரும்.

தீரவென்முல் தொப்பிளின் கீழ்
திறமான இருவிரலில் மூத்திரக்காலம்
சேரவென்முல் காலமது கொண்டபேர்க்கு
செனியாது உடல்மயங்கும் மூத்திரம்பாயும்
நீரான நீரெல்லாம் இறைக்கும் மைந்தா
நிறமான தேகமெல்லாம் திமிர் போலாகும்
ஆளான பின்புறத்தில் புட்டிக்குமேலே
அடவான கால் மடக்கி அறிந்து தட்டு

தட்டியேமுதுகுநெஞ்சு தடவித்தார்த்து
சரியான அடக்கமென்ற பச்சிலையை அறிந்து தாக்கே
மூட்டியே கிருசசனமும் அடங்கிப் பின்னே
முறையான நீரொழிவு தீர்ந்து போகும்
கட்டியே லேகை போடா காலத்தின் கீழ்
கருதண்டி லொருவிரலின் மேலேவையே
முறிண்டு வெலித்து வர்மம் வெளியான வர்மமது கொண்டபேர்க்கு.

போக்கென்ன தண்டடியில் நீர் காட்டும்
பேதமே நீர் தரித்து தள்ளி போடும
ஆர்கென்ன வர்மம் ஏலாதி கஷாயம் போட்டு
சொன்ன தாரை சரியாக மந்திரமும் சரயாய் செய்யே
பேர்க்கென்ன இந்த வர்மம் போகும் சொன்னேன்
புண்ணியனே தவருமல் பொருந்திச் செய்யே.

செய்யுவென்றால் வித்து இரண்டும் பதிந்த சாரவில்
அதின் நடுவில் அண்டக்காலம்
மையவென்றால் அதுவாரம் அருகில் கொண்டால்
அகம் உளையும் நீர்தரிக்கும் அரன் விம்மும்
பையவென்றால் மலங்கழியும் இரத்தம் காணும்
இருபுறமும் நயனமது தள்ளிக்காணும்
துய்ய இந்த வர்மம் கொண்டப்பேர்க்கு
சுக்காலே கஷாயத்தை சுக்காய்தாக்கு

தாக்கடா தூக்கிவிட்டு உதும்போது
சரியாக இந்த வர்மம் இளகும் சொன்னேன்
நாக்கடாசபைதனிலே நீட்டிப்பேசும்
நலமான கோவையெல்லாம் கைம்பான
போக்கடா மூலி சொன்னேன் வார்த்தை
புதல்வரை பிடரி தன்னில் பெரும் நரம்பின் மையமாகும்.

ஆகுமிந்த சு ளியாடி கொண்டப் பேர்க்கு
அடவான பனி சுரங்கள் பைத்திய ரோகம்

போகுமிந்த சுவராதி என்னை வார்த்து
புகழ்பெறவே கிரிஷாத்து கஷாயம் செய்ய
ஏகுமிந்த சுளியாடி தீர்ந்துப்போகும்
ஏப்பமிட்டால் இந்த வர்மம் இருக்குதென்று
வாகுபெறும் வருமாணி குளிகை தானும்
வளம்பெறவே கஷாயத்தில் உரைத்து தாக்கே.

மாட்டியே உச்சிதன்னில் அருகுப்பற்றி
மகத்தான புட்டெல்லுவர்மம் இரண்டேயாகும்
தாட்டிகமாய் இடிகள் அடிகொண்டுதென்று
சாதகமாய் தலை இடிகள் மூளைரோகம்
வகையான உள்ளுக்கு கெந்த நாற்றம்
புட்டியங்கள் இல்லையையா
புகழ்பெறவேசுக்கு என்னை நாசிக்கு ஊது

ஊதியே இப்படி நீ மூன்று நாள் செய்
உன்னையடா வல்லாரை அரைத்துத்தாக்கே
சாத்திரத்தில் சொன்னதொன்றும் விட்டிடாதே
தகமைபெறும் உள்ளுவர்மம் மூன்றுண்டாச்சே
மாத்திரைத்தான் செவிதனிலே குருந்துக்குற்றி
மகத்தான வர்மமது கொண்டபேர்க்கு
நேத்திரமாய் சன்னி வரும் கபமும் தோன்றும்
நிர்ணயமாய் திங்களில் மரணமாகும்.

மரமென்றும் தீத்தையிலம் செவியில் ஊற்றி
மகத்தான உள்கொடுத்து மேலும் பூசு
நாணமென்றும் உள்ளத்தில் காரிரல் வர்மம்
நலம் பெரிய வெள்ளீரல் சமீபம்தானே
விரணமென்றும் விஷ நரம்பும் தளர்ந்து மெத்த
வில்லுப்போல் நிமிர்ந்து இருக்கும் விறைக்கும் மேனி
அரமணையில் உயிர்பிரிய காலமாகும்
அப்பனே அசாத்திய மென்றுரைக்கலாமே.

ஆமென்றஅலவுதான் முடிந்த மூட்டில்
அலவாடி என்றதற்கு பேர்தாமே

நாமென்ற வர்மமது கொண்டுதானல்
நாளொன்றில் வாய்கோணும் நெட்டி வீங்கும்
ஓமென்றமுக்கூட்டு இட்டு தேய்த்து
வளமான நாசிக்கு நசியம் செய்யே

செய்யப்பா பாறைக் ஒற்றல் பொட்டு
திறமான கழுத்தடியில் காறைக்குள்ளே
நெய்யப்பா விலங்கு வற்மம் அதற்கு பேராம்
நலமான குத்திடிகள் நசுங்கல் கொண்டால்
பைய்யப்பா உசரமாட்டதென்று
பாங்கான மாரபோட்டால் படுபாலும்
ஆரப்பா குறுங்கொண்டை குளிர்த்தி கொள்ளும்
அழகான திருமேனி அதுவால் தீரும்
திருமடா காறையத்திருமுனையில்தானே
திறமான புசவற்மம் அதற்குப்பேராம்
ஆரடா கையதிலே வீக்கமுண்டாம்
நேருமிடா கையதினியே உசரொட்டாது
நிண்ணயமாய நித்திரையும் காணுதையா
சேருமிடா திருமேனி எண்ணை விட்டு
இயல்பாக மூன்று நாள் தடவத்தீரும்

தடவுகின்ற முண்டையிலே மத்தியமதில்
தயவான நடுவிரல் சுருக்கிக் கொண்டு
மடவராய் முக்கூட்டு கொடுத்து மைந்தா
மத்தியமாம் தடவி மெள்ள நெட்டிவாங்கே
வடிவுடைய குருவென்று சொன்ன வார்த்தை
~~மறமைச்சா~~ மறப்பேனு ஒருநாளும் வார்த்தை வாங்கே

வாங்கி அந்த கரமதிலே முட்டு வற்மம்
மகத்தான அடி இடிகள் கொண்டுதானல்
தயங்கி அந்த கரமதிலே கொச்சுமாகி
தயவாக விவிரு விருத்து நொந்து வீங்கும்
மாங்கிஊடத்தில் ரெத்த மயம் மாறலாகும்
குளிர்மையடா வல்லாரை பிழிந்து தேய்த்து
நீங்குமடா தடவி மெள்ளி நெட்டி வாங்கி
நிண்ணயமாய் உள்ளுக்கு கொடுத்திடாயே.

கொடுத்திடுவாய் கோச்சல் பிடிவிஞ்டுப் போகும்
குணமான முட்டிடையில் மொழியின் வர்மம்
அடித்திடவே மொழியின் வர்மம் கொண்டுதானால்
அடவாக அசரதிலே வீக்கமாகி
கொடுத்திடவே வர்மத்தில் விரணமாகி
தொகையென்ன முண்டெலும்பு முறிந்து தள்ளும்
மடித்திடுவான் பிணியாளி பலரும் மெய்க்க
பரமகுரு கிருபையிலே வீக்கம் பாரு

பாரினிலே பழம் துணியில் வளையம் சுற்றி
பத்திரமாய் முறிவதிலே எலும்பை தள்ளி
ஆரெனவே வளையமது உள்ளே தாக்கு
அடவான வல்லாரைபிழிந்து தாக்கு
சேர்ரெனவே முறிவெண்ணெமெத்த வாங்கி
சேலான கையிலே நெய்யைப்போட
நீரான நீரெல்லாம் வற்றிப்போகும்
நிசமான புண்பொழிந்து வளமும் வீழும்.

வீழுமிந்த முன்கையில் மையம் பற்றி
விசமான மணிபந்தம் வர்மமாகும்
தாமுமிந்த மணி நடுவே முறிவு வந்ததானால்
தயவோடு எலும்பு முறிந்து வாங்கும்
வாழுமிந்த வர்மத்தில் முறிவு கொண்டால்
வளமேயன்ன பன்னிரண்டில் மரணமாகும்
நாளிதுவே களிந்து மெள்ள தீர் நின்றுதானால்
நன்மையில்லா மூடில்லா தாளிச் சாற்றில்
ஆளுமிந்த உளுந்து விதை அரைத்து மைந்தா
அடவானது ஙிதனிலே ஊற்றிச்சுற்று.

சுற்றுகின்ற துணியதிலே நாலு சீளி வைத்து
அதின் மேலே துணியைச் சுற்றி
முறுகின்ற முறிவதிலே முறி வெண்ணெதாரை கோரு
முடின வல்லாரை தாக்கிடுவாயே
வருகின்ற வர்மமது தீரும் சொன்னேன்
பரமகுருகிருபையினால் தீர்ந்தால் ஆச்சு

வெறிவரும் எட்டு விரல் முன்னே தள்ளி
வெகுவான மணிக்கட்டு உள்ளேதானே.

மணியென்றால் வெள்ளைதனின் அருகுப்பற்றி
மதிப்பறிய வளைவதிலே துதிக்கை வர்மம்
கனிரென்று குளசெல்போலே கொண்டுதானல்
கணம் பிச்சி மணிநெட்டு விறைக்கும் தேகம்
அணிலெனவே வளமாய் நீரும் கட்டும்
அகமெல்லாம் தளர்ச்சையினல் விறைக்கும் மேனி
தனிலெனவே வல்லாரைகியாழன் தாக்கி மைந்தா
தறவாக நெட்டியதைவாங்கிவிடு தீர்ந்துபோகும்.

போகுமடா வெள்ளையது உள்ளங்கையில்
பொருந்தி நின்ற சொர்ண தெச்சணயின்காலம்
ஆகுமடா இந்த வர்மம் கொண்ட பேருக்கு
அடவான சீதம் வரும் சன்னி தொன்றும்
போகுமடா உயிரழிய நேரம் கொள்ளும்
புண்ணியனே கபம் தோன்றும் மரணமாகும்
ஏகுமடா மூன்றரை நாள் கழிந்து தனல்
எழுந்திருப்பான் இந்த வர்மம் எல்லாரும் மெய்க்க

மெய்ப்பதான இளநீரில் கஷாயம் செய்து
வேண்டியகொடுத்திடுவாய் வர்மம் தீரும்
கப்பமென்னகையிடையில் கவளிக்காலம்
கன்மமான மூன்று வர்மம் அதுவேயாச்சி/இப்படியேபெருவிரலிடையில்
இருக்கு வன்மம்
பேதகம் இல்லையடா குணமொன்றாகும்
முப்புரவி உள்ளவர்க்கு கிட்டும் இந்நூல்
மூடர்போல் திரிவார்க்கு கிட்டாதன்றே.

என்றெனவே இந்த வர்மம் கொண்ட பேர்க்கு
இருக்கையிலே ஓராண்டு கழிந்தப்பின்பு
நன்றெனவே கை வெள்ளைக்குள்ளே எல்லாம்
நிலமான விப்புருதி வெடிப்புமாகும்
குன்றாமல் தீர்க்க அவன் சொன்னபோது
குறையாமல் கருஞ்சீரகத்தை வாங்கி

நன்றான சீரகத்தை பொடித்த மைந்தா
மயமான சிவன் வேம்புதையிலம் செய்து.

சேர்த்துடனே மரிண்டலம் நீ கொண்டாயானல்
தீர்ந்து போகும் இந்த வற்மம் திடம் கண்டீரே
பார்த்துமே இருக்கையிலே சொன்னேன் மைந்தா
கருவேலின் மறுபுறத்தில் இது போலாமே
நேர்த்தியாம் துடையிடையில் பதைக்க வற்மம்
நேரான வற்மமது துண்டு வற்மம்
அடமான துண்டிடையில் நொடியின் வற்மம்
ரகுமடா முதுகு வரியில் ஆமையைப் போலே
எழிலுருகின்ற மூன்று வற்மம் குணமொன்றுகும்
போகும்டா இந்த வற்மம் எழிலுருகின்ற
மூவிரலில் பக்க வற்மம் நன்றான பெருவிரலில்
நாயுத்த பேயின் வற்மம்.

நலமான அசகுருதி கண்ணு வற்மம் குறவருமே இந்த வற்மம் ஆறும் கொண்டால்
கூடுவிட்டு பிரயும் வரை முடவனுகும்
நன்றான இதற்கெல்லாம் மருந்தேயில் ஊல
மகத்தான விஉஷமூடித்தையிலம் கொஞ்சம்
போட்டவுடன் தீருமடா தீரும் தீரும்

தீருமடா முன்காலில் வற்மம் கேளு
திறமான மையமதில் குதிரை முகம்தான்
அடவான அத்தியா ஊலவீஉஷமே புக்கி
நேருமடா அத்தலத்தில் விரணமாகி
நிண்ணயமாம் புண் புரவும் மாருதென்றே
பாருமடா பரிராபரத்தின் கிருபையாலே
பார்தனிலே விஉஷ பச்சை எண்ணையினல் தீரும் கண்டாய்

கொல்லமது செய்கின்ற கருத்தைக் கேளு
கடினமடா நம்பிழுக்கும் குன்னிப்போகும்
உலாவுகின்ற நோயாளியை இருத்திக் கொண்டு
உடனே ரெண்டுகையதிலே உரல்வாங்கி
நாலுநாள் நாளுக்கு எண்ணெய் போட்டு
நன்றான நரம்புகளில் தடவச் சொல்லே

சொன்னேன் கான இந்த வற்மம் சுகமாய் போகும்

சூட்சமடா வெள்ளீயதில் அடக்கலம்

மன்னுய் அடங்கலத்திக் கொண்டுதானல் மசங்கிடும்/மரணம் வந்தேத்தீரும்

நிண்யமாய் இந்த வற்மம் எல்லாம் தீருதற்கு

அடக்கமாகும் மானிடற்கு மெய்தீண்டாக்கலம்

சொல்வேன் மகத்தான வெற்றியென்ற பச்சிலையும் அறியச் சொன்னேன்

வெற்றி என்ற பச்சிலைதான் அறியாத

பறையரெல்லாம் படைக்காக கச்சைக்கட்டி

வரவும் செய்வார் இச்சை பெறும் ஆசானன் பெரும்பெற்று

இருதயத்தின் எனைப்போல இல்லையென்று

அச்சுதனும் அரனுமையும் அறியாமூடர்

அகத்தியனர் அறிந்துரைத்த வெற்றி நூலே

ஆரறிவார் உலகத்தில் அருமைதானே.

தானை வெற்றி என்ற பச்சிலையைத்தாக்கக் கேளு

சார்ந்த தண்ணீர் தனில்நீரும்

வானை வாய்ச்சிசைத்து நூறும் பத்துவகை தெரு சிப்பி

வகையான இருவேலி ராமிச்சி தேக்கு

எல்லமணி குந்திரிக்கம் சனி நாயகம்

இயல்பான நாகப்பூ சிருட்சம் தானே.

தானே கேள் கண்டி வெண்ணை பழுக்காமோதம்

தயவான அத்தி நககம் வேம்பாடப்பட்டை

பானே நல்காமோடு கிருமிச்சத்து

மெய்யான கருஞ்சீரகம் சோலம் கோலம்

தேனுய் அன் திரிசாதி ஏலம் குப்பை சிறந்த

கடல் நுரையும் சிறு நாகம் தான்

கொள் மருநதெல்லாம் இடித்து நன்றுய் //நலம் பெறவே வகைக்குவகை

கழஞ்சி ரெண்டே.

நன்றான ஆவி நெய் ரவிமதியும் புங்கெண்ணை

செந்நெய்யும் குன்றான விளக்கெண்ணை

அஞ்சும் கூட்டி குணமான வகை வகைக்குபடி

தானென்று நன்றான ஆவின்பால் கோவின் பாலும்

பதுமைபத்து மெய்யடா ஆடலோடம் செஞ்சட்டி

வில்லைப் பூவும் புங்கக மாதளைபு அஞ்சும் கூட்டே

கூட்டியே வகை வகைக்கு களஞ்சி ஒன்றாக
குங்குமம் கோரோஜனைகளஞ்சி ரண்டாம்
வாட்டியே இது வெல்லாம் இடித்து தூளாய்
கையான குளி அம்மி தனில் போட்டு
ஆட்டியே கொம்பரக்கு

கண்டாயோ அங்குலத்தின் நாலின் கீழே
கடத்தடா கொம்பேறி வர்மமாகும்
விண்டாயோ விசர்த்து மெல்ல விழும் மேலேறும்
வீசியதோர் சன்னி வரும் விஷமது ஆகும்
மண்டலத்தில் யுவர் அறிவார் இந்தச் செய்கை எல்லாம்
மகத்தான தீத்தைலம் அதுவால் தீரும்
நன்றான கஞ்சியோடு கஷாயம் சொல்வேன்.

சொல்லவே மூவிரலின் கீழேதானே முன் நரம்பின் முடிச்சிமையம்
ஐயப்பா அதின் அருகில் கொனச் சன்னி அது
திறமான செய் குணத்தை தீரும் கேளே
நையப்பா சன்னி வரும் முகத்தைக் கோணும்
வேணுமடா இதன் விபரம் நன்றாய் சொன்னேன்
வெத்திஎன்ற மூலிதாக்கே நல்லூயிராய் இருந்துதானால்
நம்பெற தீத்தைலம் சேர்த்து வாயே.

வல்லுயிர் ஆவிட்டால் மறவான் ரண்டு விடை
ரண்டு கழிந்து தென்றால் மரித்திடாதே

மரிப்பது மூவிரல் பாத சக்கரம் மதியான வர்மமது
கொண்டபேர்க்கு இருப்பதற்கு கண்குளிரும்
இருமல் தோன்றும் இசையாத வர்மமது வேதோன்றும் இருக்கவொட்டாது
இசைந்தொரு நாள் பிரிந்தொரு நாள் கழிந்ததானால்
தாரமதை தெரிந்த பச்சிலையை தாக்கச் செய்யே
வளம் பெரிய வர்மமது தீர்ந்து போகும்
வசவதற்கு வசவெண்ணை பூச செய்யே.

செய்யவே நாங்கு வரிதான் நாலின் கீழே
செயலான பெருவிரல் இடையில்தானே

பையவே திட்ட வர்மம் அதற்குபேராம்
பாங்காக அதினிடையில் குத்திணக்கால்
பாங்காக ரெத்தம் வராதிருந்துக் கொள்ளும்
உய்யவே ஊச்சஞ் காணும்
உசந்த திருமேனி எண்ணெய் முழுகச் சொல்லே
நயம் பெறவே இந்த வர்மம் தீர்ந்துப் போகும்
நலமான பெருங்கணில் பூமிக்காலம்

கோலமது செய்கின்ற கருத்தைக் கேளு
கடினமடா நரம்பிதிலுக்கும் குன்னிப்போகும்
உலாவுகின்ற நோயாளியையிருத்திக் கொண்டு
உடனே இரண்டு கையதினே உரலை வாங்கி
நாவு தான் நாளுக்கு எண்ணெய் போட்டு
நன்றான நரம்புகளில் தடவச் சொல்லே

சொன்னேன் காண் இந்த வர்மம் சுகமாய் போகும்
சூட்சமடா வெள்ளையதில் அடக்ககாலம்
மன்னவாய் அடங்கலத்திகொண்டு தானல்
மசங்கிடும் பின் மரணமது வந்தே தீரும்
நின்னயமாய் இந்த வர்மம் தாயாம் சொன்னேன்
நலம் பெறவே வர்மமெல்லாம் தீருதற்கு அடக்கமாகும்
மானிடர்க்கு மெய்தீண்டாகாலம் சொல்வேன்
மகத்தான வெற்றி என்ற பச்சிலையும் அறிய சொன்னேன்.

வெற்றி என்ற பச்சிலைதான் அறியாத
பறையர் எல்லாம் படைக்கென்று கச்சைக் கட்டிவரவும் செய்வார்
இச்சை பெறும் ஆசானும் பேரும் பெற்று இருதயத்தின் எனைப் போல இல்லையென்று
அச்சுதனும் அரனுமையும் அறியாமூடர்
அகத்திய னர் அறிந்துணர்ந்த வெற்றிநூலை
ஆர் அறிவார் உலகத்தில் அருமைதானே:

தானன வெற்றி என்ற பச்சிலையை தாக்கருகு கேளு
சார்ந்த தண்ணீர்தனில் நிற்கும்
வானன வாய்யிசைத்து நூறும் பத்து
வகை தெரிந்தால் மேல் வாசம் வீசும் வல்லாரை என்பார்
கோனன சித்தருட கொடியை மூலி கோகருணம்

நாளுனகாலமதுக்கு எல்லாமாகும்
நவலோகம் உறுப்புகளில் வசவுக்காகும்

ஆகுமிந்த மெய்தீண்டாக்காலம் அடவான சுவடுமுறை அறிவதேது
போகுமிந்த சுவடதிலே பெருக்கமேது
போகருட குன்று தாங்கி மூலி ஏது
ஏதுனக்கு மானிடரே எவ்வுலகும்
கொழிஞ்சி போல் எங்குமுண்டு சாதுனக்குள்தரிவ
தற்குகருத்தைக்கேளு
கனத்ததொரு கல்லோ தெறித்துப் போகும்
அதன் வேர் பிடுங்க முறைமையை கேளு
அடவான மூலியுடன் மூட்டில் சென்று ஓதுனக்கு
அனுமாரே வாவாஎன்று ஓம் ஜலஜலவென்று
உத்தமனே ஒருநூறு ஓதி அந்த வேரை வாங்கே

வாங்கியே மணியாக்கி வாயில் கொண்டு
லாகான படையது போல் வந்திட்டாலும்
ஏங்கியேதான் எவ்வளவு ஜனங்கள் மாளும்
ஏகாந்த மூலி மெய் தீண்டாக் காலமாகும்
பின்னந்தம் முன்னந்தம் மத்தியமாக
ஒன்பது சுவடு வைத்து
நீங்கியே முகம் நோக்கி தூண்டும் போது
நிசமாக மயங்கிடும் பின் மரணமாவார்.

மரணமென்ற பிடிச்சிரமம் இதுக்கொவ்வாது
நாணமென்ற தொடு வற்மம் அடிக்ககாலம்
கருத்தாக வேலி எனும் பருத்தித்தானே
தானமது இனமூலி இரண்டும் கொண்டு
தற்மமாய் வற்மத்தில் தாக்கிப் போடே

தாக்குகின்ற தண்டெலும்பு துண்டு நாலு
தயவான காலெலும்பு துண்டு நாலு
அருகின்ற உறுப்பு சத்தி முப்பத்திரண்டு
அடவான குறுக்கெலும்பு அறுபத்திரண்டு
தாக்குகின்ற வாரி எலும்பு பதினொன்றாகும்
தயவான சிரசதிலே துண்டு மூன்று

தாக்கினதோர் நாக்கின் மேல் நரம்படியில் துள்
டுநாலு நலமான கழுத்திலே கண்டம் ஆறு
கண்டமென்ற கொக்கித்தன்னில் உறுப்பு நூறு
கனத்ததொரு கேசாதி பாதமெல்லாம் நரம்பு எழுபத்திராயிரத்தான்
துண்டமென்ற படுவற்மம் பன்னிரண்டு
தொகுப்பறவே தொடு வற்மம் தொன்நூற்றுூறும்
அண்டமென்ற மெய்தீண்டாக்காலம் அடைக்ககாலம்
ஆதரவாய் இதுவெல்லாம்சொன்னேன் மக்கள்
மண்டலத்தில் யவரறிவார் இந்தச் செய்தி
மகத்தான வற்மமுதல் என்பது நரம்படவாய் சொன்னேன்

சொன்னேன் எடா கஞ்சி முதல் கியாழன் தானும்
சுகமான தலமொடு முக்கூட்டு எண் ஊதாரம்
மன்னனடாவுத்தலோடு பொட்டியும் பூச்சு
மகத்தான ஓடி முறிவும் வசயல் கெட்டல்
நன்மையாய் பைத்தியமாய் நடத்தல் செய்கை
நலமான கைமுறையும் செய்முறையும் சொன்னேன்
பின்னியதோர் நரம்பு பிடியும் சொல்வேன்
பேதகமாய் போகமாமல் தீர்க்கச் சொல்வேன் கேளாய்.

கேளப்பாதிரிகடுகு திப்பிலி மூலம்,
கெடியான உளிஞ்ஞையோடு சித்தாமுட்டி
நாளப்பா பளம்துணியில் கிளியாக கட்டி
நலமான அரிசிஉரி அதின் மேல் போட்டு
வாளப்பா கஞ்சியதாய் பத்து நேரம்
வளமாக குடித்திடுவாய் வற்மம் போமே
பாரப்பா பாராமல் அருந்தும் போது
பளம் சுரங்கள் அஸ்திசுரம் பறந்து போமே.

போடப்பா திரிகடுகு அதிமதுரம் திர்ப்பிலி மூலம்.
பொருந்தநல்சீரகமும் சிரஉள்ளி
வாமப்பா குன்றிவேர் அறுகன்வேரும்
மகத்தான உளிஞ்ஞையோடு கடலாடிதாறும்
நாமப்பா இதுவெல்லாம் சதைத்து வாங்கி
நலமான அரிசியிட்டு கஞ்சியாக
தாமப்பா மருந்தெல்லாம் கிளியாக்கட்டி
நன்மையுள்ள கஞ்சி வைத்து குடிக்கும்போது

புளி உப்பு நீங்கல் செய்து பத்தியுடன்
பத்து நாள் குடிப்பாயானால்
எதுவான இளையோடு இருமல் தோஷம்
எங்களைப்பு பிடிவலியும் இருமல் தீரும்
எதுவான காலமெல்லாம் நிகழ்ந்து போகும்
என்குருவும் சொன்ன மொழியான் கேள்பெனே
சதுவான காலமெல்லாம் தீர்ந்து போகும்
சத்தியமாய் இந்த மொழி சாற்றினேனே.

சாற்றினேம் திரிகடுகு மதுரம் ஏலம்
தீய்வான வெந்தயமும் ஓமம் பூரம்
ஆறினேம் சிங்கி கொட்டம் அழகான மேதையொடு புழுகும் சேரு
சாரினேம் தென்னம்பூ முருங்கை பூமுருக்கம்பூவும்
சேரு, வளமான இசங்குநூ தளையின் பூவும்
பூனுக்கத்துடாதீபத்தி பதுமை பத்து
மெய்யடா ஆடலோட்டம் செஞ்சட்டி வில் வலபூவும்
ழி பாங்காக மாதளம்பூ அஞ்சும் கூட்டே.

கூட்டியே வகை வகைக்கு களஞ்சி ஒன்றுக
குங்குமம் கோரோசனை களஞ்சி ரண்டாம்
வாட்டியே இதுவெல்லாம் இடித்து தூளாய்
வகையான குழி அம்மி தனி போட்டு
ஆட்டியே கொம்பரக்கு சவைத்த நீராடல்
அழகான ஒரு சாமம் அரைத்திடுவாயே
கூட்டியே ஒரு சாமம் பசுவின் பால்
சுகமான கொன்ஞவரையின் சாற்றுலாட்டி

ஆட்டிடவே குளிகையது வரையாக
அழகான கியாழத்தில் உரைத்துதாக்கே
வாடுமெ வற்மம் எல்லாம் மாண்டுபோகும்
வகையான இளையோடு மந்தாரகாசம்
சூட்டிடும அஸ்திசுரம் சுவாசக்காசம்
சுகமான உள்ளுவற்மம் இடு ரோகம்
தாட்டிகமே இக்குளிகை தாக்கும்போது
தயவான வற்மமாணி குளிகையாமே.

ஆமேநாலமரத்தின் பிஞ்சு அழகான நாவுரியும் தாள்ளி வித்து

காமே நவகைவகைக்கு களஞ்சஞ்சாக
நன்மையுள்ள பொரிகாரம் லிங்கம் புரம்
போமே நீ மதுரமொடு திரிஜாதி தீர்ப்பிலி
புங்கமுடன் வகை வகைக்கு களங்சீ அரையாக வாங்கே
வாமே நீ இடித்து நன்றாய் மைந்தனே ஒள் அம்மி சும்பி தனில் போட்டு

போடப்பா கதலியுடமாணச் சாற்றால்
அடவான ஒரு சாமம் வெற்றிலை சாற்றால்
ஆட்டப்பா விமபோலே அரைத்து
நலமான குளிகையது சிறுபயறதாமே
நீடப்பா இக்குளிகை கொடுக்கும்போது
நிசமான சீதவலி ஜன்னிப்போகும்
போகவே கஷாயமென்று சொல்லக்கேளு
பொரிந்திடவே சுண்டைவேர் ஆடாதோண்ட
ஆகவே பணப்புல்லு தாராவேரு
அடவான செஞ்சட்டி இசங்கன் வேரும்
ஏகவே தூதளை கண்டம் கத்ரி
எடுத்தொரு ஓர் இலையும் மூவிலையுமாக
வாகுபெற இடித்து சேர்த்து
மைந்தனே வகையான குறுணிதன்னில் போட்டு
போடப்பா அதிமதுரம் பலம்தான் வாங்கு
புத்தியுடன் அதில் பாதி சுக்கும் சேரு
ஆரடா கொம்பரக்கு பலம்தான் ரண்டு
அடவாக இதுவெல்லாம் சதைத்துச் சேரு

சேரடா சியாழமது அழலைமுட்டி
செத்தைபொறுபடுபாதி ஆகும்போது
பாரடாசியாழமதில் பாதி வாங்கி
மைந்தனே மறுசட்டி வைத்துக் கொண்டு

கொண்டிடுவாய் கோழிரெத்தம் விட்டு மைந்தா
குணமான திர்ப்பிலி குணமாய் சேரே
இருவேளை அருந்திடவே ஒருவைப்பதானால் நீ
ரவிமதியால் பின் உள்ள கஷாயத்தான்
இது போலாகும் - அண்டமெல்லாம்விடிந்தாப் போல் தீரும் நோய்தான்
அடவான படுவர்மம் அடக்கம் தீரும்

மண்டலத்தில் யவர் அறிவார் இந்த யோகம்
மாண்டிடுமே இளையோடு சயரோகம்
மதியான திசமூலாதி கஷாயத்தாலே

ஆலையென்ற திரிகடுகு அதிமதரம் தேவதாரம்
அழகான முந்திரிகை கொம்பரக்கு சீரகம்தான்
வாலையே கரிசாத்து கொத்தமல்லி வகையான இருள்ளி
திர்பிலி மூலம் சேர் என்ற வகை வகைக்கு களஞ்சி மூன்று
சென்றதொரு குறுந்தட்டி கொடுப்பை மூலம்
பாலென்ற பணப்போடு வல்லாரை தானும்
பண்டு பெற இசங்கு தூதளை கண்டங்கத்திரி

தரியான புடுதலையும் ஆடார்தே தோனட
தீங்குவரா பரம மருந்து பாலம் தானென்று
வகையான செந்தெங்கு இளநீர் வெள்ளம்
வகை வகைக்கு படியது வே பத்தாகும்
பரிவான மருந்தெல்லாம் சதைத்துவாங்கி
பத்திரமாய் வெள்ளத்தில் கஷாயம் செய்யே
சரியாக முன்னாழி ஆகும்போது
சாற்றினேன் ஆறுநாள் பன்னிரண்டு நேரம்
தயவாக இம்மருந்தை அருந்திப்பாரே

பாரப்பா சயம்மாறும் சயங்கள் மாறும்
நேரப்பா சுமைமாறும் புளிப்புக் காந்தல்
நெஞ்சுண்க்கம் தீருமிப்பா நிசமாய் சொன்னேன்
பாரப்பா வற்மவகை எல்லாம் தீரும்
வகை தொகையாய் குருபாதம் வணங்கவேணும்
மெய்யப்பா செய்குருவின் பாதம் புத்தியாய் நடத்திநீ பொறுமை சொல்லே

சொல்லவே திரிகடுகு மலையோடு ஆறும்
சொலப் பெரிய மதரமொடு தேவதாரம்
நல்லதொரு அரத்தையொடு மாஞ்சி கொட்டம்
நாமுசப்புல் அமுக்கிரா சங்கம் ரண்டு
வல்ல புகழ் கிழமுத்து சிப்பி வகையான இருவேலி
ராமிச்சி தேக்கு
எல்லமணி குந்திரிக்கம் சனி நாயகம்

இயல்பான நாகப்பூ விருட்சம்தானே

தானே கேள் கண்டி வெண்ணை பழுக்கா மோதம்
தயவான அதிநாகம் வேம்பாடப்பட்டை
பானே நல்இாயமொடு கிருமி சத்து
நெய்யான திரிசாதி ஏலம் குப்பை
சிறந்த கடல் நுரையும் சிறு நாகம்தான்
கொள் மருந்தெல்லாம் இடித்து நன்றாய்
நல்ம்பெறவே துகை வகைக்கு களஞ்சிரண்டே.

நன்றான ஆவின் நெய் ரவிமதியும் புங்கெண்ணை செந்நே நெய்யும்
குன்றான விளக்கெண்ணை அஞ்சும் கூட்டி
குணமாக வகை வகைக்கு பலம் தானின்று
நன்றான ஆவின் பால் கோவின் பாலும்
நலமான மேதிப்பால் தேசிப்பாலும்
ஒன்றான முலைப்பால் தானும் வாங்கி
ஓகோ என்ன சொல்வேன் அசுவகந்தி
உகமையிலே சேர்ந்ததெல்லாம் இப்போது
பற்ந்துப் போகும்
இதுவான சம்பளத்தின் சாறும் நிம்பை சாறும்
என்மகனே எட்டிச்சார் மட்டிச்சாறும்
அதுவான பெப்பாறி பழச்சாறும் ஆக ஒருபடி
ஒன்றாக் எடுத்துச் சேரே
இதுவான சந்தனமும் வேங்கை காதல்
இயல்பான கருங்காலி பொன்னுவரைப்பட்டைதாறும்
மயிலான அத்தி இத்தி ஆல்அரசின் பட்டை
மகத்தான குறுந்தட்டி வகை வகைக்கு பலம்பத்தாக
ஆயிருனாழி நீர் கஷாயம் போட்டு
அஞ்ஞளியாக வற்றக்கண்டு
வகையிந்த பெரிசான உருளிதனில்
வகையான மருந்து முதல் எண்ணை பாலும்
பொக இந்த கஷாயமது கூடி சேர்த்து
பொங்கமுடன் எருக்கிலையும் கொச்சிமனி
தங்குபெற வல்லாரை கொடுப்பை வெற்றி
தயவாக தைதோணி சங்கு குப்பி

சங்கென்ற வகைவகைக்கு படிதான் பாதி

இதுவெல்லாம் பொங்கியே போகாமல் தான்
அழல் எரித்து தீமூட்டி பொருந்தியே மெழுகு பதமாக
வாங்கி தங்கியதோர் சட்டமுடன் வெட்டி வேரும்
தயவான புழுப்பாதி மச்சத்தாலே எங்குமொரு
நிலையாக ஆத்தாளுக்கு கணேசனுக்கு என்
ணெயதை வடிகட்டி பூச செய்யே

செய்யவே அந்தி சந்தி பத்து நேரம்
செயலான காசிடைதான் கொள்ளவேணும்
பெய்யவே தேகமெல்லாம் எட்டு நேரம்
செயலாக திருமி வெந்நீரில் மெழுக சொல்லே
நைய்யவே இத்தையிலம் தேய்க்கும்போது
நலமான படுவற்மம் யன்னிரண்டும்
உய்யவே தொடுவற்மம் தொண்ணூற்றும்
உசந்ததொரு உள்ருவற்மம் எல்லாம் தீரும்
ஐயய்யோ என்ன சொல்வேன் அரகரா சிலம்பன்தான் அறி
ந்துக் கொள்ளே

கொள்ளப்பா வாத பித்த சிலேற்பனம் தாங்கள்
கெடியான சூனியங்கள் கைவிஷங்கள்
பாளப்பா பேய்பூத பிசாசி நாலும் பல நரம்பு தெற்றலுடன்
பரிசிநாலும்
தாளப்பா பைத்தியங்கள் பலதுக்கெல்லாம்
நாதன் அருளால் உரைத்தேன் தைலம்தானே
நாளப்பா வைத்தருந்த சிரசோடு எங்கும்
வளமாக பூசிடு நீ பத்து நேரம்

குறுந்தட்டி என்ணெய்.

Compared and Corrected.

திருமென்ற குறுந்தட்டி குவளம்தான்
நிசமான சங்கு குப்பிய எட்டி வேரும்
வாரமென்ற வகை வகைக்கு பலம் பத்தாக
வளமான மருந்தெல்லாம் சதைத்து வாங்கி
ஆமென்ற ஜூ ணி நீரில் கஷாயம் செய்து
படவாக நாழியதாய் ஆக்கி கொண்டு
காசமென்ன வல்லாரை சாறு நாழி
கருத்தாகநல்லெண்ணெய் படிதான் சேரு
சேரவே சிரகமும் பலம் தானென்று

சித்திரமாம் மகா மேத களங்சி சேரே

வாரே நீ காய்ச்சிநன்ருய் மெழுகாய் வாங்கி

வளமாக மேலிட்டுதடவி வாங்கி

சீராக நீதேய்த்து நன்மய் முழ்கு

சித்திரமாய் ஓடி முடங்கள் தேற்றல் தீரும்

நீரான விஉூ நரம்பு குற்றிதீரும்

நிசமாக கோசகலுடன் கொமுத்தும் தீரும்.

தாமன்ரக்க ஊ குணம்.

அத்தியைப் பற்றிக்காயும் அங்கம் தாமரை முள்ளதாகும்

சிறியே நயனத்தில் தன்னில் சிவந்து நீர் கலந்து நிற்கும்

முத்திய கமலத்தண்டின் முள்ளென பற்றிக் கொள்ளும்

எத்திசை ஒளியும் குன்றும் இசம்பு வேன்சிகிற்சை தானே.

தானே பிள்ளை பிணி தீர சாற்றுவேன் நெய்தானென்று

கோனே கறுத்த பிடைக்கோழிகொன்றே ரெக்கூம் களையாமல்

ஏனே நசுவல் களைந்து நன்ருய் இடித்துப்பின்பும் மருந்துரைப்பேன்

நானே சித்தாமுட்டியின் வேர் நன்றிவேலி வல்லாரை.

ஆரையொடு காரை பிரமியுடன் அடவாம் நாவல் பட்டை உள்ளி

நேரேபொடுதலை துளசியோடு நினைவாய் பத்து புஷ்பமுமாம்

வாரே வகைக்குப்பலம் ரண்டாய் வார்த்திடுதோயம் இருகுறுணி

சேரேவற்றி எட்டொன்ருய் சேர்க்கும் பசுவின் நெய்நாழி

நெய்யே நாழிதான் கலந்து நேரே அரிவகை ஆறுடனே

பொய்யே கொட்டத் திரிபலையும் பொருந்தும் சீரம் ஒரு மூன்றும்

அயயே திரிகடுகு குரோசனி அடவாம் சந்தம் அதரண்டும்

வையே மதுரம் ஏலமுடன் வாத்திரி சாதி மாயக்காய்

மாயம் விடையும் ஓர் நிறையாய் வடிவாய் அரைத்து கியாழமதில்

பாயும் பழம் தேங்காய் பால் படிதானென்று அதில்விட்டு

ஏயும் சொன்னபிடைக்கோழி இடுநீருறுணிசலத்தெவிட்டு

தோயும் நீரை வற்றித்து துய்ய இறுப்பாய் நாழியதாய்

நாழியில் பாதி நல்சீரம் நன்மய் இடித்து நல்நீரில்

தாழியில் கலந்து போட்டுதான் மறுநாளில் வாங்கி

வாழுமுன்நெய்யில் சேர்த்து வாழ்கடல் பிள்ளை நெய்யும்

கூடுடன் நாலிலொன்று கூட்டியே சிண்டிக்காய்ச்சி

பாழிலே நினைதிடாதே ப்ரத்திலே மனதைவைத்து

வைத்துடன் மூன்றும் நாளில் வடித்துமே வைத்துக் கொள்

கொத்து சேர்கரண்டிவீதம் கொடு காத்திற் பிலியும் னோய்
பத்தியே ஆறவே ஊ பாலகர்க்கு ஊட்டும்போது
எத்திசை அறியச் சொன்னேன் ஏகிடும் கணைகள்தானே.

தானே பித்தம் மேக கணை தாமரை முள்ளு அஸ்திசுரம்
கோனேகரப்பன்வாலேந்திரம் குட்டிகள் வீதம் ஏந்திரமும் வானேகீரந்தி
சொறிகணையும் வ/ராதோடும் மாந்தகாணை
ஏனேகீரிமசரிக்கணை எல்லாம் தீரும் என்றுரையே.

தாமரைக்கணைக்கு கோழிப்பொடி.

கொட்டமோடதி மதுரம் தக்கோலம் திரிபலை குரோசாணி
குணமுடன் அரிசிவகை இருமூன்று ஒரு மூன்றது சீரகமும்
திட்டமதாய் இருசந்தம் சுக்கொடு சேர் மூவாறென்றும் திகையற இடுவகை
ஒருநிறையாகவே செப்பிடுவேன் மாதே
சட்டமதாம் பொடுதலை வல்லாரை காரையோடாரை இலை
தானிருநர்கமுடனதுள தீரவுள்ளியுடனே பிரமி
மட்டதுவாகிய வேர்வகை பிடிரண்டிட்டு சதை பின்
வார்த்திடுமன்றைக்காடி எண்ணுழியிலிட்டிடு கார்குழலே

கார்குழலே படி சாகமெடுத்து அரை கற்கவகையதனை
கரும்பிடையானது தூவல்களகற்றிடு கால்குடலானதையும்
தார்குழலே அகம் வைத்துச செலுத்தியே சற்குருவைப் போற்றி
தானிமதின் தளிர் ஓலை பொதிந்துவை தானொருபாண்டமதில்
பார்புகழ்ந்திருமாதே நீபாவுபருத்தியதின் மாறின்
பண்புடன் வைத்திடுக்கு குடமதனை முன் வைத்ததின் சாகமதை
சேர்குழலே ஐயஞ்சு கொதும்பை தேனே நந்நாலாய் திடமொடு
கீறி எரித்தபின் வாங்கினி செப்பிடு வேன்பாகம்.

பாகமதாகீகவே வற்றின சாகம்படியது காலதனை பைதல் தனக்கு
தைதலேநீயும் பத்தியமாயிருந்து வேகமுடன் ரவிதன்னில் அவிழ்தமருந்தொடு
கோழியதை விரைவோடுணக்கிடு
இடிபொடிவடிகொண்டொரு வெருகடி நிறையாய்
கோகுலமாகிய வெண்ணையிலிரு பொழுதூட்டிடு.
திமிர் கணையும் தோகையே தாமரை கணயொடு
கண்ணில் சுக்கிரனும் தசையும் தோன்றுதோட்டிடுமென்றனர்
முனியுரை சொற்படி செப்பினதே.

தாமரை முள்ளுக்குப் பூச்சு.

மிளகினிலையும் பிலாவிலையும் முந்த மருகாரையினிலையும் வளகாம் தேற்றி

வேர்தொலியும் வகைக்குப்பலமே ஒரொன்று பழகாம் தேங்
காய்துருவு தன்னில் பாங்காய் வறுத்து குழம்பரைத்து குழலாய்
தாமரை முள்ளு தன்னில் குடிபோம் தேய்காகண்டிரே.

வேறு--தாமரை முள்ளின் குணம்.

அஸ்திசுரமாய் வறண்டுலர்ந்து அங்கம் தாமரை முள்ளாகி
சத்தி குறையும் தகையுமுண்டாம் தானே நயனம் தனைக்கெடுக்கும்
பித்தமதிகமாய் சுரமாய் பிதற்றி தலையில் நீரேற்று
சித்தம் வெதும்பி பொசிப்பொறுக்கும் தெரியும் தாமரைமுள்களையே.

நத்தை சிப்பி ஊமச்சி நல்ல சீரசெங்கழநீர் கிழங்கும்
மெத்த நாவல் பட்டையுடன் வில்லை துளசி பணப்புல்லு
முத்தம் கதலிப்பூவுடனே மொழியும் மாதளம் பிஞ்சுடனே
சித்திரப்பாலை பருத்தி முகள் செம்பன் நெரிஞ்சி இலைச்சாறே.

சாகம் விடயம் சாதிக்காய் தானே பத்திரி கிரும்போமம்
வாகிலுடனே குரேசானி மதுரம் ஏலம் திற்பிலியே.

திற்பிலி சீரம் நெல்லி முள்ளி சறிந்த கோரங்கிழங்குடனே
ஒப்புடனென்று கழஞ்சு கொண்டு உறுதி ஆட்டின் பாலானது
செப்பிய நெய்யில் கலந்து தீயாலெரித்து வடித்தெடுத்து
தப்பில்லாத ஓர் கரண்டி தானே குடிக்கக் கொள்வாயே.

கொள்வாய் மூலக்கலையுடனே கொண்டே மூலக்கருப்புகாலை
விழையால் அத்திசுரக்கலையும் வீங்கும் கலையும் தான் போகும்
முழலை சீதக்கடுப்பவும் முன்சுரம் வெதுப்பு கிறுகிறுப்பு
தளரச் சோகை காமாலை தானே அகலும் சத்தியமே

முட்டைத் தயிலம். P. 119 of Bk. 2 114 of this Book.

போகுமப்பா முட்டை கருவை வாங்கி
பொற்பீலி கயறுகுண்டம் காயம் கம்ப்ளி
வேகுமப்பா நிலத்தில் வேர் முசிறு முட்டை
வேகமதாய் சனிஞயம்நவசார்ம் உள்ளி
ஆகுமப்பா இவையெல்லாம் ஒன்றாய் கூட்டி
அரகரா முதலியுடகம்பாலாட்டே
காகுமப்பாகரிந்து வரும்பருவம் தன்னில்
கடவுளைத்தான் துதித்து கருத்தாய் நீயும்
நீயுமே நிம்ப எண்ணெய் உழக்குவிட்டு
நிச்சயமாய் கீழிறக்கி நிலத்தில் வையே.
உலையுமே உள்கொடுத்து உள்ளங்கால் கை
[illegible] முதல் தடவி [illegible] சீதம் [illegible]

கஊயுமே சன்னி எங்கே கபங்களெங்கே
கடுத்தா விலாச் சூளியஞேடு மூர்ச்சை எங்கே
சாருமே சதாசிவத்தின் பாதம் போற்றி
சற்குருவை தாகவகை சாற்றுவேனே.

நெஞ்சில் பூச.

எருக்கிலையை வாட்டிப்புழிந்த சாற்றில் ஏலத்தை அரைத்து பச்சையாய்
பூசவும் கை கண்டதாம்.

நகச்சுற்று புண்ணுக்கு.

மஞேசிலையைப் பொடித்து புண்ணில் போட சுகமாகும்.

மூலந் தள்ளலுக்கு தவளை நெய்.

ஆமப்பா நாமமுள்ள தவளைதன்னை
ஆறுத்தரித்து தோல் குடல் கால் தலையும் தள்ளி
வாமப்பா இலவங்கம் கிரும்போடேலம்
வகைக்கு நாலு கழஞ்சரைத்து வயிற்றுள்ளாக்கி
ஓமப்பாதைத்து வைத்து தேங்காய் மூன்று
உடன் திருகிபால் புழிந்து தவளை போட்டு
ஆமப்பா தீயிட்டு நெய்யாகும்போது
ஆவின் நெய் கால்படி சேர்த்து வாங்கே
அரித்தாதொரு நெய்யதனை மைந்தர்கள்கு
அந்தி சந்தி காசிடையீாய் அருந்தும்போது
வருத்தமுடன் வந்ததொரு கஊகளேது வாலேந்திரம் மகேந்திரமுடன் வறட்சையேது
பெருகாதொரு கடுப்பு ஊச்சல்
புறந்தொடர்ந்து தள்ளினதோர் அண்டியேது
கருத்துடனே இம்மருந்து செய்வீராகில்
கஊகளெல்லாம் மாறிவிடும் கருதிப்பாரே.

இரைமாந்த சன்னிக்கு தயிலம். (நவகண்டத்தயிலம்)

இரசம் கெந்தகம் வெள்ளுள்ளி இயல்வாம் திருசு செங்கொட்டை
அரிதாரத்தோடு மஞேசிலையும் ஆனகருஞ்சீரம் வெளுத்த பிசின்
சதகமுறவே வகை கழஞ்சு சரியாய் நுணுக்கி திரிதிரித்து
உரிய வேர்பெண்ணெய் தனிலெரித்து உழ்கார்யதனைக் குறுகிடுமே.

இடவே தயிலம் காசிடை கொள் இஞ்சிச் சாறு முலைப்பால் தேன்
உடனே உள்ளே கொடுத்துடம்பில் உரத்த தடவி கால்கரமும்
பிடரி நககான்கிரையுமிடு பிறவீச்சுடனே வலிவாதம்
உடனே விடுமிது ஆயுள் வேதம் உரைத்த முறையிது தப்பாதே.

விஷ மாந்த சுரத்துக்கு நெய்.

சாட்டுக் கொன்னைப்பட்டை பலம் 2. நாலுபடி ஜலத்தில் கஷாயம் செய்து அரைப்படியாக்கி வேப்பெண்ணெய் ஆமணக்கெண்ணெய் வகைக்குப்படி கால், நல்ல தேங்காய் 2. பசுவின் பால் படி கால், நல்ல வயம்பு வெள்ளுள்ளி வகைக்கு 3. கலப்பை கிழங்கு 3. மருந்துகளை முன் கஷாயத்தில் அரைத்து கலக்கி எண்ணெயும் தேங்காய்பாலும் சேர்த்து மெழுகில் முதிரவும். ஒரு காசிடை உள்ளுக்குக் கொடுக்கலாம். (கலப்பைக் கிழங்கை பசும்பாலில் அவிகாசுத்தி)

பித்த சோகைக்களுக்கு.

ஊறல் கஷாயம் (கை கண்டதாம்)

திரிகடுகு, ஓமம், சாரணை வேர், அயப்பொடி, கரும்பு, கடுக்காய், தோடு, குறுந்தொட்டி வேர் இருமிச்சம்பழம், கைப்பு நாரங் காய், புளியன் நெட்டு பிரண்டைக்கொழுந்து வகைக்குப்பலம், பசுமோர் படி 6. மருந்துகளை அரிந்து மோரில் போட்டு சூரியனில் வைத்து நாலாம் நாள் முதல் தினம் ரண்டுதடவை ஆழாக்கு வீதம் மூன்று நாள் இரு நேரம் கொடுத்து க்டுமபத்தியமாயிருக்கவும்.

ஒரு மாசத்துக்கு மேல் இந்த ஊறல் கஷாயம் கெட்டுப் போகாமலிருக்கும்-அயப்பொடியை நாவல் பட்டைச்சாற்றிலே மூன்று நாள் ஊறப்போட சுத்தியாகும்.

வயிற்றளைச்சல் மூலந் தள்ளலுக்கு கிரும்பு அரை - கஷாய மிட்டு அதில் அரைத்துக் கலக்கி கொடுக்கவும்.

இரைகடி, மூலந்தள்ளலுக்கு பெரியோருக்கும் ஆகும்.

தைவளை குப்பை மேனி, சுண்ணாத்தும்பை இலை வகைக்கு பிடி ஒன்று வீதம் இடித்துப் புழிந்த சாறும் இருள்ளி புறுத்தி மண்டை வகைக்குச் சாறு உழறும் நல்ல தேங்காயானல் 1½ யும் திருகி பச்சைப்பால் புளிந்து எண்ணெய் உருக்கும் பருவத்தில் வடித்து அரைக்க கரண்டி வீதம் - பெரியோருக்கு - சாதாரண புத்தியம்.

தீப்பட்டதற்கு.

ஒரு புன்னைக் காயளவு தீஞ்சுண்ணாம்பை ரண்டுபடி தண்ணீரில் போட்டு கலக்கி தெளிந்த போது கீழே ஊற்றிவிட்டு இப்படி மூன்று தரம் செய்து விட்டு நாலாந்தரம் கலக்கி தெளிந்தபின் அந்தத் தண்ணீரை ஒரு குப்பியில் அடைத்து வைத்துக்கொண்டு அந்தத் தண்ணீரில் கொஞ்சம் எடுத்து அந்த அளவு தேங்காய் எண்ணெய்விட்டு கடைந்து வெண்ணெய் எடுத்து தீப்பட்ட இடத்தில் போடவும்.

பழுப்பு எடுக்கும் விதம்:- ஒரு வெள்ளைத்துணியில்

இந்த வெண்ணையை நனைத்து அதைப் புழிந்து விட்டு ஒற்றி ஒற்றி எடுக்கவும், பழுப்பு துணியில் ஒட்டி விந்து விடும்.

கணைக்கு பொன்னுவரை கஷாயம்.

கோரக்கிழங்கு	ஏலம்.
வில்லை இலை	நல்சீரகம்
திரிப்பன் பூல்	கற்கடகசிங்கி
மாதளம்பூ	செம்பகமொட்டு
துளசி இலை	கொட்டம்
வல்லாரை	அதிமதரம்
கொடுப்பை	சாதிபத்திரி
மருதன் பட்டை	ராமிச்சு
குறுந்தொட்டிவேர்	இருவேலி
பொன்னுவரை இலை	நெல்லிக்காய்தோடு
தாருவேர்	சிவ சந்தனம்

கணைக்கூடு.

வகைக்கு கழஞ்சு 1 வீதம் 2 படி தண்ணீரில் கஷாய மிட்டு உழக்கு ஆக்கி தினம் ரண்டு நேரம் கோரோசினை மேல்பொடி போட்டுக் கொடுக்கவும். இப்படி ஆறுநாள் பன்னிரண்டு நேரம் மீன் கொடுக்கக் கூடாது - பயறு ஆகும்.

P. 25 of Book III p. 87 ... p. 68 Book

அதிகம் போகிற சுரோணிதம் நிற்க ஒரு கழஞ்சு சாதிலிங்கத்தை நன்றாய் பொடித்து ஆறு பங்கு வைத்து மூன்று நாள் ஆறு நேரமாய் ஒவ்வொரு நேரத்திற்கு ஆழாக்கு வீதம் தென்னம் பூ சாற்றில் கலக்கி கொடுக்கவும்.

பத்தியம் உப்பில்லாமல் நல்லது.

பொன்னுவரை கஷாயம்.

மொகாக்காசுவில்லை இலை முதியார் கூந்தல் மாதளம்பூ
ஒத்த துளசி வல்லாரை உறவே கொடுப்பை மருதந்தோல்
சித்தாமுட்டியின் வேர் பொன்னுவரையின் இலை பூ தாருவேர் கணைக்கூடு
மொத்தமாக வகையொன்று முறையாய் கழஞ்சு சேரே.

சேரே ஏலம் நல் சீரம் சிறந்த சிங்கி செண்பகமும்
நேரே கொட்டம் மதுரமொடு குணமாம் சாதி பத்திரியும்
இரே ராமிச்சிருவேலி இதமாம் நெல்லிக்காய் தோடு
ஆரே சிவ சந்தனமும் அறிவாய் வகைக்கு கழஞ்சொன்றே.

ஒன்றாய் சேர்த்து அரிந்திடித்து ஒக்க ரண்டு படியிலிட்டு

நன்ருய் காய்ச்சி உழகாக்கி நல்ல கோரோசனை மேலிட்டு
தின்ருயாறு நாள் கொள்ள திரும்பி தாக்கலையோடு
அன்ருயுள்ள பலபிணியும் அகன்று ஓடிப்போய்விடுமே.

இருமல், கபத்துக்கு.

கடுகு ரோகணி, கற்கடக சிங்கி வகைக்கு 1½ வீதம்
நாழித்தண்ணீரில் கஷாயமிட்டு உழக்காக்கி வெள்ளைக் கற்கண்டு
அல்லது சீனிக்கற்கண்டு பொடிதிட்டு கொடுத்து வரவும். உஷ்ணத்
துக்கும் ஆகும்.

கணையைப்பற்றிவரும் ரெத்தக்கழிச்சல் முதலியத்துக்கு.

சீர் பெருகு பூங்கதலிச்சாறு நாழி
சிறப்பாக இருள்ளிச்சாறு நாழி
பேர் பொருந்தும் ஆவினெண்ணெய் நாழியாக
பேரெலம் சீரகமும் அசமதாகம்
தார் பெருகும் கெருடப் பச்சை மாயக்காயும்
தக்க அதிமதுரமுடன் பஞ்சிக்கன்னூர்
வார்பெருகும் உலுவாயும் கழஞ் சோரொன்று
வாழைப்பூச்சார்வார்த்து அரைத்துக் கொள்ளே.

கொள்ளவே அதனோடு முன்னே சொன்ன
குணமான சாறு முன்னாழிதனில்
மெள்ளவே தீயெரித்துக்காயும் போது
இசல்பதம் மெழுகதானல்

பதமுடன் சாதிக்காயும் பத்திரி கிரும்பு வசுவாசி
உதமதி விடயம் முத்தம் ஓரொன்று கழஞ்சதாமே
ஒன்றதாய் மருந்தை யெல்லாம் உபாயமாயவறுத்துப்பின்னே
நன்றெனப்பொடியதாகி நலம்பெற நெய்யில் ~~[illegible]~~ கூட்டி
கன்றமாய் வடித்துக் கொண்டு காசளவு உள்ளே கொள்ள
இன்றுதான் போறேன் என்று ஏழுங்கணைகிராணியெல்லாதீம்

எல்லா மூலக்கிராணிகளும் எதிர்த்துப் பொருமல் வயிறுளைவி
சொல்லாதுள்ளுரோகமுடன் துலங்கக் காச்சல் ரெத்தமுடன்
அல்லக்குழலே இவையெல்லாம் அகற்றும் பசியுமுண்டாக்கும்
எல்லாம் பொறுக்கும் என்று முனி ரிஷிக்கு செய்தபடியாமே.

உஷ்ண வாயுவுக்கு (பெரியோர்க்கு)

சுக்கு ஓமம் கறிப்பட்டை கிரிசாத்து - வறுத்து அதோடு கொஞ்சம் காந்தாரி மளகும் போட்டு ஒரு புன்னைக்காயளவு கருப்புக் கட்டியும் போட்டு கஷாயம் செய்து குடிக்கத் தீரும்--வெள்ளுள்ளி வறுத்து கூட சேர்த்தாலும் நல்லது.

மேகம் பழுப்பு, [illegible] தரிப்பு முதலியதுக்கு நல்லெண்ணெயும் வெள்ளைக் குந்திரிக்கமும் ஒரு சட்டியிலிட்டு தீயிட உருகும் அதைக் கருக்குத் தண்ணீரில் விட்டு கை கொண்டு கடைந்து வெண்ணெய் எடுத்து ஒரு புன்னைக் காயளவு தினம் ரண்டு நேரம். இப்படி மூன்று நாள் ஆறு நேரம் கொடுக்கவும்.

கணைக்கு தவளை நெய்.

பருதிமிக மிக்கவே சொல்லக் கேளு
பண்பான கூவளத்தின் நெய்யைக் கேளீர்
வரும் வில்வலயொடு கொடுப்பை தூ தவளை
வல்லாரை குழி மீண்டான் நத்தை சூரி
தரு விஷ்ணு கிராந்தி புடோலத்துடன் துளசியோடு
தரயியிலே வகைத் வகைக்கு சாறு நாழி
கரு ஆட்டின் பாலுடனே ஈருள்ளிச் சாறு
கணக்காக வகை வகைக்கு நாழி கூட்டே.

கூட்டப்பா நெய்யுடனே சிறு நெய் நாழி
கூசாமல் கஷாணமிட மருந்தைக் கேளு
வாட்டப்பா நண்டு நத்தை சிப்பியோடு
வளமாக வகை வகைக்கு அன்பதாகும்
நாட்டப்பா பச்சை நாமத்தவளை அஞ்சு
நலமாக கருங்கோழி ஒன்றேயாகும்
காட்டப்பா இவையெல்லாம் கஷாயம் போட்டு
கணக்காக இறுத்து நீ வைத்துக் கொள்ளே.

கொள்ளப்பா தேங்காய்தான் நாலேயாகும்
குணமாகப் பால்புழிந்து கூடச் சேரு
மெள்ளவே கற்க வகை கணக்கைச் சொல்வேன்
மேன்மையாயுள்ள அரிசிவகை ஆறோடும் ஏலம்
தள்ளவே திரி சாதி விடயம் சீரம்
தளராத குங்குமப்பூ மிளகு குரோசாணி
விள்ளவே மதுரம் திரிகடுகோடு அரத்தை
விதமாக வகை வுகைக்கு கழஞ்சுரண்டே.

ரண்டோடு ரோசனையும் கழஞ்சி ஒன்று
நகட்டாமல் மருந்தெல்லாம் இடித்துச் சேர்த்து
கன்றோடு பால் விட்டு அரைத்துக்கூட்டி
கனமாகக் கலக்கியே கஷாயம் நெய் சேர்
வண்டோடே அடுப்பேற்றி அனலை மூட்டி
வளமாக சிறு தீயால் செளிக்கப்போட்டு
தண்டோடும நெய் பருவம் மெழுகதாகும்
தரணியிலே வடிக்கிறது பாணைசெய்யே.

செய்யவே நெய்யதனைக் கலசம் வைத்து
சிறப்பாக அந்தித் சந்து கரண்டி கொள்ளு
எய்யவே புளி கைப்பு இனிப்புத்தள்ளு
இதமாக பச்சை மீன் தேங்காய் தள்ளு
கொய்யவே நெய் கொள்ளச் சோறே உண்ணு
குணமாக உண்டு வரத்தேகம் சுத்தி
நெய்யவே தீரும் நோய் சாற்றக் கேளு
நேரான கண வியாதிதொண்ணூற்றும்
ஆறுடனே மேகமொடு அனலும் போகும்
அழகான தேகமது தெளிந்தேவரும்
வேறுடனே வெந்திருந்த வறட்சை உஷ்ணம்
வெள்ளையொரு கிராணிரெகூணையும் போகும்
மாறுடனே கை கண்ட நெய்தானப்பா
மகத்தான சிறு பயறு பால் நெய்யாகும்
தெறுத்துடனே ஆட்டிறச்சிறுவரையாகும்
சிறு விருக்கத் தேகமது தெளியுங் காணே.
(செங்கழு நீர் கிழங்குச்சாறு நாழி கூடச் சேர்த்தால் நல்லது)

சோகைக்கு எண்ணெய்.

தானென்ற நல்லெண்ணெய் படிதானென்று
தவறுத இசங்கு கரிசாலை நொச்சி
வானென்ற தாம்பூலம் தேசிக்காயோடு
வகைக்குழக்குச் சாறுக வாங்கியேதான்
கோனென்ற மிருசு அதவும் கழஞ்சு எட்டு
குறையாமல் முன்சாக மதிலூட்டி
வானென்ற எண்ணெய் தனில் கரைத்து வார்த்து
வளமாக அடுப்பேற்றி தீயை மூட்டே.

முட்டியே காய்ந்து பதம் மெழுக் தானால்
முறையான கலசமதில் வடிக்கிறது
தாட்டிகமாய் ஒன்றைவிட்டு ஒருநாளாக
தான் செய்த்து மூன்று முழுக்கப்பால் பின்னும்
ஓட்டிடவே முழுகிடுவாய் வாரந்தோறும்
உத்தமனே பத்தியமாய் முழுகினுக்கால்
சாட்டி நின்ற விஷ நீர்கள் தலையின் நோவு
தவறாத பீனிசமும் தணிந்து போமே

வாதத்துக்கு அக்கினி மூலாதித் தைலம்.

வாரணமுகத்தோன் பாதம் வரிசையாய் பணிந்து போற்றி
காரண வாதமெல்லாம் கதறியே தீரவேண்டிய
சீரண சித்திர மூலி சதா வேலி சித்தாமுட்டி
தாரண முருங்கையின் வேர் மாதளையுடன் எருகின்வேரே.

எருகின் வேர் ஏரண்டம் கருங்குறிஞ்சி கூந்தல்
பார் மிளகு கூவளம் வேர் பாதிரி வைய்யாணி
ஓரிதலை நெரிஞ்சில் தூதுவளை மூவிலையும் (நெரிஞ்சில்–முள்நெரிஞ்சி)
காரிகார் அமுக்கூரம் காணம் கரைப்பாசும் உளுந்துமாமே

ஆமிது வகைக்கு ரண்டு பலமதாய் அறைந்து போட்டு
வாமிரு தூயி நீரல் வற்றி எட்டொன்றை தானால்
தாமிரு கற்கத்துக்கு தகரமும தேவதாரம்
தோமிது ஏலந்தானும் சுக்கு சித்தாரத்தை தே சேரே.

சேரும் கஸ்தூரி மஞ்சள் சதகுப்பை கொட்டம் இந்து
தாருவாய் வசம்பு சடமாஞ்சி கடுகு ரோணி
நேர் நிறை கழஞ்சி ரண்டாய் நினைவதாய் அரைத்துக் எள் எண்ணெய்
வார் தயிர் காடி பாலும் வரும் ரண்டு படிதான் கூட்டே.

கூட்டியே வடித்த எண்ணெய் குணமுடன் பூசை செய்து
மூட்டி யோர் கரண்டி தன்னை மூன்று நாள் கொள்வீராகில்
நாட்டியே முழுகி வந்தால் நடுகிடும் வாதமெல்லாம்
காட்டிய அக்கினி மூலாதி தயிலத்தை கருதிச் செய்யே.
செய்யவே முகத்தில் வாதம் திருவிறை நடுக்குவாதம்
பய்யவே சுருட்டு வாதம் பற்றிய மேகவாதம்

தய்யலான் பிள்ளை வாதம் சருவாங்க வாதத்தோடு

கொய்யவே செய்யும் எல்லாக் கொடிய வாதங்கள் போமே.

அரையாப்புக்குப் பூச.

பிரண்டைக் கிழங்கு, சம்பா நெல், சாம்பிருணி வகைக்கு சுமன்.

கிழங்கும் நெல்லும் ஒன்ருய் போட்டு சிவத்த கறுக்க வேண்டும்.

பிறகு மூன்றும் ஒன்ருய் சேர்த்து கதம் பைச்சாற்றில் அரைத்து வெதுப்பி

பூசவும். (நிலப்பனை கிழங்கு கூடச்சேர்த்தாலும நல்லது)

வாத கோடாலி தயிலம்.

ஆயிலியம்பட்டை பலம் 25.

வெள்ளை நொச்சி பலம் 3½

கறுத்த நொச்சி பலம் 3½

புங்கின் வேர் பலம் 2½

ஆடாதோடை பலம் 2½

முருங்கை வேர் பலம் 2½

எருக்கின் வேர் 2½ பலம்

வேப்பின்பட்டை 2½ பலம்

கொடுவேலி கிழங்கு 2½ பலம்

காஞ்சிரம்பழம் 2½ பலம்

அறுகின் கிழங்கு 2½ பலம் (வெள்ளறுகு)

பீநாறிவேர் 2½ பலம்.

இதனையும் நறுக்கி சதைத்து பத்து மரக்கால் தண்ணீரில்

கஷாயமிட்டு மூன்று படியாக்கி அதில் நல்லெண்ணெய் நாழி வேப்

பெண்ணெய் நாழி வீதம் சேர்த்து, திப்பிலி, சுக்கு, கடுகு, வெள்ளுள்ளி

ஓமம் வகைக்கு மூன்று பெருங்காயம் 1. நல்சீரகம், கருஞ்சீரகம், வெந்

தயம் வகைக்கு 1½, கஸ்தூரி மஞ்சள் இந்துப்பு சதகுப்பை கொடு

வேலிக்கிழங்கு ஏலம் இலவங்கம் மனோசிலை வெள்ளைப் பாசாணம் வகை

க்கு 3/4 கடைமருந்தை கஷாயத்தில் அரைத்து கலக்கி மெழுகில்

முதிர வடிக்கவும் - வாதம் 80-க்கும் நல்லது. கை கண்டதாம்-

புளி இலை பேரை இலை வாத மடக்கி இலைபோட்டு வென்னீர்

காய்த்து குளிப்பிக்கவும்.

இரைகடி, இரைகோபம், கபம் முதலியத்துக்கு ஆழாக்.

குத்தி வேப்பெண்ணெயில் ரண்டு குடம் வெள்ளுள்ளியை அரைத்து அதில் கலக்கி

ஒருதடம் உள்ளுக்கு கொடுக்கவும் - சிறுவருக்கு சிறு கரண்டி அளவு.

ஆகாராதி தகனமில்லாத, எப்பம் அக்கினி மந்திக்கிற வாயு இதுகளுக்கு.

நாலு கழஞ்சு பெருங்காயத்தை வாங்கி அதில்

இருபதில் ஒரு பாகம் எடுத்து தீயில் காட்டி

இளக்கி உருட்டி இரவில் ஆகாரம் சாப்பிட்டபின் ஒழுங்காய்

இருபதுநாள் சாப்பிட்டு வர. சுகம்.

பிள்ளைகளுக்கு தேகத்தில் மேகவெட்டை போல் வரும்.

கரப்பன் கிரந்திக்கு.

திற்பிலி கொத்தமல்லி நல் சீரகம் இருள்ளி வெந்தயம் கிராம்பு கருஞ்சீரகம் வகைக்கு துளசி இலை செம்ப நெரிஞ்சி வேர் காணம் நொச்சிக்கு ருந்து வேப்பு நெட்டு வகைக்கு கு. 2 எல்லாம் சதைத்து மூன்று படி தண்ணீ லில் கஷாயமிட்டு அடை கஷாயமாக மூன்று நாள் ஆறு நேரம் 1½ கரண்டி அளவு கொடுக்கவும். இச்சாபத்தியம் இப்படி மூன்று வைப்பு 18 நேரம் கொடுக்கவும். சுகம்.

கழுத்தடி கரப்பானுக்கு.

நவசாரம் கு. 3 வற்றல் மிளகு கு. 3 தேங்காய் நெய் உழக்கு பொடித்திட்டு மணல் பருவம் விரணத்தில் தொட்டுப் போட்டு வெந்நீர்விட்டுக் கழுவவும்.

புரவுக்கு நல்லெண்ணெயில் | கண்டமாலைக்கு வேப்பெண்ணெயில்

கரப்பானுக்கு தேங்காயெண்ணெயில்.

பால் வற்ற.

வைக்கோலை தண்ணீரில் அரிந்து போட்டு காய்த்து அந்த தண்ணீரைக் கொண்டு ஒற்றியும் கழுவியும் பாலை பிழிசியும் செய்து விட்டு நண்டுப்புற்றில் நண்டு துரந்த மண்ணைக் கொண்டு வந்து பச்சையாய் அரைத்து பூசி வந்தால் சுகமாகும்.

முடில்லாத் தாளியை அரைத்துப் பூசினும் சுகம்.

(Using of Breast pump will give relief)

சிகப்பு கரப்பன் நீர்கட்டுக்கு.

படிமுள்வேர் (?) மழுக்காரை வேர் ரண்டையும் தோல் சீவி எடுத்து அரிசி பழைய தண்ணீரில் அரைத்து நெல்லிக்காயளவு அந்தத் தண்ணீரில் கலக்கி குழந்தைகளுக்குக் கொடுக்கவும். தாய்க்கும் கொடுக்கலாம். தாய்க்கு அப்படி ரண்டு பங்கு கொடுக்க வேண்டும். பத்தியம் கை நனைக்கக் கூடாது. மூன்று நாள் ஆறு நேரம். கெற்பகாலத்திலும் கொடுக்கலாம். சிகப்பு வராது. விஷ கடி முதலிய வெளுப்பு ஊர்தல் முதலியத்துக்கும் கொடுக்கலாம். பத்தியம் முன் போலதான். பூசவும் செய்யலாம்.

புழுக்கடிக்கு.

புழுக்கடி உள்ள ஸ்தலத்தில் தீஞ்சுண்ணம்பு கொண்டு நன்றாய் தேய்த்தால் நீர் அல்லது ரெத்தம் கசியத்தக்கதாய் தேய்த்து விட்டு பிறகு புத்தரிச்சுண்டைக்காயை ஒன்று ரண்டாய் தறித்து பாதியில் மேற்படி சுண்ணம்பு தேய்த்து அந்தப் புழுக்கடி ஸ்தலத்தில் தேய்க்கவும். இப்படி ரண்டு பாகமும் மூன்று தடவை மூன்று நாள் செய்தால் சுகமாகும்.

கால் புற்றுக்கு.

நீற்றின கல் சுண்ணாம்பைக் கொண்டு வந்த தேங்காய் எண்ணெயில் குழைத்து வெய்யிலில் வைத்து புற்றில் போடவும். குழம்பு போலிருக்க வேண்டும்.

சொற்ப ஸ்கலிதத்துக்கு.

ஆமணக்கெண்ணெய் உள்ளங்காலில் தடவிக் கொண்டு உறங்கவும்- இயத்தில் ஒரு தகடு தட்டி அதை இடுப்பில் கட்டிக் கொள்ளலாம்.

விசர்ப்பத்துக்கு - கஷாயம் - நெய்.

அதிமதுரம் வேப்பு நெட்டு திற்பிலி மூலம் ராமிச்சு செங்கழுநீர் கிழங்கு கொட்டம் இருவேலிகருஞ்சூரைப்பட்டை நொச்சிக்குருந்து கடுகு ரோகணி வகைக்கு கழஞ்சு 2 நல் சீரகம் முந்திரிங்காபழம் வகைக்கு ~~[illegible]~~ கருஞ்சீரகம் கஷாயம் மூன்று நாள் ஆறு நேரம் - கிரந்தி - சொறி சிங்கு விசற்பம் - நெய் - நல்ல மிளகு - கருஞ்சீரகம் வகைக்கு மதுரம் திரிஜாதி வகைக்கு 1 உலத்திகுருந்து காரை இலைச்சாறு உழக்கு காரை வேர் உருக்கு நெய் உரி மணல் பருவம் - கரப்பன் விசற்பம்.

தெற்றி வேர் கஷாயம்.

கேளப்பா தேற்றி வேர் கஷாயந்தன்னை
கெறுவாக தேற்றிவைக சமூலம் வாங்கு
நாளப்பா நல்துளசி நெரிஞ்சி செம்பன்
நலமான உள்ளி பூவரசன் பட்டை
தாளப்பா கருஞ்சூரை கெருடன் மூலம்
தகமை பெறும் சிற்றறுகு தாரு மூலம்
கோளப்பா சாரணை வேர் சீரம் ரண்டும்
கொண்டிடு நீ கார் கோளும் மாயக்காயும்
மாயக்காயிது வகை கழஞ்ச தொன்று
மகத்தான மல்லி திரிசாதி பாதி
ஓயொக்க அப்புவிட்டு எட்டொன்றுக்கி
ஒகோகோ ரோசனையும் கூடத்தாக்கு
நீயொக்க அந்தி சந்தி ஆறுநேரம்
நிலையாகக் கொடுத்து விடு நீங்கும் நோயும்

சாயொக்க சிகப்பு பதினெட்டும் தீரும்

சார்ந்ததொரு கரப்பன் வகை கிரந்திபோமே.

கரப்பானுக்கு, நிம்பாதி.

See page 151 of this Book.

சொல்லுகிறேன் வேப்பின் தோல் தோடை சுண்டை

தொகையான அமுர்த பேய் [illegible] புடோலக்கொடு

வெல்லுவேன் வகைக்கு ரண்டு கழஞ்சு வாங்கி

வேகமதாம் திரிபலையும் வறட்டு மஞ்சள்

நல்லவேசுக்கு கருஞ்சூரைப்பட்டை

நலமான கருஞ்சீரம் அமுக்கூர்ம்தானே.

தானென்ற வகையெல்லாம் கழஞ்சு கூட்டி

தாங்கியே அப்புவிட்டு எட்டொன்றுக்கி

தேனென்ற சீனப்பாகுக்கில் சீரம்

தென்மொழியே சுத்தி செய்து பொடியதாக்கி

நானென்ற மேல் பொடியாய் கொஞ்சம் தூவி

நலமான தேனுரையும் கூடவிட்டு

பானென்ற இசனைதான் நினைத்துக் கொண்டு

பண்பாக கொடுத்துவிடில் சிகப்பு மோறுமே.

See page 151 of this Book.

போமப்பா படுவனோடு கரப்பன் சூலை

பொல்லாத கிரந்தி புண்புரைகள் மாறும்

நாமப்பா கஷாயமதை வெளிவிடாதே

நலமான விசற்மமொடு குருமாறும்

வாமப்பா வாகடத்தில் சொன்னமார்க்கம்

வகையாகச் சொல்லிவிட்டேன் எளமையாக

ஏமப்பா எண்டிசையும் அறியத்தீரும்

ஏகுமே வியாதி முதல் பலநோயெல்லாம்.

குக்கில், மஞ்சள், தண்ணீரில் அவித்து சுத்தி• சீனப்பா பாலில் போட்டு வையிலில் வைத்து சுத்தி• மேல் சொன்ன கஷாயத்து கானல் சுத்தி வேண்டாம்.

சூலை, கரப்பன் நீர்கெட்டுக்கு தேய்காநெய்.

உருகு நெய், உழக்கு, திவால் மிளகு, கருஞ்சீரகம், வேம்பாடப் பட்டை வகைக்கு கழஞ்சு 1, வல்லாரை சிவனார் வேம்பு ஓரிலைத்தாமகை பசுவின் பாலில் அவித்து உலர்த்தின பொடி வகைக்கு 1 வீதம் போட்டுக் காய்ச்சி உள்ளுக்கும் கொடுக்கலாம். தேகத்திலும் பூசி குளிப்பி

காலாம் நீர்கெட்டு பலகரப்பன் தீரும்.

ரெத்த பேதிக்கு.

ஒரு அரிசியிடை அபினை இருள்ளிக்குள் வைத்து சுட்டு பசுவின் பாலில் அரைத்துக் கலக்கி கொடுக்கத் தீரும்.

மூலந் தள்ளலுக்கு.

கருப்புக் காலி அரிசி ஆழாக்கு, ஒரு புளிச்சிக் காய் பிஞ்சில் மூன்றில் ஒரு பங்கு ரண்டும் ஒன்ருய் அரைத்து அடை சுட்டு அந்த அடையில் மூன்றில் ஒரு பங்கை எருமை பாலி அரைத்துக் கலக்கி கொடுக்கவும் காயை மேல் தோல் சுக்கிக் கொள்ளவும்.

அக்கரனுக்குக்உஷாயம்.

நல் சீரகம் பெருஞ்சீரகம், கொத்தமல்லி, பால் கெருடப் பச்சை, மாயக்காய் சின்க்காரம் வடலிமட்டை பிலாம்பழுப்பு தொட்டால் வாடி வகைக்கு கூ.உ மூன்று நாள் ஆறு ~~வேளைக்கு~~ நேரம்.

சூலை கரப்பன் நீர்க்கட்டுக்கு கஉஷாயம்.

கண்டங்கத்திரி கற்கடக சிங்கி சித்தாரத்தை திரிகடுகு திரிபலைத் தோடு வகைக்கு கழஞ்சு மூன்றில் ஒன்றுக்கு நாவுரித்தண்ணீர் ஒரு நேரம் போட்டு இரண்டு நேரம் இப்படி மூன்று நாள் ஆறு நேரம்.

நீர்கட்டு உடைந்தால் போட மருந்து.

சின்க்காரத்தைப் பொரித்து புளி இலை இடித்துப் புளிந்து சாறு விட்டு மைபோல் அரைத்து சீலையில் ஊட்டி புண்ணில் போட சேறு சலம் வந்து, நீர் வற்றி சுகம் வரும்.

காய்ச்சலில் தலை விஉஷம் தீர் எண்ணெய்.

அரிச்சனி ஞாயிறு சித்தரத்தை நல்ல மிளகு வெள்ளுள்ளி வகைக்கு கழஞ்சு $1\frac{1}{2}$ முலைப்பால் விட்டு அரைத்து உழக்கு வேப்பெண்ணெயில் கலக்கி முதிரக் காய்த்து உச்சியில் வைக்கவும் சுடு தண்ணீரில் இஞ்சியைத்தல்லிப் புழிந்து அந்தச் சாற்றில் மருந்தை அரைக்கவும்.

வேறு.

நல்ல மிளகு இலுப்பைப் புண்ணாக்கு வகைக்கு கழஞ்சிப்

வேப்பெண்ணெய் உழக்கு காய்ச்சி தலையில்
தப்பவும் இஞ்சிச் சாற்றில் அரைக்கவும்

கடி விஷக் கரப்பனுக்குகஷாயம்.

வேப்பின் பட்டை, நிலவாகை, உதிவேர், முருக்கின் வேர், அமுதவள்ளி சுக்கு, கார் கோலரிசி வகைக்கு கழஞ்சு மூன்று நாள் ஆறு நேரத்துக்கு மூன்றில் ஒன்றுக்கு ஒருபடி தண்ணீர் விட்டு உழக்காக்கி அமுக்கூரம் மேல் பொடிசெய்து கொடுக்கவும் கழஞ்சு அமுக்கூரம் பொடித்து வடிகட்டிப் போடவும்.

மேற்பூச்சுநெய். தல்யல் தேய்க்கவேணும்

சிறெட்டி நெய், உருக்கு நெய் வகைக்கு உழக்கு வீதம் சேர்த்து கருஞ் சீரகம் ஒரு கழஞ்சு, கார்கோலரிசி கழஞ்சு.3. காடித் தண்ணீரில் அரைத்துக் கலக்கி காய்த்து தேய்த்துக் குளிப்பிக்கவும்.

கரப்பனுக்கு. கை கண்ட நெய்.

உலத்தி வேர், நல்ல மிளகு, வகைக்கு கழஞ்சு.3. உருக்கு நெய் உரி, மனல் மீத்தில் வடித்து தேய்த்து வரவும்.

***

கிரந்தி சூலை கரப்பன்,

முதலான சகலத்துக் கஷாயம்.

அதிமதுரம் கொட்டமொடு கொத்த மல்லி
அமுக்கூரம் வில்லமொடு சிற்றுமுட்டி
பெதும்பெறும் சீனப்பா கருவிலாஞ்சி
பேரான கருஞ்சூரை வேரின் தோலும்
கதும்பெற சமனிடையாய் சேர்த்துக் காய்ச்சி
கண்டபடி ஆறு நேரம் ஊட்டும்போது
பொதுவகையாம் கரப்பனோடு கண்டமாலை
பொன்னிபல சூலைகளும் புண்ணும் போமே.

கருந்திராகமும் சேர்க்கவும்.

சீனப்பா ஒரு நேரத்துக்கு ரண்டு கழஞ்சு வீதம் மற்ற மருந்துகள் வகைக்கு 1 கழஞ்சு வீதம் சீனப்பாவை சதைத்து பொட்டணம் கெட்டிப் போட்டு காலை மாலை அரைத்துக் கலக்கி கொடுக்கவும், இப்படி 6 நாள் 12 நேரம் கொடுக்கவும் - பால் - கஞ்சி தண்ணீர் சுருக்கமாய் கொடுக்கலம். (வகைக்கு எல்லாம் கழஞ்சு 3 போதமானது ~~நேரம்~~ சோறுநாம 6 நேரத்துக்கு)

வாய் முதல் மூலம் வர புண்ணுக்கு நெய்.

தாருலாவிய நறுதாளியொடு புளியாரை சாறு மணத்தக்காளியாம், தக்க சிறு கீரை இருள்ளியோடைந்தும் இடி சாறிவையோ ஐந்துழக்கு, காருலாவிய கறபிலநெம்முனி.

[illegible] சுரபி நெய் தேவுழகத்தில் கற்கண்டு
சீனி மதுரம் கரியதுடி கூகை நீறுமாயகாய் முந்திரிகைக்கனி சீரகம் கிரும்பு,
நேருலாவிய சாதியோர் வகை கழஞ்சரை நிறைகலந்தெரித்து நிசமாயருந்த
மூலாதார முதன் வெந்து நீயழுகிய நாற்றமும், ஆருலாவிய நாவு
தொண்டை சலதாரை மூல்ாத்ார வாய் இவையிலுண்டான புண் சூடெலிவு காந்
தல் விடும் உப்பு புளியாகாதென்றே – (நல்ல பாகமாம்).

கிரகணிக்கு நெய் (மூலந்தள்ளலும்)

கனிமேவு பூங்கதலி தெங்கின் பசும்பூ கற்கடகம்
ஒக்க இடி சாறுகால்படி வக்க்கு மாதளை பருத்திப்பிஞ்சு
கருதும் ஒன்ருேர் பிடியதாம்
தனைமேவுகடைமருந்து அதிவிடயம் மோதகம் தாளிசபத்திரி
சுக்கு தரு நெல்லி ஏலம் இரு சீரகம் குரோசாணி
திரிஜாதி திற்பிலி திரிபலை
அனுவான இலவங்கம் மாயக்காய் ஓரிடை அரைத்
தாவின் நெய் படியில் அருளந்ததை சிப்பி
வெள்ளுச்சி நீரமோர்பிடி அரிந்திட்டெரித்து வடிநீ
நினைவாக மூன்று நாள்அந்திபொழுதருந்திடு நீங்கும்
கிராணி எட்டும் நீர்கடுப்பு ஆறு ஊவு சீதரெத்தம்
சூடு நிலையாத சத்திமிதுவே.

(மணத்தக்காளி – மிளகு தக்காளி)

கிரகணிக்கு – பெரியோருககும்

ஆகும் – நண்டுக்குழம்பு.

நண்டுச்சாறு உழக்கு, நத்தை அவித்த நீர் உழக்கு
கிரும்பு சாதிக்காய் பத்திரி நல்ல காயம் கச்சோலம்
இருள்ளி நல் சீரகம் கருஞ்சீரகம் குரோசாணி
சித்தரத்தை வகைக்கு கழ.1 மாதளந்தோடு, பச்சைப்
புளியங்கொட்டைத்தோடு வகைக்கு மருந்து
களை இடித்து வடிகெட்டி முன் சாற்றில் தூவி போதுமான
உருக்கு நெய் சேர்த்து குழம்பு பருவத்தில் எடுத்து நெல்லிக்
காய் பிரமாணம் தின்று பத்தியமாயிருக்கவும் ஆட்டின் பால்
கொடுக்கலாம் * வேக வேக மூன்று தரம் எண்ணெய் விட்டு
பாகம் வருத்தி எடுக்க வேண்டும்.

பெற்றவளுக்கு கால் கை நோவுக்கு பூச்சு.
பச்சை தேங்காய் நெய் ஆழாக்கு.

சாதிலிங்கம்	கழ. 1	வறட்டுப்பாகு	கழ. 4
கடுகாய் தோடு	" 2	முட்டை வெண்கரு	" 1

மருந்துகளை தூளாகப் பொடித்து வெள்ளைக் கருவும் விட்டு காய்க்கவும் முட்டை திரைந்து வரும்போது நன்ருய் கடைந்து வருவே மெழுகு போல் வரும். முதிராமல் இறக்கி நோவுள்ள இடங்களில் போட்டு ஒற்றவும்.

ஒற்றல்.

ஆடா தோடை இலை, நொச்சி இலை, சிறுக அரிந்து செந்தவிடும் சேர்த்து சுடு தண்ணீரிலாவது மூலைப்பாலிலாவது விரவி புட்டவியல் செய்து ஒற்றவும் நோவு, நீர்க்கட்டு மாறும். நெஞ்சு நோவுக்கும்ஆகும்.

மண்டைக்குத்துக்கு

உருக்கு நெய் படி 1.	நல்ல மிளகு பலம் 1
சிற்றகத்திச்சாறு படி 2.	அதிமதுரம் பலம் ½

சாற்றில் அரைத்துக் கலக்கி முதிர் பருவத்தில் வடித்து தேய்த்து 2 மணிக்குள் குளிக்கவும் (நல்ல மிளகு முக்கால் பங்கும் மதுரம் கால் பங்கும் வீதம் சேர்த்தாலும் குற்றமில்லை)

பல் வலிக்கு.

கொம்பரக்கு பலம் கால்	சீனக்காரம் பலம் மாகாணி.
சுக்கு பலம் அரைக்கால்	

நாழி தண்ணீரில் கஷாயமிட்டு சிறு சூட்டோடு கொப்பளிக்கவும்.

பிரளிக்கும் இரைக்கும்.

ரண்டு தேங்காய் பால் புழிந்து உழக்கு முக்கம் பர்லை சாறு கூடவிட்டு மூன்று கழஞ்சு காயமும் அரைத்து கலக்கி காய்த்து மெழுகு பதத்தில் வடித்து அரைக்கரண்டி வீதம் கொடுக்கவும்.

புழுக்கடிக்கு,

கெவுரி பாஷாணத்தை எலுமிச்சம் பழச் சாற்றில் அரைத்து (புழுக்கட்டி ஸ்தலத்தில் ஒரு நாள் பூசினல் போதும், புழுக்கடி மாறும்.
(பொள்ளினல் பயப்படவேண்டாம்)

வியாதிகள் நீர்கட்டுக்களுக்கு பூச்சு.

நள்ளி வேர்
நஞ்சறுத்தான் வேர்
வெண்காக்கலம் வேர்

See page 93

எலித்தடம் வேர்.

ஒவ்வொன்றும் சமமாய் எடுத்து உமிழ்நீரில் அரைத்து பூசவும்.

மூலபவுந்திரம் புண்களுக்கு.

ஆடுதீண்டாப்பாளைச்சாறு உழக்கு.
ஆடுதீண்டாப்பாளை வேர் கழு 3.
நல்லெண்ணெய் உழக்கு
தத்தம் கழு 1. தருசு கழு ½ மணல் பருவம்
புண்ணுக்கும் ஆகும்.

புகை.

குந்திரிக்கம் சந்தனம் பொடித்து சிரட்டைத்தீயில் போட்டு புகைகாட்டவும்.

சுரக்கழிச்சலுக்கு விடயாதி (குழம்பு)

அதிவிடயம் காந்தம் - லிங்கம் சாதிக்காய் காயம் அபின் வகைக்கு கழு 1 (இதில் சாதிக்காயையும் விடயத்தையும் வறுக்க வேண்டும்) ஒருபலம் வெள்ளுள்ளி வாட்டி தயிலமெடுத்து நன்றாய் அரைக்க வேண்டும்-சுரத்துக்கு தனிமையாகவும் சாதாரண கழிச்சல்களுக்கு கருப்புக்கட்டி சர்க்கரை இந்த அநுபானங்களிலும் கொடுக்கலாம்.

புரவுக்கு.

நல்லெண்ணெய் நாழி, புங்கம்பால் ஆழாக்கு யாழ்பாணம் புகையிலை அபின் வகைக்கு கழு 1. கருஞ்சீரகம் கழு 4.

அதிகமாய் போகும் சுரோணிதத்துக்கு நல்ல மிளகை பொட்டணம் கட்டி கருக்குத் தண்ணீரில் கஷாயமிட்டு தினம் ரண்டு நேரம் கொடுத்து வரவும். இச்சக பத்தியம்.

page 88 of this book.

கெர்ப்பிணிக்கு - சுரோணிதப் போக்கு

நீர்க்கடுப்பு - தரிப்புக்கு

அதிமதுரம் - கொத்தமல்லி, நல்சீரகம் வகைக்கு கழு 3. துளசி இலை, வில்லை வேர் குடங்கல், தும்பைப்பூ வகைக்குப் பிடி 1 வடலிக் குருத் தோலை ஒன்று, தண்ணீர் 6 படி நாழி ஆக்கி மூன்று நாள் ஆறு நேரம்.

மாட்டுக் காலுல் நாவுரி ஆக்கி மூன்று நாள் மூன்று நேரம் சிறுசூட்டோடு கொடுக்கவும்.

காய்ச்சலில் மண்டைக்கு தைலம்

மண்டைவலிக்கு எண்ணெய் கொட்டம், சந்தனம், ராமிச்சு,

சமுத்திராப்பழம் கருஞ்சீரகம், நல்ல மிளகு, வெள்ளுள்ளி வகைக்கு சமன் எல்லாம் வறுத்து வேப்பெண்ணெயில் அரைத்து வேப்பெண்ணெயில் காய்த்து மணக்கிற பருவத்திலிறக்கி தலையில் போட சுகம்.

எந்த சன்னிக்கும் உள்ளுக்கும் ஒற்றலும்.

வெள்ளைப்பூடு, கட்டிச் சனி ஏரயற வகைக்கு கழஞ்சு 2 வாங்கி நாலு முட்டை மஞ்சள் கருவும் கூட்டி இஞ்சிச் சாறு விட்டரைத்து குப்பை மேனி வேரும் கொழிஞ்சி வேரும் முருங்கைப்பட்டைச்சாற்றில் அரைத்து அரைத்து ரண்டு மருந்தும் துணியில் தடவி வேப்பின் விறகில் தீக்கொழுத்தி, அந்த தீயைக் கொண்டு வாட்டிப் புழிந்த எண்ணெய் எடுத்து எண்ணெய் உள்ளுக்கு கொடுக்கவும், துணியும் மருந்தும் வேப்பெண்ணெய் விட்டு ஒற்றல்.

(தண்ணீர் கொடுக்கக் கூடாது. சோறு கொடுக்க வேண்டும். தண்ணீர் வாயிலிருந்து ஊறும். தண்ணீர் கேளாது)

***

சுரோணிதம் நிறுத்த.

உழக்கு எள்ளை நன்றாய் கழுவி சுத்தம் செய்து ஊக்கி வறுத்து சிவந்து வரும் போது ஒரு படித்தண்ணீர் விட்டு ஒன்றரை உழக்காக வற்றவைத்து அதில் ரண்டு சக்கரத்தின் அபினை உரசி கலக்கி குப்பியில் அடைத்து மூன்று நேரமாய் கொடுக்கவும் பத்தியம் சாதாரணம். Tried - Good. Very effective.

சில் விஷத்துக்கு.

பெரியோருக்கும் சிறியோருக்கும் ஆகும்.

நல்சீரகம் கருஞ்சீரகம் நல்ல மிளகு வகைக்கு கழஞ்சு 4 உருக்கு நெய் நாழி, கொடக் கொடிசாறு நாழி மிளகு பொட்டும் பருவம் * நாலு சக்கரத்து ட்டு, அளவு உள்ளுக்கும் கொடுக்கலாம் - மூன்று நாள் ஆறு நேரம் - தினை - சாமை அரிசிக்கஞ்சி பத்தியம். உப்பு ஆகாது - மருந்தை சாகத்தில் அரைத்து சேர்க்கவும்.

***

பல்விளக்க பொடி.

வரட்டுப்பாக்கு, காவிக்கட்டி, நீலத்துருசு, திரி சாதி, மாயக்காய், சுக்கு, வால் மிளகு இந்துப்பு சினக்காரம் வகைக்கு கழஞ்சு 1 சிரட்டைக் கரி உரி சினக்காரத்தையும் நீலத்துருசையும் நன்றாய் பொரிக்கவும் மற்ற மருந்துகளை இளவறுப்பு வறுக்கவும் எல்லாம் ஒன்றாயிடித்து வடிவெடுத்து காலை மாலை பல் துலக்கவும், சுடு தண்ணீர் கொப்பளிக்கவும் - பல்லில் ரெத்தம் வடிதல், வாய் நாற்றம் ஊண் தடிப்பு பல் வலி இவை தீரும்.

***

கடுகு ரோகணிக் குளிகை.

பொன்னப்பா ஓர் குளிகை சொர்ண மேது

பூலோகம் பரலோகம் ரண்டும மெய்க்கும்

என்னப்பா இதின் பெருமை சொல்லப் போறேன்
இயல் கடுகு ரோகணியாம் குளிகையென்பார்
வின்னப்பா கடுகு ரோகனிதான்றிக்காயும்
வெண்காரம் கார்கடுக்காய் சுக்கு திற்பிலி
சென்னப்பா வகை வகைக்கு கழஞ்சு ஒன்று
சேர்த்து இடி நேர்வாளம் கழஞ்சு ஆறே.

ஆறுன நேர்வாளம் சுத்தி செய்து
அருகிருக்கும் தோடெடுத்து நஞ்சு போக்கி
மாறுன நேர்வாளம் வேறேவைத்து
மற்றதொரு மருந்தாறும் கல்வத்திலிட்டு
சாறுன இருமிச்சம்பழச்சாறு விட்டு
சாமமொன்றுதானரைத்த பின்பு கேளு
பாறுனவாளமது அரைத்துக் கொண்டு
பருங்குன்றி உண்டை செய்து நிழலிலுலர்த்தி

உலர்த்தி விட்ட உண்டைதனை சுரத்தின் மேல்
ஊன்றி நிற்கும் வாயுவோடு பித்தம் போக
அனத்திவிட்ட வடி கஞ்சி அல்லால் வென்னீர்
அதுவன்றி பழச்சாற்றை வடிவெடுத்து
மலத்தை விடும் வாந்தியுமாய் பேதியாகி
வாயுபித்தம் கீழ் நோக்கி சாடிப் போகும்
பொலத்தி விட்ட வேர் கொம்பு கஷாயத்தூட்ட
போகுமடா குளிர்களெல்லாம் போகும்தானே.

தானென்ற வெள்ளுள்ளி கடுகு சுக்கு
தப்பாமல் ஓமம் இந்த நாலுமப்பா
ஏனென்ற நீர்விட்டு அவித்து வாங்கி
இக்குடி நீர் தன்னிலொரு குளிகையிட்டால்
மாவென்ற நீர் சர்த்தல் மருமுந்தீதல்
மாறுத வாய்வு விம்மல் மயக்கம் வீக்கம் சோம்பல்
தேனென்ற கொட்டாவி மயக்கம் வீக்கம்
தீராத மாந்த சன்னி தீர்ந்து போகும்.

தீர்ந்து போகும் பல பிணியும் அதிலப்பா தீராத தலைவலியும் சுழியன் தீரும்.

***

ஏது மாந்தத்துக்கும்.

எருமை நெய், முருக்கிலைச் சாறு வகைக்கு
உழக்கு முறுக காய்த்துக் கொடுக்கத் தீரும்.

***

சர்த்தலுக்கு உபாயம்.

வில்லை முதாமணி சித்தா முட்டியின் வேர் கரும்புதடி
நெல்லுப் பொரிமல்லி சுண்டி அதிமதுரம் ஏலம் உயர்
வணிகர்நாகரி கிராம்புடன்
நல்ல முந்திரிகை சந்தம் வெந்த திருநாழி நீரிலிட்டு சீனிமேல்
அல்லல் பித்தம் அத்துடன் கழிச்சல் அரோசிய வாந்தி சுகமாகுமே.

(வணிகர்-பெருஞ்சீரகம், நாகரி-இஞ்சி)

***

பிள்ளைகளுக்கு புண்ணுக்கு.

(மூலத்தில், கொப்புளில், கழுத்தடி, இவைகளில் புண்ணுக்கு)

ரச கர்ப்பூரம், கழஞ்சு 1 தேங்காய் நெய் உழக்கு சங்குக் குப்பிச் சாறு
உழக்கு, மணல் பருவம். கோழித்தூவல் கொண்டு தொட்டு ~~விரணம்~~ விரணத்
தில் போடவும்.

***

குழந்தைகளை குளிப்பிக்க.

தெற்றி சமூலம், குச்சங்காய், கெருடக் கொடிவேர், சீலாந்திப்பட்டை
சந்தனம், ராமிச்சு நெல்லிக்காய் தோடு, வகைக்குப்பலம், 1 வீதம் இரு
குறுணி தண்ணீரில் ஊறப்போட்டு மறுநாள் காலையில் அந்த தண்ணீரும்
குளிப்பித்து பின்னும் இருகுறுணி தண்ணீர் ஊற்றி இப்படி 7 நாள் குளிப்பிக்க
தேகத்திலிருக்கும் துர்நீர் சிகப்பு நீர் விடும்.

***

கெற்ப வாயுவுக்கு.

கும்மட்டிக் காய்ச்சாறு படி 1. மஞ்சள் கழஞ்சு 4 நேர்வாளம் கழஞ்சு 4
சிற்றாமணக்கெண்ணெய் படி1.

***

பிளவை வற்ற

நள்ளி வேர் நஞ்சறுத்தான் வேர், முருங்கை வேர் நல்ல மிளகு, அரைத்துப்
பூசவும்.

***

தமுதலை போல் வந்த வராலுக்கு.

கஸ்தூரி மஞ்சள் கழஞ்சு 2. சாட்டுக் கொன்னைத் தளிர் ஒரு பிடி பச்சைத்
தண்ணீரில் அரைத்து பச்சையாய் பூசவும் சுகமாகும்.

***

நாய் முள்ளுக்கு.

ஒரு ஆட்டின் இரலை அரிந்து அதில் முக்கால்படி சீரகத்தைப் போட்டு விரவி உலர்த்தி இடித்து வடிவெடுத்து வெருக்கடி வீதம் தின்னவும்.

(அவித்தும் உண்கலாம், பச்சையாகவும் உண்கலாம்)

***

மூலத்தில் பேதிக்குவைக்க

வடக்கன் புகையிலை, நல்ல மிளகு சமன் ஆமணக்கெண்ணெய் விட்டு குழம்பரைத்து வைக்க பேதியாகும்.

***

கரப்பனுக்கு.

உருக்கு நெய் உழக்கு, நல் சீரகம் அதிமதுரம், சீலாந்தி தளிர், சிவந்த நிறமுள்ள குறத்திப் பச்சிலை நாலு மருந்தும் வகைக்கு கழ 1 வீதம் அரைத்து மணல் பருவம் - உள்ளுக்கும் கொடுக்கலாம்

***

மண்டைக்கரப்பனுக்கு.

பச்சைத் தேங்காய் நெய் உழக்கு, முருங்கைப் பூ பிடி 1 அரைத்துக் கலக்கி மணலிலும் முறுகக் காய்த்து தேய்த்து சீலாந்திப்பட்டை போட்டு வென்னீர் காய்த்து குளிப்பிக்கவும்.

பெரியோருக்கு-எல்லா வாயுவிக்கும்.

அரைக்கலசம் ஒற்றைத்துள்ளி பதனீரில் நாழி பழுத்த காந்தாரி மிளகும் கழஞ்சு சுக்கும் சிறு புதிய குடக் கலசத்தில்போட்டு முதலாவது வாழை இலை கொண்டு வண்டு கட்டி அதின் மேல் சீலை வண்டு கட்டி அதின் மேலி சீலை மண்செய்து சாணக்குழியில் 40 நாள் புதைத்து வைத்து பிறகு எடுத்துப் பச்சைப் பாக்களவு தின்று வர ஏதுவாயுவும் நீங்கும்.

சாதிலிங்கம் கட்ட.

முதலாவது புளியம்பொருக்கையை ஓட்டின் மேல் வைத்து தீயிவிட்டு ஊதி அதில் மருந்தை வைத்து முதல் மூன்று நாழிகை முலைப் பால் சுருக்கு இரண்டாவது மூன்று நாழிகை இருமிச்சம்பழச்சாற்றில் சுருக்கு பிறகு சாதிலிங்க இடைகூடன் சாம்பிருணி ரண்டையும் பொடித்து மருந்தில் அப்பி தீக்கொழுத்தி விடவும் வெந்த பின் மேல் மருந்துகளை இழைத்து தள்ளிவிட்டு உபயோகிக்கவும்.

***

தாளகம் கட்ட.

ஒரு ஓட்டில் கல் சுண்ணும்புக்கட்டியை வைத்து அதின் மேல் மருந்தை

வைத்து அதின் மேலும் கல் சுண்ணாம்புக் கட்டியை வைத்து கழுதை மூத்திரம் தளிக்கவும் இப்படி 7 தரம் சுருக்குக் கொடுத்து பிறகுக் கழுவி வெய்யிலில் வைத்து உலர்க்கி ஒரு ஓட்டில் வைத்து ஊதி தும்பை இலைச்சாறு விட்டு விட்டு இப்படி ரண்டு மூன்று தரம் விட்டு வந்தால் பிறகு இளகி உருகும் அப்போது சிறு சூட்டோடு கை கொண்டு திரட்டி உருட்டலாம்.

***

வேறு.

வெடியுப்பு, சீனக்காரம் வகைக்கு சமமாய் பொடித்துப்போட்டு தீயிட உருகி கட்டும். வயிற்றுக்கட்டி வாயுகள் ருக்குஆகும். பச்சைத் தண்ணீரில் கலக்கி கொடுக்கலாம்.

வெடியுப்பு சீனக்காரம் வகைக்குப் பலம் அரை வீதம் போட்டு சங்குத் திராவகம் எடுக்கலாம் பொடித்து குடக்கலசத்தில் போட்டு குப்பி வைத்து சீலை மண் செய்து தீயிட திராவகம் வரும்.

***

முக்கிரணிக்கு.

தேங்காய் நெய் உழக்கு இருமிச்சம் பழச்சாறு கொடுப்பைச் சாறு வகைக்கு உழக்கு சிறு தேன் ஆழாக்கு கருஞ்சீரகத் கழு 3 அபின் ~~கழஞ்சு~~ கழஞ்சல் மருந்தைச் சாற்றில் அரைத்துக் கலக்கி கொதிக்கும் போது எண்ணெய் விட்டு செளியாகும்போது தேன்விட்டு மெழுகில் வடித்து நாசியில் அடைக்க சுகமாகும்.

***

மண்டை கரப்பனுக்கு.

முருங்கை இலை எருக்கன் பூசங்குக்குப்பி
மூடில்லாத்தாளி தலைசூடிச்சாறு
நெருங்கல் ஓர் வகைக்குச்சாறு உழக்கு கொண்டு
நீ உருக்குத் தெங்கெண்ணெய் உரிதான் சேர்த்து
கருங்கவே சீர கார்கோல் மிளகு வயம்பு ஈருள்ளி
கழஞ்சரைத்துக் கரைத்தெரித்து வடித்துப் பூச
சிரங்கு பல கரப்பன் மண்டைக் கரப்பனோடு
தீராத கரப்பனெல்லாம் தீரும்தானே.

***

+ குழந்தைகளுக்கு மூலத்தில் புண்ணுக்கு.

துருசை பாலில் அல்லது தண்ணீரில் உரைத்துப் புண்ணில் போட சுகம்.

***

சூதக வாயுவுக்கு குழம்பு (பாத்திரமங்கலத்து ஆசான்)

ஆடாதோடை தூதுளை, பிரமி வேப்பு, அமுது வள்ளி, ஆடுதீண்டாய்

வேலிப்பருத்தியிலை - முடில்லாத் தாளி, மலைத்தாங்கி யிலை, ஆழாக்கு முலைப்பாலில் தல்லிப்புழிந்து ஒரு நாளைக்கு ஒரு நேரம் வீதம் 3 நாள் 3 நேரம் கொடுக்கவும் பத்தியம் உப்பு புளி தள்ளவும்.

***

காது குத்தலுக்கு.

தேங்காய் எண்ணெயில் முருங்கைப்பூ போட்டு சிவக்க காய்த்து காதில் விட சுகம்.

***

மூரைத்தில் கொமுத்துக்கு (கை கண்டதாம்)

உழக்கு வேப்பெண்ணெயில் மூன்று நண்டின் சாறும் மூன்று கழஞ்சு தேவதாரமும் பொடித்திட்டு முதிரக் காய்த்து - போட்டு நன்றாய் தேய்க்கவும்வென்னீரி விட சுகம்.

***

சிறு குழந்தைகளுக்கு கண்ணில் அதைப்புக்கும்.

காய்ச்சல் தணுகாவும் கஷாயம்.

நல்சீரகம் க 1. வில்லை இலை - விஷ்ணு கிராந்தி வகைக்குப் பிடி 1 வீதம் நாழித்தண்ணீரில் கஷாயமிட்டு ஆழாக்கு ஆக்கி ஒரு கரண்டி வீதம் தினம் 2 நேரம்.

***

தோடகை கரப்பனுக்கு.

உழக்குத் தேங்காய் எண்ணெயில் நாலு ஐந்து பயற்றங்கள்ளில்பழுப்பும் மூன்று கழஞ்சு கருஞ்சீரகமும் அரைத்துக் கலக்கி முறுகக் காய்ச்சி தோடகையில் போட்டு குளிப்பிக்கவும். பனங்காய் களியும் வைக்கவேண்டும்.

***

கண்பூவுக்கு.

கண்ணுப்பு ளையும் (சமூலம்) நாய் கடுகு (இலை கொழுந்து) சதைத்து கண்ணில் காட்டி காலில் கட்டி தண்ணீர் விடவும்.

கண்ணில் கட்டி சிகப்புக்கு.

செம்பிரா கிழங்கின் இலையைப் பறித்து வைத்துக் கொண்டு அந்த இலையைக் கசக்கி கண்ணில் விட்டால் சிகப்பு மாறும்.

***

80 வாதத்துக்கும் கஷாயம்.

கழஞ்சிப் பருப்பு, கருஞ்சீரகம், நல் சீரகம், வகைக்கு கழ 4 வெள்ளுள்ளி 2, தேவதாரம் பலம் 4 கருங்குறிஞ்சி வேர் பலம் 4 காணம் படி 1 தண்ணீர் படி அடை கஷாயம் ரண்டு படியாக்கி ஆழாக்கு வீதம் கொஞ்சம் பஞ்ச சாரையும் போட்டு 3 நாள் 6 நேரம் - முருங்கையிலை பத்தியம்.

வாத நீருக்குப் பூச்சு.

வெள்ளுள்ளி, கடுகு, மஞ்சள், சுக்கு, மிளகு, நாங்கணம், வயம்பு-

பாளை காணுங்குள்ளி, முறிஞ்சா இஞ்சி நவரை இவைகளின் இலைச்சாறு
வகைக்கு உழக்கு| சிம்பு, சிறு நாள்ப்பூ இந்துப்பு, வால்
மிளகு, வெள்ளுள்ளி நல் சீரகம், கருஞ்சீரகம் சுக்கு மிளகு திற்பிலி, அமுக்
கூரம், ஓமம் காயம் ஏலம் தாளிச பத்திரி கருவாப்பட்டை கடுக்காய்
வகைக்கு கழ 2 பஞ்ச சாரை பலம் 4 தேன், நெய், வகைக்கு
உழக்கு (தேன் ஆழாக்கும் போதும் நெய் குறையக்கூடாது) சாறு
களை அளந்து விட்டு ஒன்றாய் சேர்த்து அரித்து ஊற்றி பஞ்ச
சாரையும் சேர்த்து காய்ச்சி கொஞ்சம் இறுகும்போது மருந்து
தூற்றி கிண்டி துவண்டு சட்டுவத்தில் ஒட்டாத பருவத்தில் நெய்
விட்டுக் கிண்டி அடுத்து இறக்கி வைத்துக் கொண்டு தேன் விட்டுக் கிண்டி
பருவத்தில் முதிர்ந்து போகாமல் எடுக்கவும் ஒரு நெல்லிக்காயளவு 12
நாள் 24 நேரம் இச்சாபத்தியமாய் தின்னவும் பிறகு குளித்த நாள்
முதல் 6 நாள் 12 நேரம் பத்தியம் நெய்யில்லா மீனும்.

(வறட்சை தேகத்துக்கு நெய் – சாதாரண தேகத்துக்கு
ஆமணக்கெண்ணெயும் சேர்க்கலாம்)

காய்ச்சலில் தலை விஷம், வலி,

அரிச்சனி ஞாயிறு கழ. 2 மயில்பீலி கழ. 2 இரண்டு மருந்தும் ஒன்றாய் வறுத்து
வேப்பெண்ணெய் விட்டு அரைத்து வேப்பெண்ணெய் விட்டுக் கொதிப்பித்து
சிவந்த பருவத்தில் தலையில் வைக்கவும்.

***

வாந்திக்கு. (Cholera)

வீரம் கி. 4 சீனம் கி. 8 வெடியுப்பு கி. 16 வீரத்தைச் சட்டி
யிலிட்டு கீழே தீயிட்டு சூடானவுடன் வீரம் முங்க சாராயம் விடவும்
அது வற்றினவுடன் பின்னும் இப்படியாக 3 சுருக்குக் கொடுத்து பிறகு
மூன்று மருந்தையும் வெவ்வேறே பொடித்து வைத்துக் கொண்டு சீனம், உப்பு
பாதி பாதியாய் வைத்துக் கொண்டு அடியில் உப்பு வைக்கவும் அதின் மேல்
சீனம் வைக்கவும். அதின் மேல் வீரம் வைக்கவும். அதின்
மேல் சீனம் வைக்கவும். அதின் மேல் உப்பு வைக்கவும்.. சட்டிகமுத்தி
மூன்று சீலை மண் செய்து இரண்டு விரல் வீதி கொதும்பு வைத்து 5 நாழிகை
தீயிடவும் – பிறகு எடுத்து அம்மியில் வைத்து அரைத்து குப்பியில் அடைத்து
வைத்துக் கொண்டு நல்ல தேகத்துக் மஞ்சாடியிடை சாராயத்தில்
கொடுக்கவும் – 12 நேரம் வரை கொடுக்கலாம். சாத்தியம் – கண்ணில்
சிகப்பு காணும் – பேதி சளியாய் விழும் – அப்போது காப்பியில் முட்டை
அடித்து கொடுக்க வேண்டும் – பசுப்பால் விட்டும் கொடுக்கலாம்.

***

வறுமத்தில் சன்னிக்கு.

கள்ளிப்பால் ~~உறக்குத்~~ ஊமத்தஞ்சாற்றில் அரைத்து வெதுப்பி பூசவும்.

***

சகல வாயுகளுக்கும்.

இருமிச்சங்காயளவு மூக்கறைச்சாரணை வேர் ஒன்றரைப்பலம் வெள்ளைப்பூண்டு - பசும்பால் கால்படி - தண்ணீர் அரைக்கால் படி.

தண்ணீர் பாலில் முழு அரிசியாய் வெள்ளுள்ளியை அவித்து வெந்து வருகிற பருவத்தில் சாரணை வேரை அரைத்து அதில் கலக்கி ஒரு கொதி கொதித்தவுடன் இறக்கி ரண்டு நெல்லிக்காயளவு சற்குரை போட்டுக் கிண்டி ஆறின பிறகு காலை தோறும் மூன்று நாள் இப்படி கொடுக்கவும் பத்தியம் பொடியரிசிக் கஞ்சி.

***

மஞ்சள் நோவுக்கு.

ஒரு நெல்லிக்காயளவு சீலாந்திப் பழுப்பு அரைத்து
நாலு ஐந்து நண்டு சன்தத்து சாறெடுத்து
அதில் கலக்கி மூன்று நாள் ஆறு நேரம் -
முருங்கையிலை பத்தியம் - 5-ம் நாள் உருக்கெண்ணெய்
தேய்த்து சூடாற குளிக்கவும்.

சகல காசம் ஈளைக்கு,

முட்டையிட பருவமுள்ள கோழி ஒன்று மிளகு பலம் ஒன்று. ஒன்றிரண்டாய் உடைத்து கோழி வயற்றில் அடைத்து தைத்துக் கெட்டி நாலு படி தண்ணீரில் கஷாயமிட்டு அரைப்படியாக்கி காலையில் குடிக்கவும்-இப்படி காலை தோறும் மூன்று நாள் மூன்று கோழி - ஆறு மாசத்துக்குப்பின் ஒரு வைப்பு-பத்தியமில்லை. பிள்ளைகளுக்கு கொடுக்கலாம்.

***

குளிர் காய்ச்சலுக்கு.

ஒரு பிடி நல்ல மிளகும் ரண்டு கழஞ்சு வெள்ளைப் பூடும் வென்னீரில் அரைத்துக் கலக்கி குளிர்வரும் சமையம் பார்த்து கொடுக்கவும். இப்படி 3 நாள் 3 நேரம் - பத்தியமில்லை.

மஞ்சள் நோவுக்கு.

மூடில்லாத்தாளியை இடித்து பசுவின் பாலில் கலக்கி 3 நாள் 6 நேரம் - கடும் பத்தியம்.

***

வாயுவுக்கு.

நத்தை சூரிவேர், ஆனை சவ்ட்டடி வேர் தொலிகள்; சமனுன் எடுத்து ஒரு புன்னை காய் வீதம் பழந்தண்ணீரில் அரைத்துக் கலக்கி 3 நாள் 6 நேரம் கொடுககவும் - கடும் பத்தியம் - கோரை வாத்தக்கும் ஆகும்.

***

க்ஷயத்துககு கஷாயம்.

ரண்டு சக்கரைத்துக்கு சித்தரைத்தையை வாங்கி 4 படி தண்ணீரில் கஷாய மிட்டு உரியாக்கி அதில் ஒரு சக்கரத்தின் சீனிக் கற்கண்டு பொடித்திட்டு வடிகட்டி வைத்துக் கொண்டு மூன்று நாள் ஆறு நேரம் குடிக்கவும் - இச்சா பத்தியம்.

***

கிரிசத்துக்கு "கறுத்த வட்டு".

தாமரை வளையம், வல்லாரை புடோலம், கொடுப்பை, மொசு மொசுக்கை முலைப்பால் கையாந்த கரைவகைக்கு சாகம் ஆழாக்கு நண்டு கொழுப்பு, மிசிஃ முட்டை ப வகைக்கு பலம் கால் - வெள்ளாட்டு மூளை 2 மதுரம் கொட்டம் ஏலம் இலவங்கம் சுக்கு கோரக்கிழங்கு நல்ல மிளகு சந்தனம் வகைக்கு 1 - மூறி மருந்தையெல்லாம் பொடி பண்ணி வைத்துக் கொண்டு அரைக்கவும் எல்லாம் சேர்த்து அரைத்தபின் கடைசியில் நறு நெய் மாகாணிபடிவிட்டு அரைத்து குழம்பாக்கி கால் ரூபாய் வீதியில் வட்டுப் பிடித்து உணக்கவும். ஆட்டின் பச்சைப் பாலில் அரைத்து கொதிப்பிக் காமல் மதிப்பு வைத்து சாயங்காலம் வெந்நீர் அல்லது பச்சைத்தண்ணீர் விட்வும் - பித்தம் 44-ம் கிரிசம் 18-ம் மண்டை பித்தம், சிரசில் வறட்சை- சிரசு காந்தல் இதுகள் தீரும் - பத்தியம் தயிரும் சோறும்- காற்றும் வெயிலும் கொள்ளாமல் முறியில் சூட்சிக்கவும். உள்ளுக்கு பேரண்ட பற்பம் கொடுக்கவும் (நல்ல முறையாம்).

***

பிள்ளைகள் உடம்பு தேற.

ஆலம் விழுதும் இளங்கொழுந்து அரிய தென்னம் பூவுடனே - கோல மிளகு சீரகமும் குறித்தாவின்பால் விட்டரைத்து - சீல நறு நெய் தனில் வெந்து சேர வடித்துக் கொடுத்திடுகில் - பாலருடம்பு மிகத் தேறும் பரிவாய் சொன்னர் பைந்தொடியே.

***

மேகவாத சூலை, முடக்கம் சருவ சூலைக்கும் பீனிசத்துக்கும் கருஞ் சூரைத் தயிலம்.

See page 137 of this book.

பாரப்பா கருஞ்சூரைத் தயிலந்தன்னை
பாடுகிறேன் புலத்தியனே பண்பாக் கேளு

நேரப்பா கருஞ்சூரை வேர்தானும்
நிறையாக காலதுலாம் இடித்துக் கொண்டு
சேரப்பா பாசி படி அன்பதாக
திறமதாக சேர்த்தது ஊனை தீயில் மூட்டி
நீரப்பா மூன்று நாள் ஊறிக்காய்ந்தால்
நிசமாக நாலுழியாக வாங்கே.

வாங்கிய தோர் கஷாயமதில் சேர்ப்பதற்கு
வகையான கற்கமதை வழுத்தக்கேளு
பாங்கியே திரிகடுகு திரிபலையும் ஏலம்
பச்சை யொடு கச்சோலம் சாதிக்காயும்
ஓங்கியே கருஞ்சீரகம் கார்கோல் கிராம்பு
உரைமிரு சந்தனமும் மகிலப்பூவும்
கொங்கு கொட்டம் வால் மிளகு குப்பை மஞ்சட்டி
குணமான செவ்வள்ளி அரத்தை வெப்பால்.

வெப்பான செவியம் விழாலரிசி
மேவும் இருவேலி இலவங்கம் தாரம்
மெப்பான கறி மஞ்சள் கஸ்தூரி மஞ்சள்
விரைவான ராமிச்சம் கொச்சி மஞ்சள்
ஒப்பாக மரமஞ்சள் சிறு நாகப்பூ
உத்தமனே மாஞ்சியோடு செம்பகத்தின் மொட்டு
தப்பாதே வகைக்கு இரு கழஞ்சு தூக்கி
சேர்த்திடித்து இம்மிதனில் நடத்திடாயே.

நடத்தியே கஷாயமிட்டு வாங்கி
நல்லெண்ணெய் இருநாழிதனில் சேர்த்து
படத்திவிடும் வெற்றிலையின் கொடியின் சாறும்
பகருவேன் கையாந்தகரைச்சாறுவகைக்குரியாய்
விடுதியந்த எண்ணெயில் கூட்டிச் சேர்த்து
வேதகுருபதம் போட்டந்த தயிலமதை வடிக்கும்போது
புகட்டிவிடும் பாத்திரத்தில் இடும் சரக்கு
வாட்டமில்லாகூடனேடு சாம்பிராணி
வகைக்கு ஒரு கழஞ்சாக வாங்கியேதான்
ஆட்டியே பாத்திரத்தில் இட்டுக் கொண்டு
அழகான மணல் பருவம் அறிந்து கொண்டு
கோட்டமது வராமல் குருவருளைப் போற்றி

குணமான தயிலமதை வடித்திடாயே.

வடித்த நல்ல தயிமதை முழுகும்போது
வாய்த்த புளிகசப்பினிப்பு தள்ளித்தேய்த்தால்
திடத்துடனே தீருநோய் செப்பக் கேளு
சிரசில் வளர்பீனிசமும் கப்பாலிக்குளும்
முடங்கிநின்ற மேகவாதத்தின் சூலை
முட்டு ஊவு குறுக்கு ஊவு முகவாதங்கள்
அடர்ந்து வரும் கர்ணிக நீர்தொந்த சூலை
அப்பனே பலபிணியும் அகலும்பாரே.

மாந்த சுர நிதானம்.

மாந்தசுரம்.

மந்தத்தால் பொரிமாவாலும் வரும் பழம் தின்றதாலும
தந்தத்தால் கடலை வாழை தின்றதினலே மாந்தம்
பந்தத்தால் மாந்தம் தோன்றி பலசுரமாந்தமாகும்
நித்தமாயன்று தொட்டு நீர் சுரம் தோன்றுமாகில்
வந்தது மாந்த மெட்டு வாலசுரம் உண்டாம் காணே.

அனலென போலேகாயும் அகமிட்டு உடனே தோன்றும்
கனலென மலத்தைக் கட்டும் காய்ச்சலும் பொருமல் தோன்றி
நனலென முக்கல் தோன்றி நவில் தலை அசதியாகி
குனலென சிரசும் வியர்க்கும் குறிகுண மலம் போகாதே.

கேளப்பா சீந்திமுத்தம் முருங்கையின்பூ
கொடியான காஞ்சொ(ற்)றி கறுத்த சுண்டை
நாளப்பாவெருடனெவெண்குருவிஞ்சி வேரும்
நலமான அப்பட்டின் குருந்திருேடு
வாளப்பா படவல மோடிவைகளெல்லாம்
வகைக்கு ஒரு கழஞ்சு சுக்கு மதூரம் தாரம்
மீளப்பா பற்படப்புல் நறுக்குமூலம்
மிருசரத்தை திற்பிலி ராமிச்சு மல்லி.

மல்லியொடு வகை வகைக்கு சரியாய்க் கூட்டி
வார்த்திருவாய் தோயமிருபடிதான் விட்டு
வல்லியரே அனலெரித்து எட்டொன்றுக்கி
மதலைகள்கு இருமூன்று நாள் அந்தி சந்தி

சொல்லியரே கொடுத்திடுகில் சுரங்களேது

சிறுவருக்கு பொருமல் மலம் பிடித்தமேது

முல்லைமலர் மங்கைபாலே சுரங்களேது

முன்னோர்கள் எடுத்துரைத்த முறையிதாமே.

குளிர்வாத சுரக்குணம்.

கேளப்பா தேகமெல்லாம் குளிரும் நோகும்

கெட்டி விடும் மலம்துவ்வும் கிளறும் காய்ச்சல்

வாளப்பா குளிர்விட்டு வியர்த்து வாங்கும்

வகையான நல்சுரமாய் இன்னும் தோன்றும்

நாளப்பா தாகமுண்டாம் முக்கல் தோன்றும்

நாடியதுதான் பார்க்கில் வாதம் மீறும்

பாளப்பா இச்சுரந்தான் பதினெட்டுக்குள்

பாலகர் தன் தேகம் விட்டு ஏகுமன்றே.

கஷாயம்.

சித்தரத்தை சிறுதேக்கு திற்பிலி மூலம்

சிறந்த இஞ்சி கிரி சாத்து மிளகு நிம்பம்

உற்றதொரு அப்புவிட்டு எட்டொன்றுக்கி

உறுதியுள்ள மாத்திரையும் கூடதாக்கி

எத்திசையும் பாலகர்க்கு கொடுக்கும்போது

ஏகிவிடும் வாத குளிர் சுரந்தானப்பா

குற்றமில்லா குறுமுனிவருரைத்த இந்த

குணமான மருந்தையொன்று குறித்திட்டோமே.

பித்தக் குளிர் சுரம்.

சத்திக்கும் குளிரும் பின்னே தணிவில்லா சுரமும் காயும்

புத்திக்கும் மயக்கமாகி புலப்பமும் காய்ச்சல் காணும்

நெற்றியும் விசர்க்கும் கைகால் நேசமாய் குளிர்ந்திருக்கும்

வெற்றிக்கும் விண்ணுங்காய்ந்து விளம்பு நாள் பதிமூன்றுமே.

சேற்ப சுரம்.

சொன்னார் சேற்பசுரமதுதான் தோன்றும் குளிரும பின் சுரமாய்

மன்னார் இருமும் காய்ச்சலுமாய் மலமும் பிடித்து வயறாதும்

குன்னார் விட்டு விட்டு உடனே குளிர்ந்து கால் கை அதைத்து வரும்

இன்னறிந்தக் குணங்கண்டால் இதுபோம் நாள் பதினேழே.

மாறல் குளிர் சுரம்.

குளிர்ந்து பின் சுரமே | காய்ந்து கொடு கொட்டா நாடி கொட்டி

தளர்ந்து பின் சுரமும் | தாகம் நய்யவே அதிகமாகி

இளந்தற மலம் க(ா)ட்டி இடுப்பின் கீழ்காய்ந்து விட்டு
அளந்துடன் மற்ற நாளில் கிழசுரம் பின்றுண்டாமே.

குளிர்மாந்த சுரம்.

மூலமது மிகுதியாகும் மனமது மறித்து சர்த்தல்
சிலமது போல்கால் ரண்டும் சிறு குளிர்போலதாகும்
வலுவதாய் சிறுந்தடம்பில் வந்திடும சுரமேகாய்ந்து
கலுவதாய் வீங்கிக் கொள்ளும் களந்திடும சுரமீரெட்டில்

வேனல் சுரம்.

இருமலும் காய்ச்சலாகி இருவிலா கொர்ஞ்சம் வாங்கும்
செருமலாய் நாசி தன்னில் சிறு நீரும் வடிந்து கொள்ளும்
வருமலாய் பால் சத்திக்கும் வாய் சுடும் பாலர்காப்பா
நெருமலாய் வேனல் கொண்டால் நேர் சுரமிதவுண்டாமே.

குளிர்வாய்வு சுரம்.

சுரமது தோன்றுமுன்னே *சுகமற வன்னஞ் செல்லா
பரப்பர குளிர்ச்சை தோன்றி பல்தடி மிகுதியாகி
சரசர பால் சர்த்திக்கும் சளி சோரை மிகுதிசாயும்
தீரையது மிகுதியாகி தீயாகுடல் வலிக்கும் பாரே.

எல்லாத்துக்கும் அடக்கி புட்டவியல்.

ஆடா தோடை தூதுவளை அழகாம் நொச்சி பெருந்தும்பை
போடா கண்டங்காரிசங்கு புத்தரிச் சுண்டை குழிமீண்டான்
வாடா துளசி கறுத்த சுண்டை வள்ருமுஞ்ளை முருங்கப்பூ
போடே வகைக்குப்பிடியொன்று பொருந்தும் இஞ்சி திற்பிலியே

திற்பிலி மூலம் வெள்ளுள்ளி சிறந்து மிளகு சித்தரத்தை
உற்பனமாக நிலவேரும் ஓரோவகைக்குக் கழஞ்சொன்று
செப்பரு முலையறள் பால் விட்டு சிறக்க அவித்து பிழிந்தெடுத்து
எப்பெருமானே அந்தி சந்தி ஏகிப் போகும் சுரமெல்லாம்.

- முற்றும் -

மேல்பொடி - ஏலம், திரிகடுகு, வால் மிளகு, அகிரு, மயில்பீலி,
வடகயறு, கரும்புடம், வறுத்துப் பொடியாக்கி
கொள்ளவும்-.

தயில யோகம்.

பிள்ளைகளுக்கு குளிக்க தயிலம்.

ஆமப்பா தோடை நொச்சி கண்டங்காரி
அரிய தூதுவளை இசங்கு நகரை இஞ்சி
ஓமப்பா வகைக்குரியச் சாறுவிட்டு
உற்றதொருகடைமருந்தைச் சொல்லக்கேளு

page. 142. of BOOK. No. 2.

page. 116 of Book no. 2. no 220

நாமப்பா திற்பிலி கச்சோலம் தாரம்
நல்மிளகு சனியுயகம் கொட்டம் சந்தம்
தாமப்பா சாறுதனிலே அரைத்துக் கொண்டு
சமனுக ஆட்டின்பால் கூடச்சேரே.

சேரப்பா பதந்தனிலே வடித்து வாங்கி
சேர்ந்த வலி சுமைகள் வலிமாறிப்போகும்
பாரப்பா இத்தயிலம் முழுகும் போது
பாங்கான அஸ்திசுரம் இளைபோச்சு
சுரப்பா குளிர்காய்ச்சல் மாறிப்போச்சு
சுமான தயிலமிதைக் கூறினேன் கேள்
நேரப்பா இதுபோல தயிலம் உண்டோ
நிகழ்த்தினேன் வையகத்தில் நிகழ்த்தினேனே.

முயல் தைலம். P. 120 of Book No. 2.

வலிநோய் சீர முயல் கிருதம் சலியாதுரைக்க கேள் காணில்
முசல் தானென்று அணிலொன்று முத்துப்பறவை புருவொன்று
நிசமாம் தோடை இசங்கு கத்தாரி நிசரிண்டு தைவு ஊயும்
திசமாய் கியாழமிட்டிறுத்து திரும்ப மருந்து சொல்லுகிறேன்
நிசமாம் நண்டுச்சாறுழக்கு நல்ல சங்குக்குப்பிச்சாறு
சாறும் முருங்கைச் சாறதுவும்
தயவாம் நிம்ப என்ணெயுடன்
கூறும் தாரம் சதகுப்பை குணமாம் அரத்தைகருஞ்சிரம்
தேடும் திரிகடுகு பூலாவிருக்ஷம் சேரும் பூரமுத்தமுடன்
ஈரும் வகைக்குக் கழஞ்சொன்று இடித்து அரைத்த சாற்தன்னிலே

தனிலே கலக்கி வைத்துடனே தயவாம் சுந்தலி தெண்டிவுடன்
இனிலே அணிலும் ஒன்றுடனே இடித்துச சதைத்து கூட இடு
எனிலே மெழுகு பதம் வடித்து ஏகும்போது வலி அஞ்சும்
தனிலே காட்டில் போய் ஒளிக்கும் கருத்தாய் கேளு காரிழையே.

ஊமை முட்டைத் தயிலம். P. 119 of Book 2.

ஆமப்பா முட்டையுடன் தயிலம் கேளு
அழகான முட்டை பதினைந்துடைத்து
போமப்பா சட்டிக்குள் இட்டுக் கொண்டு
பொருந்து சனியுயகமும் நிலவேர் காயம்
நாமப்பா மருந்தையெல்லாம் பொடித்துப் போட்டு

நலமாகத்தான் கூறுத்து தயிலம் வாங்கி
காமப்பா அநுபானம் தனிலே நீயும்
கருத்தாகக் கொடுத்து விடு சன்னிபோமே.

***

உள்ளித் தயிலம்.

சன்னியொடு இரைமயக்காம் இவைகள் தீர
சாற்றுகிறேன் தயிலம் ஒன்று தயவாய் கேளு
சன்னி வன்னியென்ற உள்ளியுடன் காயம் ஏலம்
வகையான இந்துப்பு நிலவேர் சுக்கு
நன்னியென்ற முசுறு முட்டை சனிஞயம்
நலமாக வகைக்கு ஒரு கழஞ்சு வாங்கி
நின்னியென்ற நிம்பெண்ணெய் உழக்கு விட்டு
நினைவாக வடித்திருந்த சன்னி போமே.

***

மாந்தத்துக்கு தயிலம்.

ஒப்பரிய காயம் வெள்ளுள்ளி ஓமம்
ஒளி பெருகும் காந்தமொடு கஸ்தூரி மஞ்சள்
மெய்ப்பெரிய வகைக்கு ஒன்று சமனாய் வாங்கி
வகையான உள்ளி நொச்சி முருக்கிலையின் சாறு
நெல்பொரியும் கூட்டி நிரம்ப எண்ணெயோடு கலந்து
நேசமுடன் ஈசனை வணங்கி அனல் மூட்டி
மெப்பரிய மெழுகு பதமானதிலே வாங்கி
மேன்மையுடன் கொண்டுவர மாந்தமது போமே.

***

வலிக்கு தயிலம்.

எருக்கிலை நொச்சி வேப்பு இசைந்த நாய் வேளை புங்கும்
மருக்காமளை கழஞ்சி வேரும் குருந்துடன் வேளை வேரும்
வருக்கன நகரையோடு வகைக்குச் சாறு சமனாய் கூட்டி
மொதுக்காவே வைத்துக் கோழிக் குடல் சோரை பூனைக்காட்டம்

பூனையின் காட்டமொடு புகழ் கிடாவதின் குடுமபி
ஆனதோர் மஞ்ஞைப் பீலி கயிந்த கரிமுசிறு முட்டை
தானென்னும் நிலவேர் சனிஞயகம் வசம்பு காயம்
ஆனபூலாவின் விருஊம் அரத்தை செஞ்சந்தனம் வெள்ளுள்ளி.

உள்ளி முக்கடுகு சிங்கி உரும்பொரி காரம்

துத்தம்//மென்னிய அசமதாகம் உறுதேவதாரம் குப்பை

மெள்ளவே வகைக் கோரொன்று கழஞ்ச தாய் வாங்கி முன்னவை

வைத்தோர் சாகந்தன்னில் தகைபெற அரைத்துக் கொள்ளே.

அரைத்ததைக் கலக்கி நன்ருய் அழகுடன் நிம்ப எண்ணெய்

உரைத்துடன் படிதான் ஒன்று உழக்கு நல்லெண்ணெய் சேர்த்து

எரித்திட திரிநாள் இன்னீச் தன்னில் இயல்மெழுபத்தில் வாங்கி

அரித்துக்காகசளவு கொள்ள அகன்றிடும வலிகளெல்லாம்

முலைப்பால் தயிலம்.

முத்தமொடு நிலவேரும் கொம்பரக்கும் முறையாக நறு நன்றி ஏலம் கொட்டம்

சித்தான சுக்கு சாதிக்காய் சந்தம் சிறப்பாக செவியமொடுகருஞ்

சீரந்தான்/// ஒத்ததொரு சங்கு புஷ்பம் நொச்சி ரண்டும் ஓகோகோ சாறு

முக்கு நிம்பெண்ணெய் ரண்டும்/// மத்ததொரு முலைப்பாலும் நாழி கூட்டி

மகிமையாய் வடித்து சடந்தன்னிலே பூசே.

***

எச்சி தயிலம்.

கேளப்பா நஞ்சறுத்தான் கழஞ்சி ஆறு

கெறுவான வசம்பு உள்ளி சனிறுயந்தான்

நாளப்பா அரத்தை வால் மிளகு சிங்கி

நலமான அக்கிரு நிலவேர் முட்டை

வேளப்பா வடகாயறு கழஞ்சு தொன்று

வேகமதாம் நொச்சிச்சாறு மேனி வேளை

சூளப்பா இசங்கு இஞ்சி தா தளையும் தோரடை

சுகமாக இண்டிநெடு சாறுழக்கே.

உழக்காகும் நிம்ப எண்ணெய் உறுதியாக

உற்றவகைச்சாறுடனே கலந்து கொண்டு

வழக்காகும் மெழுகு பதம் தனிலே வாங்கி

வகையான இஞ்சிச்சாறுதனிலே கொள்ளு

முழக்காமுள்ள எச்சி வகை கபத்தில் தோஷம்

முறையான விலாச்சுழியன் எல்லாம் தீரும

பழக்கமதாய் இந்த முறை செய்து பாரு

பாங்கான தயிலமிதைப்பாடினேனே.

***

எச்சிறு உபதேசம்.

எல்லா மருந்துகளையும் இடித்து அரைத்து சேர்க்க. 12.3.1120.

அதிமதுரம், சித்தரத்தை, நறுக்குமூலம்–இஞ்சி வெள்ளுள்ளி தருசு வகைக்கு கழஞ்சு 1 நஞ்சறுத்தான் வேர் நொச்சி கொழுந்து தைவளை குப்பை மேனி வகைக்கு பிடி 1 வேப்பெண்ணெய் நாழி, மனல் பருவம் கண்டவுடன் உடன் வடிக்க வேண்டும (மேக்கோடு) மாதேவன் பிள்ளை பெருமாள் பிள்ளை குறிப்பு.

***

முருங்கைப்பூ தயிலம்.

சொல்லுகிறேன் முருங்கைப்பூ தயிலம் கேளு
சுகமான இஞ்சி உள்ளி முருங்கைப்பூவும்
வெல்லுகிறேன் முருக்கின் வேர் நாகவல்லி
வேகமதாய் தூதளையின் இலையும் கூட்டி
நல்லுகிறேன் காயமொடு ஏலம் இந்து
நலமாக ஓர் கழஞ்சு கூடச் சேர்த்து
சில்லுகிறேன் வெள்ளூசில் அரைத்துத் தேய்த்து
கிருபையுடன் கதிர் தன்னிலே சுற்றிக் கொள்ளே.

கொள்ளடா நிம்பெண்ணெய் தனிலே நீயும்
குணமாகத் திரித்தயில முறையாய் வாங்கு
நள்ளடா இஞ்சிச் சாறுதனிலே கொள்ள
நலமான இரைமாந்தம் சன்னி போகும்
விள்ளடா இத்தயிலம் வெளி விடாதே
வேதாந்த சித்தருன்னை வைவார் பாரு
சுள்ளடா சுறுக்காகும் இத்தயிலம்
சுகமாக மாந்த வலி எல்லாம் போமே.

***

பிரளிக்குத் தயிலம்.

சொல்லுவேன் பிரளி தீர சுகம் பெற தயிலம் ஒன்று
மெல்லவே எருக்கலம் பால் ஏரண்டத்தெண்ணெய் தன்னில்
வில்லவே கலந்து காய்ச்சி விதம் பெறக்கொடுக்கும்போது
நல்லதோர் பிரளியெல்லாம் நாடாது மலமும் போமே.

***

வாதத்துக்குத் தயிலம்.

குரும்பைப் பால் ஓர் நாழி கூட்டும தும்பை ரண்டுடனே

விரும்பும் நிம்பத்தளிர் கடுகும் விதமாயரைத்துப் பலமொன்று
நரம்பக்கலக்கி மெழுகிலே நலமாய் வடித்து நீ கொடுக்க
வெரும்பும் தலைமேல் பூச மெதுவாய் தீரும் வாதமெல்லாம்.

***

பித்தத்துக்குத் தயிலம்.

வல்லாரைச்சாகம் நாழி வளர் பசுவின் நெய்யுழக்கு
மெல்லவே சீரம் ஏலம் மேவிய மதுரம் சுக்கு
நல்லதோர் உள்ளியோடு நலம்பெற அரைத்துச் சேர்த்து
மெல்லவே மெழுகில் வார்த்து மேன்மையாய் கொடுக்கப்போமே.

இதற்கு குளிக்க எண்ணெய்.

உருக்கெண்ணெய் நாழி தன்னில் உரைத்திடும் கீழ்காய்நெல்லி
நருக்கவே சாறு நாழி நய்யவே மதுரம் தானும்
பெருக்கென பலந்தானென்று பேசிடாதரைத்துப் போட்டு
வறுக்காய் வடித்து நீயும் வாகையுடன் குளிக்கப்போமே.

***

சிலேற்பனத்துக்கு நெய்.

நீல அவரிச்சாறு நாழி நினைவாய் பசுவின் நெய் உரியில்
சீலத்துடனேதான் கலந்து சிதமாம்ஞயகம் கருஞ்சீரகம்
ஏலத்துடனே திரிகடுகு எடுத்துச் சேரு பூனகம்
கோலத்துடனே சமன் கூட்டி கொடுக்க மெழுகு பதம் வடியே.

சிலேற்பனத்துக்கு குளிக்க தயிலம்.

திற்பிலி மதுரம் கொட்டம் சீரகம் மிளகு சந்தம்
உற்பவ சுக்கு கூரை உரைத்த சாம்பிராணியோடே
நல்லபெற சனிஞயகம் கூட்டி நல்லதோர் உருக்கு நெய்யில்
சேற்பமாம் நகரை இஞ்சிச்சாறுவிட்டு வடித்துத்தேயே.

***

மாந்தத்துக்கு.

சாதிக்காய் உள்ளி இந்து சரிசமன் கழஞ்சு கூட்டி
நீதிக்கா மேதி எண்ணெய் நிறை உற்ற வேலி
பாதிக்காம் பருத்திச்சாறும் பாகமாய் கலந்து கொண்டு
வேதிக்காம் மெழுகில் வார்த்து வேகமாய் கொடுக்கப்போமே.

***

5.6.62 5/6/62

கரப்பனுக்கு.

நால்ப்பா மரத்தின் தோல் நய்யவே மதுரம் கொட்டம்
கால்பெறக் கழஞ்சதொன்று கார்பசு நெய்யுழக்கு
வேர்பபடி அருகின்சாறு மேன்மையாய் நாழி கூட்டி
தார்பெற பசுவின் பாலும் ஞானது கலந்து காய்ச்சே.

குளிப்பிக்க எண்ணெய்.

நல்காரை கொடிக்காரைச்சாறு நாழி
நலமாக அதின் வேரும் பலந்தானென்று
சொல் பெறவே திரி சாதிகருத்த சீரம்
தொந்த முள்ள நல்மிளகு மதுரம் கொட்டம்
ஒல்பெறவே ஓர் கழஞ்சு சரியாய் வாங்கி
ஒச்சை பெற உருக்கு நெய் உரியாய் விட்டு
மெய்பெறவே அன்றதிலே கலக்கிக் கொண்டு
மேன்மைபெற நல்பதத்தில் வடித்துக் கொள்ளே.

***

காதுளச்சலுக்கு.

முள்ளிய முருங்கை வேரும் முற்றின் எருக்கம் வேரும்
துள்ளியும் வசம்பு நண்டு கனமுடன் காய்ந்த எண்ணெய்
துள்ளியும் உறக்க வேண்டாம் சூட்சமாய் செவியில் விட்டால்
மெள்ளவே செவி நோவெல்லாம் விட்டிடும் திண்ணந்தானே.

***

மண்டைக்குத்துக்கு.

அகத்திச்சாறு நாழிக் கூட்டி அதிரோடு சமன் நல்லெண்ணெய்
பகுத்த நல் மதுரம் ஒன்று பலமது கூடச் சேர்த்து
வகுத்த நாழி கூட்டி வகையுடன் வடித்துத் தேய்த்தால்
வெகுத்ததோர் தலை நோவெல்லாம் வேர்பட ஓடிப்போமே.

சுக்கிறனுக்கு.

திடமான நெய்யொன்றுதீத் கண்ணிலர் ற்ற
செப்புகிறேன் அத்தியுடன் பருத்திப் பிஞ்சு
அடமான நத்தை சிப்பி ஊச்சி நீரும்
ஆட்டினுட செவி ரெத்தம் பூலாவேரும
கடமான திரிபலையும் சீரகங்கள் ரண்டும்
கடைமருந்து அபினுடனே சேரக்கூட்டி
வடமான மைப்போலே ஆட்டி வாங்கி
வளர்பசுவின் நெய்யுரியில் காய்ச்சி ஊற்றே.

***

இமைப்புக்கு.

வேப்பெண்ணெய் உழக்கு தன்னில் விதமுடன் குப்பை மேனி
பூப்புடன் புன்னைக் காயும் புகட்டிட மட்டதாக
காப்புடன் நிலவேர் சனிறுயகம் வசம்பு உள்ளி
நாப்புறு சமஞய் வாங்கி நலமதாய் வடித்துக் கொள்ளே.

நாடித்தொகை சாஸ்திரம்.

அகஸ்த்தியர் முறை.

ஒதும் நாடித்தொகையும் அதில் ஊறும் வாதபித்த சேற்பன்ன வன்மையும்
நீதியாக உலகினில் சொல்லவே நிறை அரன் திரு பாதங்கள் போற்றியே
பாதியாக வடநாவின் சொல்படி பண்பதாக உரைபகர்ந்தன்போடு
சோதி மாமயிலேறு முருகனர் சொல்படி இது ஒப்புவதாகுமே.

வாதநாடி வலுவதாய் ஓடிடில் வந்துறும் வலி சீதமும் மாந்தமும்
போதமாகவே வாதமும் சேற்பமும் பொருந்தி குத்து களைப்புடன் சூலையும்
நீதமாகவே வாயுவும் மேகமும் நின்ற தீரைவாலேந்திரமாகுமாம்
பேதமில் லை மருந்தினில் தீர்ந்திடும் பேசும் பண்டிதர் வாதம் எழுங்குறி.

குறியதாகவே வாதம் அமர்ந்திடில் கூர்சீர்த்தல் திரி தோஷமாகுமாம்
நெறியதாகவே வாதம் நடந்துடன் நெருங்கிய பித்தம் தன்னேடு சேர்ந்திடில்
வெறியதாகவே கரப்பன் களைகளும் வெருளும் நல்சுரம் வேர்வை மயக்கமாம்
மறியதாகவே வாதம் கபத்தினில் மகிமையாகவே வந்திடில் தோஷமே.

பித்தம் தேரை கொடுககு போல் தெறித்திடில் பிராணன் முப்பது நாளில்
தெறித்திடும்// ஒத்தவல்லூறு தவளையின் சர்ப்பம் போல் உண்மைகண்டால்
ஒருபத்தில்மாண்டிடும்//மெத்த அரணையின்வால்துடி போலவே மீண்டும்மீண்டு வந்
தாலெட்டு நாளையில்//குத்தனும் எமன் வந்துயிர் வாங்கியே கூட்டியே
போய் எமபுரம் கொள்ளுவான்.

வாதத்தில் பித்த நாடி வளநாடி வளந்துடன் வந்து நேரே நின்றல் சன்னிவாதமாம்
போதமாமயில்கொள்வாதம் மய்யத்தில்கொண்டிடில் கிரகணி அதிசாரமாம்
சீதமுற்சயம் ∅ மண்டை கரப்பனும் சிரசுக்குத்து பீனிசமுமாகுமாம்
நீதியாகிய வாயினில் பூப்பதாம் நிறைந்த வாத விலாச்சுழிதொந்தமே.

பித்தந்தானும் எழும்பியே நின்றிடில் பிலம்தாகவே காந்தலும் தாகமாம்
ஒத்த நல்கணம்விகற்பம் கரப்புனும் ஒடும அக்கரம் தந்தநோய்வாய்க்குமே
நித்தமாறச்சுரமுடன் விக்கலும நிசமத்ாக மலத்தினில் சோரையாம்
இத்த ஈசனர் சொல்படியாகுமே் விதித்த நல்முறை வேதந்தமிழ்ப்படி.

படியதாகவே பித்தமும் சேஉஷ்பமும் பதறியே அது ஒன்றித்து கூடிடில்
குடியதாகவே சுழியும் ஈளையும் கூடும வேர்வை சுழிகணமாகுமாம்
நெடியதாகவே மாந்தமும் தாகமும் நோக்குபார்வை மயக்குமாகுமாம்
கொடியதாகவே இருமலும் எச்சியும் கொள்ளுமென அரன்சொல்படி உண்மையே.

உண்மையாகிய சேஷ்பனம் எழும்பிடில் உற்ற சன்னிமயக்கமும் தோஷமும்
நன்மையாகவே வீக்கமும் தோஷமும் நாடும் அன்னம் ருசியது கெட்டிடும்
கன்மையாகிய கரைகளும் பார்வையும் காணும் மந்தமும பொருமலும் உந்தியில்
சென்மையாகவே கண்டிடில் சொல்லுமே செந்தில் வேலன் அருள்படி நல்முறை.

முறையதாகவே சேஷ்பமும் வாதமும் உண்மையாகவே ஒன்றித்து ஓடிடில்
கறையதாக சிலேற்ப வலிகளும் காணும் சீதமும் மலம் நீர் கட்டுமாம்.

***

சுரத்தில் கழிச்சலுக்கு கஷாயம்.

ஊட்டிடவே சீவி முத்தமொடு மதுரம் சீரம்
உற்றதொரு கிராம்பு சுக்கு உலுவாய் ஓமம்
மாட்டிடவே மாங்கொட்டை மாயக்காயும்
மதியாகத்திற்பிலியும் மாநெட்டெர்று
கூட்டிடவே தாருவும் கருத்த சுண்டை
குணமாக நிறுத்தெடுத்து கஷாயம் வைத்து
தாட்டிடவே விடயமது மேலே ஈவு
சர்வ சுரக்கழிச்சலெல்லாம் பறந்து போமே.

***

சுரத்துக்கு கஷாயம்.

சித்த ரத்தை திற்பிலியின் மூலம் நல்சீரம் மிளகும் சுக்குடனே
கிரிசாத்திஞ்சி
மற்றதோர் வகை வகைக்கு கழஞ்சு ஒன்று
மகிமையுடன் கண்ணுடமூலிதானும்
பொய்த்துடனே பிடி ஒன்று கூடப் போட்டு
பொருந்து நல்ல மாத்திரையும் வைத்துத்தாக்கு
உற்றதின்ம் அப்பொழுதில் கணளோடு
உகந்த சுரம் உள்ளதெல்லாம் பறந்துபோமே.

இதில் விடவில் லையாகில்.

முருங்கை வேர்தொலி இஞ்சி வெள்ளுள்ளியும்
முசுறு முட்டை நிலவேர் பலங்கள்கால்
நெருங்கவே முலைப்பால் விட்டவித்து நீ
நய்யவெந்து பிழிந்திடு நீரதில்
பருந்து கண்டூஷ மாத்திரை மேல்பொடி
பகரும் அண்டத்திலமும் தேஷற
அருந்தவே சுரம் சன்னியும் வேர்வையும்
அய்யமான சுரங்களும் ஓடுமே.

பிரளிக்கும் இரைகடிக்கும் கஷாயம்.

முப்பலை பூவன் குறித்தல் வேர் நாகவசம்பினெடு முருக்கத்தின் வேர்
தப்பில்லா முசுட்டையுட தன்டு நல்ல முளை இலையும் புறத்தி மண்டை முருங்கைப்பூ
திப்பிலாதிஞ்சியொடு வகைக்கு நேராய்திறமாக கஷாயமிட்டுடெட்டொன்றுக்கு
ஒப்பில்லா ஏலமொடு இந்த காயம் ஓ.ஓ.ஓமேல்பொடியாய் அருந்தப்போமே

பிரளியில் கழிச்சலுண்டானல் கஷாயம்.

மாதளை இலை வேர் பிஞ்சும் மதி பெமம் பூவும் பட்டை
சீதளமுத்தம் நல்சீரம் உலுவாய் சுக்கு ஓமமுடன்
கோதளமாக கஷாயமிட்டு. கொடுக்கவே ரெத்தம் சீதம்
வாதளம் ஊச்சியோடு வயற்தடி மாறிப்போமே.

(பிரளியில் இரைகோபித்து வயறு பொருமல் சுரம் உன்டா
னும் அதில் சுழியன் சன்னி முதலானது உன்டானுலும் கஷாயம்)

இஞ்சி வெற்றிலை வெள்ளுள்ளி இதமாம் முருங்கை மலருடனே
கொஞ்சும் முருங்கை .வேர்தொலியும் கொடியதூதளை முருக்கின்வேர்
தஞ்சும் ஏலமி இந்தப்பு சாற்றும் காயம் ஓர்நிறையாய்
நஞ்சும் கொடிசேர் அரைத்துருட்டி நலமர்ய் வாட்டித்தயிலமெடு
எடுமே இன்டிலை இசங்கிலையும் எடும் தூதளை வேருடனே
பொடுமே முத்தம் சிற்றரத்தை பொருந்தும் மல்லி நல்சீரம்
தடுமே மூலம் முசுமுட்டை தாங்கும் நிலவேர் சுக்குடனே
இடுமே கஷாயம் இதுவெல்லாம் இட்டேதயிலம்மேலுறையாய்
கொடுமே திற்பிலி திரிபலையும் கொடிதாய் பொடித்து தானிட்டு
நடுமே மாத்திரை கன்றூஷம் நலமாய் உரைத்துக்கொடுத்திடுகில்
படுமே சுழியன் கபசுரங்கள் பழுதாம் பொருமல் ஓடுமென்று
வடுமே வாகடநூலதிலே வாழ்த்தும் முகளித்தானே.

சுரம் சுரம் விடாமல் குளிரானல் என்னெய்.

எட்டிக்குருந்து பிடிரன்டு இடித்துப்பிழிந்து சாகம் உரி
தட்டும் மிளகு அரைப்பலந்தான் சாகம் நேர்சேர் உருக்கென்னெய்
கொட்டும் முலைப்பால்தானுழக்கு கொடியபத்தில் தானிறக்கி
வட்டமுலை சேர் பாலகர்க்கு வலிய குளிர்சுரம் மாறிடுமே.

சுரத்தில் சர்த்தாலுக்கு.

கொத்தமல்லி கூவளம் குறுக்குமுட்டி. மலக்கட்டுக்கு கஷாயம்.
திரிபலை தி அமிர்து நல்ல கொன்றையின் குருந்தும் இஞ்சி
நெறிகடுரோணி பூவோர் வகையும் சமனாய் வாங்கி
குறியுடன் கஷாயமிட்டு சிவதைமேல்பொடியும் தூற்றி
வெறியுடன் கொள்ளும்போது வேகமாய் மலநீர்போமே.

இரைகோபித்து சர்த்தாலுண்டானல் கஷாயம்.

சுண்ணம்பு நீரில் முருங்கையின் வேர் சுகமாய் அரைத்துக் கலக்கி நன்றாய்
என்று திமத்த இந்துப்பு ஏலம் காயம் மேல் பொடியாய்
உண்ணக்கொடுக்க மாறிவிடும் ஊன்று சர்த்தால் இன்ரகோபம்
பண்ணும் பலநூ லிது பார்த்த பாடின கலைநூ லிதுதானே.

சர்த்திக்கு கஷாயம்.

ஊரில் முதலி மலர் வாங்கி உடனே உள்ளி தானிட்டு
பர்ரே வறுத்து வரும்போது பாங்கர்ம் சுண்ணு நீர்விட்டு சீராம்
கோழி வெங்காட்டம் திறமாய் இதுமேல் பொடியாய்
நேரே துடிசேர் காயம் இந்தும் நிசமாய் இட்டுக் கொடுப்போமே.

மாந்தில் இழைப்பு சீதக்கும் என் வீக்கத்துக்கும் என்ணெய்.

சாட்டுக் கொன்றைப் பட்டையது சாரும்புலந்தான் நாலாகும்
ஊட்டும் எட்டுப்படி நீரில் உடனே கஷாயம் இட்டிறுத்து
நாட்டும் கலப்பைக் கிழங்குடனே நலமாய் பாலில் சுத்தி செய்து
கூட்டும் ஓமம் உள்ளியுடன் குறிசேர் மிளகு வசம்பு மஞ்சள்.

உடனே காந்தம் காயமுடன் உறவாய் எடுநீ கழஞ்சரையாய்
படனே ஏரண்டெண்ணெயது பாங்காய் உழக்கு ஒன்றும்
திடனே நிம்பத்தயிலமது சீராய் உழக்கு கூடவிட்டு
நடனே முருங்கிலை நொச்சியிலை நாடும் கெருடக் கொடியிலையே.

இலையின் சாறுவகைச்சமனாய் இதமாய் கலக்கி அடுப்பேற்றி
நிலவாய் மெழுகு ஒரு பதம் வடித்து நிகழ்த்தும் சிறிய கரண்டிமட்டு
கொலை செய்யார் விஷமாந்தம் கொடிய இருமல் கபமுடனே
தலமேவீக்கம் விஷபாகம் தனியே ஓடும்தார்குழலே.

மாந்தத்துக்கு கஷாயம்.

வில்லை நெல்பொரி மஞ்சளிதி விரும்பும் தும்பை பொடுதலையும்
தல்லும் வேலிப் பருத்தியோடு சாரும் முத்தம் கருவேம்பு
இல்லும் ஓமம் உள்ளியுடன் இதமாய் சிராம்பு சுக்குடனே
நில்லும் திரிபலை வசம்பதுவும் நிசமாய் உலவாய் சீரகமே.

சீரத்துடனே தான் வறுத்து திறமாய் கஷாயம் இட்டிறுத்து
கூரத்துடனே குளிகையுரைத்து கொடு நீ மாந்தமெல்லாம்
பார்த்துடனே பொருமலுடன் பாராம் தாகம் தானேடும்
பேர்த்துடனே பெரியோர்கள் பேசும் நூலிது சூஷமிதே.

தாகத்துக்கு கஷாயம்.

தாலக்குருந்து ராமிச்சம். காதில் பாய்ச்சலுக்கு.

வசம்பு குக்கில் கருஞ்சீரகம் வகையாம் கூரை குந்திரிக்கம்
இசம்பும் நிலவேர் முசிறு முட்டை இதமாம் கடசேர் நன்டிறச்சி
தசம்பும் கவரிமான் வாலில் தங்கும் இறைச்சி உள்ளியுமே.

உள்ளிவகை சேர் துளசிச்சாறு ஊற்றும் நச்சறு மூலியிலை
கள்ளி இலையும் பாவையிலை கலக்கும் வகைக்கு சாறு சமம்
உள்ளே நிம்பத்தயிலமோ ஊட்டும் குரும்பத்தயிலமதும்
தெள்ளக்கலந்து மெழுகத்திலே சேரவடித்துப்பார்ச்சிடுமே.

பீனிசத்துக்கு.

குங்குமப்பூவும் கருஞ்சீரம் கூரு அபினும் சர்க்கரையும்
பங்கமறவே தானரைத்து பாங்காம் பசுவின் நெய்யதிலே
திங்கத்துடனேதான் வடித்து சீராம் நாசி தனிலொழுக்க
நங்கும் கொடி சேர் பாலகர்க்கு நாசியதின் நோய்கள் பலதறுமே.

இரைக்கும் மாந்தத்துக்கும் கஷாயம்.

See page 194 of Book No. 2. In another Book it is given as "கருவேம்பு பேய்ப்புடலை [illegible] etc". Note the 2nd drug. The difference should be verified.

கரப்பனுக்கு.

உள்ளியும் கழுதைக்காட்டம் உடனே இடித்தசாறு வாங்கி
கொள்ளும் ஏரன்டென்ணெயோடு குணமாய் கலந்து மெழுகதிலே
தெள்ளக்காய்ச்சி உள்கொடு. நீ சேரும் கரப்பன் வம்சம் அறும்
வள்ளி மணாளன் தன்னுனை வராதோடும் கரப்பினிதே.

***.

உலத்தியிலை வேர்தனை உடனே எடு நாலு கழஞ்சு
குலத்தில் பெரிய கரிய கருஞ்சீரம். குறிய நல்ல மிளகதுவும்
நிலத்தும் வகைக்கு கழஞ்சு ரண்டு நீசேர் நெய்யும் மூழாக்கு
பெலத்த பருவம் தனில் வடித்துபேணி பூசே கரப்பனறும்

கணைக்கும் கழிச்சலுக்கும் கஷாயம்.

வாழைப்பூ அல்லிதானும் வல்லாரை மொசுமொசுக்கை.
நீழக்காய் வரையின் நெல்லி கீழ்காய் நெல்லி. கொச்சங்காயும்
சூழக்காம் கொடுப்பை பழம்பாசி. சொல்லும் நல்ல. பசவியோடு
வேளக்காம். உதகம் ரண்டுபடி விட்டு. நீ வெதுப்பிக்கொள்ளே.

கொள்ளு நீ ஆவின் வெண்ணெ பாக்களவ்திலே விட்டு
மெள்ளவே அஞ்சுநாள் தான் இருபொழுது அருந்தில் வெப்பு
தள்ளியே சலமும். சோரை தனித்ததோர் கடுப்பு மூலம்
உள்ளிலே அடங்கிப் போகும் உறுகணை கழிச்சல் போமே.

சகலகணைக்கும் நெய்.

வல்லாரை குறியில் மீண்டார்ன் வகை வள்ளி பிரமரத்தின்
சொல்லாத குருந்திறேடு தொர்கை சமம் சாறு வாங்கி

இல்லா மஞ்சாதி கிராம்புடனே இடு நீ வடக்கயறு ஊமச்சி
நல்லோர் மதுரம் நல்சீரம் நாடும் ஏலம் ஓமம் யாவுமே
ஏலம் உள்ளி நல்மிளகு எடு நீ விடயம் ஓர் சமனாய்
கோலம் பெரிய நெய்நாழி கொடிய சிறுநெய்சேருமக்கு
நீலமயிலேதான் கலந்து நினைவாய் வடித்துக் காசிடைகொள்
பாலம் பெரிய கலையெல்லாம்! பாராதோடும் கண்டீரே.

பாலவாதத்துக்கு நெய்.

குருமபையின் பால் நாழி குணமாம் நிம்பக் குருந்து பிடி
நிரமும் ஒன்றரைதானெடு நீ நிசமாம் கடுகு பலம் ஒன்று
உரம்பும் தும்பை ரண்டதுவும் உடனே சாறெடு மருந்தரை நீ
விரும்பவடித்து மேல் பூச விட்டே ஓடும் வாதமுமே

வேனல் சுரத்துக்கு கஷாயம்.

சிற்றரத்தை நல்மிளகு இஞ்சி சீரம்
சிறந்ததொரு உவா சேர்மாம் பட்டொடே
பற்றியெடு கன்னறுடன மூலிதாறும்
பாங்கான ஆவரையும் கணப்பூடோடே.
எற்றிடையும் குழி மீண்டான் வல்லாரை வில் லை
எடுத்திடு நீ ஓர் வகையும் சமனாய் கூட்டி
குற்றமற கஷாயமிட்டு அருந்தும்போது
குழந்தைகள் தன் கலைவேனல் சுரங்கள் போமே.

இது முற்றும்.

copied from leaf Book (Yadu) on 23rd July 1925 Daniel.

காச்சலில் தலை கனத்துக்கும்.

தலைவிஷத்துக்கும் எண்ணெய் (தயிலம்)

வேப்பெண்ணெய் உழக்கு, நொச்சிச்சாறு உழக்கு, அரிச்சனிஞாயிறு, சித்தரத்தை சிவத்தச் சந்தனம் வகைக்கு கி. 1 மருந்துகளைச் மேற்படி சாற்றில் அரைத்துக் காய்த்துக் கொள்ளவும். (This may be used for pal thailam).

தோஷத்துக்கு.

2-வது புத்தகத்தில் 84-வது பக்கம் பார் - நெய்.
2-வது புத்தகத்தில் 203-வது பக்கம் பார் - கஷாயம்.

வேறு வயித்தியர் முறை:-- நல்ல மிளகு, சுக்கு-வயம்பு, ஓமம், வடக்கயறு (நுணா-அல்லது) மஞ்சணத்தி ரெட்டு வகைக்கு கழஞ்சு 3 வறுத்து கஷாயமிட்டு அதில்-வெற்றிலையில் சுண்ணாம்பு தடவி வாட்டிப் பிழிந்த சாறு சேர்த்துக் கொடுக்கவும், இப்படி 3 நாள் 6 நேரம்.

வேறொருடைய வேறுமுறை:-- கோரங்கிழங்கு ராமிச்சு மாதளந் தோடு நிலவிளாத்தி நெல் பொரி வகைக்கு கி. 2 வறுத்து கஷாயமிட்டு

கொஞ்சம் சர்க்கரை போட்டுக் கொள்ளவும்.

இந்த மருந்துகளில் அநுபானம் சேர்த்துக் கொடுக்கலாம். (பேதி, சாத்தூசுக்கு)

***

மேக சஞ்சீவி சூரணம்.

மேகத்தாலெழுந்து வரும் நோய்கள் தீர

விளம்புகிறேன் சஞ்சீவி சூரணத்தை

பாகந்தான் முழுப்பாகந்தனக்குச் சீனப்

பாவாறும்சுவ கெந்தம் பலம் ரண்டாகும்

தாகம் போமதி மதுரம் கூகை நீறு

தாறுமோவகைக்கு ரண்டு பலமதாக்கி

போகஞ் சேர் சாதிக்காய் பத்திரி கிரும்பு

புகழேலம் சுக்கு திற்பிலி மிளகு ? மாமே.

ஆமப்பா சீரகமும் தாளிச பத்திரி

அப்பனே மருந்துவகை ஒன்பதுநீதான்

வாமப்பா வகை வகைக்கு கழஞ் செட்டாக

வந்ததுகை எழுபத்திரண்டுஞ் சேர்த்து

வேமப்பா வெயிலிலுலர்த்தி இடித்துச் சீலை

மெதுவாக வடிகெட்டி வைத்துக் கொண்டு

ஓமப்பா சீனி சம ன் நெய்தேன் சேர்த்து

உண்மையுடனிருபொழுதோர் வெருகடிதான் கொள்ளே.

கொள்ளவே அநுபானமறிந்து கொண்டால்

குடிபோகும் மேகத்தாலெழுந்த ரோகம்

விள்ளவே கூடாத மேக காந்தல்

விரிவான புண்மேக கரப்பன் தேமல்

துள்ளவே தலை கிறுக்கல் மேகபித்தம்.

சுக்கிலத்தில் கடுப்பேறி சுழற்றும் பித்தம்

தள்ளவே தாது நஷ்டம் தொண்டைக்கட்டு

தேகமது வறண்டதொரு வறட்சை காயம்

சகலபிணி நோய்தவிர்க்கும் சஞ்சீவியாமே.

கருஞ்சூரைத் தயிலம். (பெரிய நோய்)

கண்டத்தின் மேல் வரும் நோய்களது யாவுமே.

காறுமல் ஒடுதற்கு கை கண்ட கருஞ்சூரைத்தயிலமது புகலு

வேன் காசினியில் மாவிடர்க்காய்-வண்ட நல்கானகம் வெட்டு கருஞ்சூரை

வேர்ப்பட்டை-கருவேலினது தோல், வைய்கம் பூலாதிப்பட்டை கரு

விலாஞ்சியின் குடமொடு கொம்பரக்கு-பண்டை நிரபலம்பத்து சதைத்துடன்

(handwritten margin notes: "Good for sores and itches." ; "See page 104 of this book.")

பகர் பானி நா ருபடியில் பாகமாயனல் தீ சிரகவற்றி எண்ணுயிரு பகர் கற்கமது கேள்–கொண்ட திரிகடுகுடன் திரிலகரி அக்கிரு கொட்டிதீம் அரிதகி கோலமரமஞ்சள் வங்கம்

வங்கம்மொடு தக்கோலம் அரத்தை கருஞ்சீரகம் வால்மிளகு தேவதாரம் வாங்குமேகடல் பழம் வேம்பாடம் பட்டையோடு மணக்குங் கஸ்தூ ரி மஞ்சள்–தங்க வெண் குங்கிலியம் செஞ்சந்தனம் வகை சார்ந்தெடு கழஞ்சொன்றதாய் தகர் சித்திர மூலி வேர்ப்பட்டை இரு கழஞ்சென சகலத்தும் இடித்து நன்ருய் கங்கமூறு மன்னரி கிழாய மிட்டரை கமழ் நல் வெண்ணெய் நாழி கலக்கியோ ரஞ்சு நாழிகை கழிந்த பின்னடுப்பேற்றி வன்னீ, சங்கையோர் நாளூறி கரபருவம் வடித்திடு தார் மண்டை நோய் கள் வந்தால் தருகாது நாசியில்டைத்திட சென்னி வலி சாந்தமாம் சிர சில் வை யே–வலிகுத்து உச்சியொடு காது வலித்தல் படையோடு மதனுல் சிரவாதம் முகவாதம் பிடிவலிகளேகிவிடும் சேரமுழுகு காய்ந்த வென் னீர் கர தந்தநோய்களுக்கு தயிலமது கொப்பளிக்கு கரிணிகம் மண்டை நோய்கள் காணுது பீனிசம் சூலைப்புண் இவையெல்லாம்கறண்டியுள்ளாறு

வேளையாம் நாவான சிரசுநோய் நாடாது ஓடிவிடும் நலமுடன் கடின பத்தியம் நாகமுனி உபதேசம் கை கண்ட தயிலமிது நானிலத்தோர்க்கு நலமே.

(வேலு வயித்தியர் தந்த முறை)

***

சுரத்துக்கு தல்லிப்புழிவு.

இஞ்சி, வெள்ளுள்ளி, முருங்கைப்பட்டை, கொழிஞ்சி வேர் சமனிடை (½ கழ)

பேதி அதிகம் இருந்தால் வறுத்தும் பேதி போகவில்லையானல் பச்சையாகவும் முலைப்பால் விட்டு புழிந்து அதில் அனுபானம் சேர்த்துக் கொடுக்கவும்.

சுரத்தில் சர்த்தலுக்கு.

கோரக்கிழங்கு, ராமிச்சம், நெல்பொரி, நிலவினாத்த மாதளந் தோடு–லேசாய் வறுத்து கஷாயம்.

அவசரமானுல் அனுபானங்களும் சேர்த்துக் கொள்ளவும்

(வேலு வயித்தியர்)

காதில் சீழ்வடிதலுக்கு.

பசுவின் நெய் பணம் அரை

மண்டை ஓடு–ஏலம் வகைக்கு கழ. 1

முருங்கைப்பு க.2 கசக்கின சாறு எல்லாம் ஒன்ருய் விட்டு மருந்து ரண்டையும் நன்ருய் அரைத்து நீர் வற்றும் பருவத்தில் வடித்து காதில் 1 துளி வீதம் விடவும்.

***

சிகப்பு 12-க்கும் நிதானம்.

உற்றிடும் ஆணும் பெண்ணும் முறையுடன் சரசஞ் செய்து
கற்றிடும் கற்பமுற்று கருவினிலமைக்கும் போது
சிற்றிடும் பாலகர்க்கு சிலசில வியாதி தோன்றும்
பற்றிடும் பல நோய் தன்னை பரிவுடனுரை செய்வேனே.

உரைத்திடும் சிகப்பினோடு உற்றியாம் கரப்பன் மாந்தம்
கரைத்திடும் விக்கல் கக்கல் கபங்களும் கணையும் அக்கரம்
புரைத்திடும் பிள்ளை நோய்கள் பிரியதுகு கடினமாகும்
சிரத்திடும் பன்னிரண்டான சிகப்பினை சிறப்பாய் கேளே.

கேளு நீ கிரந்தி உள்நீர் கெட்டியாம் பிற நீரஸ்தி
மாளுநீ மாங்கிஷ ரோமம் வந்திடும் அனலும் கொள்ளி
நாளு நீ கோழிக்குண்ணன் நாணமும் நல்சிகப்பு
பாளு நீ பன்னிரண்டான சிகப்புட குணத்தைச் சொல்வோம்.

கிரந்திச் சிகப்பின் குணம்.

சொல்லவே கிரந்தியென்ற சிகப்பது கடினமாகும்
நல்லவே பிறந்தபோது நலமுடனலறிச்சீறி
மல்லவே குரலும் கம்மி மலசலம் அடைத்துக் கொள்ளும்
நல்லவேவாய் கறுத்து நிமிஷத்தில் மரணமாமே.

ஆமிது பிறந்தபோது அசாத்திய மாகாவிட்டால்
நாமது மூன்று நாளிலல்லது ஐந்து நாளில்
போமிது பதினொன்று நாள் அதற்கு மேல் செல்லாதென்று
தாமது முனிவர் சொன்ன தயவினை அறிந்து பாரே.

பாரு நீ உள் நீரென்னும் பற்றிய சிகப்பின் மார்க்கம்
பேரு நீ மலசலங்கள் பிடித்துந்திபொருமிக்கொள்ளும்
நேரு நீ அயர்ந்து மாய்ந்து உறங்கிடுமுலையுண்ணாது
சேரு நீ திங்களொன்றில் சிறப்புடனிறந்து போமே.

இறப்பது பிற நீரான சிதப்பது தேகந்தன்னில்
பிறப்பது சிகப்புக்காணும் பேதித்து ~~இருசு~~ அருசி விம்மும்
சிறப்பது கை கால் தன்னில் சேரவே நீருங்காணும்
குறைப்பது மாத மூன்றில் கொல்லுமென்றரனார் சொன்னார்.

சொன்னது அஸ்தியென்ற சிகப்பது பனிக்கும் விம்மும்
நன்னயம் வயவுதோறும் நாடியே சிவந்து புண்ணும்
உன்னிய தேகம் வாடும் உடலுடன் சிவக்கும் மாயும்

கன்னல்சேர்வரஊ மொன்றில் கதறியே மரணந்தானே.

தானெனும் மாங்கிஊத்தின் தரித்திடும் சிகப்பேதென்றால்
மானெனும் தேகமெங்கும் வளர்ந்திடும் சிகப்புத் தோன்றி
கோனெனுமுடல் களத்து குப்புற முலையுண்ணாது
தானெனுமாத மாறில்சந்ததி நாசந்தானே.

நாசமாம் ரோமமென்ற சிகப்பது தேகந்தன்னில்
மாசமாய் பயறு போலே பற்றியே சிகப்புக் காணும்
ஏசவே பனியுங்காணும் எழுந்தடல் கனக்கும்கொச்சம்
காசமாய் கபமும் தோன்றும் வருஊத்தில் குணமாய் போகுமே.

குணமுடன் அனல் சிகப்பு குமுறியே பனியுண்டாகும்
அணவுடன் கபமுங் காணும் அல்பமாய்சிகப்புக்காணும்
நிணமுடன் சளிபேதிக்கும் நிச்சயமாய் பாலுண்ணாது
குணமுடன் மாதமாறில் தீருமென்றரனார் சொன்னார்.

தீருமே கொள்ளியென்று சிகப்பது பனியுண்டாகும்
நேருமே சிகப்புக்காணும் நிசமுடன் கையில் தங்காது
பாருமே சிலது பொள்ளிபற்றியும் வழிந்து காணும்
ஆருமே வருஊ மூன்றில் அப்பனே தீருந்தானே.

என்றது கோழிக்கண்ணன் இடையிலும் தொடையுங்காலில்
நன்றது துடித்து விம்மி நலமுடன் சிகப்புக்காணும்
கன்றது சிவத்தோர் நாளில் பிற்கு நாள் கறுத்துக் காணும்
பொன்றது மாதமாறில் பிள்ளையும் இறந்து போமே.

பிள்ளையே நல்சிகப்பு பெருக்கமாய் சிவப்புக்காணும்
கள்ளமாய் பனிக்கும் விம்மும் கஷ்டத்தில் நீருங்காணும்
அள்ளவே மலசலங்கள் அடைத்திடும்தீழ் வயறு மூதும்
வள்ளலே மாதம் நாலில் மாண்டிடுமுண்மைதானே.

உண்மையாய் நாகமென்ற சிகப்பது தேகந்தன்னில்
கண்மையாய் தணப்புண்டாகி கண்டமாய் வீத்து காட்டும்
வெண்மையாய் பனியுண்டாகும் வீங்கிடும் கையுங்காலும்
தன்மையாய் மாதமெட்டில் சத்திடும் நிசமாய்தானே.

காணவே திமிர் சிகப்பு களத்துடல் திமிர்த்து வீங்கும்
பூணவே பேதி கட்டி பொருமியே வயறு மூதும்
நாணமாய் மேல் மூச்சிட்டு நாட்டமாய் பாலுண்ணா

தோணவே மாத மூன்றில் சிறப்புடன் சிக்கிப்போமே.

சிக்கிய சிகப்புக்கெல்லாம் சிறப்புடன் களிப்புக் கேளு
கக்கிய பொரியும் மாவும் கருக்குடன் பழந்தாம்பூலம்
திக்கிய மலரும் பூவும் சிறந்திடும் வாடை தீபம்
முக்கியமாகப் பச்சை அரிசியுடனெல்லாங் கூட்டே.

கூட்டியே குட்டதட்டில் குணமுடன் படைத்து வைத்து
நாட்டியே ஐயும் கிலியும் நலமுடன் சவ்வும் வவ்வும்
நீட்டியே தந்தை தாயின் தோஷமும் சிகப்புந் தீரும
மாட்டியே கரப்பனேடே வந்திடும் விஷ நீருஷ்ணம்.

நீருடன் கிரந்தியோடே நின்ற தோர் பிள்ளை ரோகம்
பாருடன் நசிநசியென்று பாங்குடன் நூற்றெட்டோதி
தாருடன்வைகளெல்லாம் தாய்பிள்ளை தலையைச் சுற்றி
வாருடன் மயானந்தன்னில் வைத்து நீ மருந்து செய்யே.

குளிகை.

செய்யவே சிகப்புக்கெல்லாம் சிறந்திடுங் குளிகை கேளு
நய்யவே சாந்திர பேதி நல்லதோர் பூதாவிருஷம்
கய்யவே ரெத்த சந்தனம் கருஞ்சீரம் குங்குமப்பூ
உய்யவே மாயக்காயும் உற்றிடுஞ் சாதி பத்திரி

பத்திரி கெருடப் பச்சை பலந்தரும் தாளிசபத்திரி
உத்திரி நெரிஞ்சி வேரும் ரோசினையெல்லாங் கூட்டி
அத்திலா சிறந்த தெங்கின் இளநீரில் அரைத்துக் கூட்டி
சித்திர உழுந்து போலே சிறப்புடனுருட்டிக் கொள்ளே.

கொள்ளவே நிழலிலுலர்த்தி குறிப்புடன் வைத்துக் கொண்டு
தள்ளவே யாட்டின் பாலில் தயவுடன் கொடுக்கும்போது
பள்ளவே சிகப்புச் சாதி பன்னிரண்டும் மாறிப்போகும்
அள்ளவே முனிவர் சொன்ன அருளை நீ அறிந்து காணே.

கிருஷ்ண மாத்திரை.

காணவே சிகப்புக்கெல்லாம் கிருஷ்ணமாத்திரை தானென்று
தோணவே சாதி மூன்றும் துடித்திடும் சீரம் ரண்டும்
பேணவே மாயகாயும்பேதியும் சந்தம் ரண்டு
பூணவே அமுக்குரத்தின் கிழங்குடன் சொல்லக்கேளே.

கேளு நீ சென்னரிஞ்சில் கிளறு நச்சறுத்தான் வேரும்
பாரு நீ கெருடன் வேரும் பாங்குடன் தென்னம்பூவும்

நாலும் நீ அத்திப் பிஞ்சும் நல்ல மாதளத்தின் பிஞ்சும்
தாரு நீ தெற்றிப் பிஞ்சும் தனுத்த செம்பருத்திப்பூவும்.

பூவுடனிவைக்ளெல்லாம் பொருந்தவேர் நிறையாய்க்கூட்டி
நாவுடன் ஆட்டின் பாலில் நால் சாமமரைத்துக கொண்டு
தாவுடன் பயறு போலெ தயவுடன் நிழலிலுலர்த்தி
காவுடனநுபானத்தில் கருத்திடசிகப்பு போமே.

சீர். கேசரி என்ணெய்.

போமது பாலருக்கு பிறந்திடும் சிகப்புக்கெல்லாம்
நாமது சீர் கேசரியென்ணெயை நவிலக்கேரு
தாமது அவரிச்சாறும் தயவுடன் சீருள்ளிச்சாறு
வாமது கழுதைப்பாலும் வகை வகைக்கு உழக்காய் கூட்டே.

கூட்டியே ரன்டென்ணெய் குமுடநுரியுஞ் சேர்த்து
நாட்டியே வசம்பு ஏலம் நலமுடன் சாதி மூன்றும்
ஆட்டியேரசகற்பூரம் வகை வகை கழஞ்சி போட்டு
தீட்டியே மெழுகாய் வாங்கி சிறுவர்க்குக் கொடுக்கும்போது.

கொடுத்திடப் பத்தியங்கள் குணம் பெறப்பார்த்துக் கொன்டால்
படுத்திடப் பன்னிரன்டான சிகப்பது பறந்து போகும்
தடுத்திடப் பத்தியந்தான் தவறிநுல் வியாதியாகும்
அடுத்திட முனிவர் சொன்ன அருளாதிக் கஷாயங் கேளே.

அருளாதி கஷாயம்.

கேரு நீ கொட்டம் ஏலம் கிளறு சந்தனங்கள் ரன்டும்
நாலு நீ சாதி மூன்று நலந்தரும் கரிய சீரம்
ஆறு நீ பூதாவிருஷம் அரியதோர் செந்நெரிஞ்சில்
கோலு நீ சீனப்பாவு குலாவிய அமுக்கூரம் தானே.

தானெனு மிவைகளெல்லாம் சரியாகக் கஷாயம் செய்து
நானெனு கொடுக்கும் போது சிகப்புகள் நாடாதோடும்
தேனெனும் சிறுவருக்கு சிறந்திடும் நோய்களெல்லாம்
ஆனெனும் அறிந்து தீர்க்க ஆராலு மாகாதென்றே.

மாதளாதி குழம்பு.

முக்கடு கொடு தடிமாயக்காய் கச்சோலம் இலவங்கம்
மூப்பஉலதாளிச பத்திரி ஓமம் அரிசி வகையாறும்
மைக்குழலே திரிசாதி கசகசா மானே சிறு மூலம்
வாங்கிடு சீரகமூனது மூன்ற பிளேரு குங்ராசானி

சிக்கெனவே இடு வெண்குங்கிலியம் தேனே வெள்ளுள்ளி
சேரவே நாலேழ் ஒன்றும் வங்கயோரெராஷ கழஞ்சாக
கொக்கிருடன் விரை மொத்தக்காய் பொரிகாரம் கன்னுரம்
குறையறவே இடு சாண்டையின் வற்றல் விளாத்தியின் பிசினுமே.

ஆமே இவ்வகையானது மோர் வகை ரண்டு கழஞ்சாக
அடவுடனே எடு கோரோசனையதுவை யொரு நிறையாக
பூமாதே கருவேப்பிலையின் தளிராமே பலமது கால்
புதியதாயிடு முப்பத்தேழதை யொன்பது தன்நிறையாய்
இவ்விதை தன்னையும் வெவ்வேறாக வறுத்ததனை அடவுடனே
பொடியது வடிவது கொண்டுடன் அருதலையின் காயில்
நீ மாதே அரி நீக்கிடு முன் பொடி வைத்திடத்தினக்மே
நிச்சயமாக அடப்பிடு சீலையின் மண்ணுடனே செய்யே.

சீலையின் மண்ணிட்டாவி புடம் வைத்தே நீ எடு பின்னதனை
தேன் விட்டரை முப்பது நாழிகையான குழம்பதனை
காலமே சுண்டையின் காயளவாக அருந்திட மூன்றரை நாள்
கிரகணியோடதி சாரத்துடனே இரத்ததிசாரமோடுள்மூலம்தானதிலே
உளைவாகி யெழுந்தன சீரெத்தம் முறமையதாம் வயிற்கடியோடு
சளிசலமிது வயறூதிளவதுவும், வாலைகள் மெய்யினிலண்டிடாதோடிடும்
மாய்ந்ததிசாரமுடன் மாதளையாதி குழம்பதை மாமுனி
யாருரை செய்தனரே.

மாந்தம் அறிய..

பச்சிலை நிறம் போல் பேதி பற்றியே இருக்குமாகில்
வச்சிரை கோபமாகும் வந்திடும் தீரை மாந்தம்
கச்சிரை சர்த்தல் தோன்றும் காச்சலும் பொருமல் காணும்
உச்சிதமாக இந்த ழி உறுதீரைமாந்தமென்றே.

என்றதோர் வேப்பின் பூபோல் இருந்திடில் பாலில் மாந்தம்
நன்றதோர் பொருமல் மாந்தம் நாடிடும் சலமதாகில்
குன்றிய சூடால் மாந்தம் சுத்திடும் சோரையாகில்

சோரைதான் மலத்தில் கண்டால் தோன்றிடும் தீரையாகும்
பாரிலே பதை நீராகில் பற்றிடும் உஷ்ண தொந்தம்
நீரது போலெ பேதி நிறமது கண்டபோது
பாரிலே துட்டு மாந்தம் பரிகாரம் செய்து நில்லே.

கழிச்சலுக்கு கஷாயம்.

சொல்லுகிறேன் சிறுவருக்குக் கழிச்சல் தீர
சுருக்கான மருந்தொன்று சொல்லக்கேளு
நல்லுகிறேன் ஓமம்து ப்தின் கழஞ்சு
நன்றாக பதக்கு நீர் வைத்துக் கொண்டு
வெல்லுகிறேன் கழஞ்சொன்று பாண்டதிட்டு
விரைவாக வறுத்திடவே பொரியும் போது
செல்லுகிறேன் பதக்கு நீர் தானதிலே வார்த்து
தென்மொழியே மறுபாண்ட மடுப்பிலேற்றே

ஏற்றியே பாண்டமதில் அனலை மூட்டு
விட்டிடுவாய் பின்னுமொரு கழஞ்சு ஓமம்
மாற்றியே பொரிந்து வரும் போதிலந்த
மறுபாண்டம் தன்னிலந்த நீரைப்பாய்ச்சி
ஊற்றியே சுரசம் போலரைக்க கழஞ்சாய்
உடன் வறுத்து கஷாயமதைச் சாய்த்து சாய்த்து
பாற்றிலே பத்திரமாய் வறுத்துக் கொண்டு
பன்பாகத் தயிலம் போலுரியாம்பாரே.

பார்க்கிறது கஷாயமதை வைத்துக் கொண்டு
பாலகர்க்கு மூன்றரை நாள் அந்தி சந்தி
மாத்திரையாய் கொடுத்திடவே கடுப்பங்கேது
மைந்தருக்கு கழிச்சல் சளி ரெத்தபேதி
தோற்றுகின்ற மூலத்தில் உளைவங்கேது
சொல்லுகிறேன் வயற்கடியேது கிரணியேது
கோர்த்தெடுத்த பொருமலெங்கே மாந்தமெங்கே
கொண்டெழுந்த சுரசமதால் எல்லாம்போச்சே.

Not so good as explained here

***

page 203
Aruna. 2.

பேதி சர்த்தல் தாகம் ஊதல் முதலானதுக்கு கஷாயம் (கைகண்டதாம்)
சுக்கு, உலுவாய், ஓமம், சீரகம், வசம்பு, கிரும்பு, வெள்ளுள்ளி, திரி
பலை, மொந்தக்காய், மஞ்சளுத்திபிலை, கருவேப்பு நெட்டு வில்வை இலை,
மாநெட்டு, வேலிப்பருத்தி, பொடுதலை, நெல்பொரி வகைக்கு
சிவக்க வறுக்க வேண்டும் - கஷாயம்.

சிகப்புக்கு குளிகை;

சீனப்பா க.1 கருஞ்சூரைப்பட்டை க.1 ரெத்த சந்தனம் பூலா விருக்ஷம்
சால்திர பேதி பீதிரோகளி வகைக்கு க.1/2 குன்றிமப்பு க.1/4 குறத்திப்பச்சிலையின்

சாற்றில் அரைத்து குன்றி முத்து தரம் உருட்டவும். கரப்பன் சிகப்புக்கு - கரப்பனுக்கு - அதிமதுரம் கருஞ்சீரகம் நல்சீரகம் கஷாயத்தில்.

சிகப்புக்கு கஷாயம் (தெற்றிவேர்)

தெற்றி சமூலம், நல்துளசி சமூலம் இ மாதளம்பூ, செம்பநெரிஞ்சி சமூலம் செம்பருத்தி வேர், பூ, இலை, அருகின்வேர், தாருவேர், சாரணை வேர், ஈருள்ளி கருஞ்சூரைப்பட்டை, சீலாந்திப்பட்டை, கெருடக் கொடிவேர், நல் சீரகம், கருஞ்சீரகம், கார் கோலரிசி மாயக்காய், வகைக்கு க. ½ மல்லி திரிசாதி வகைக்கு க. ¼ மேல்பொடி கோரோசனை சிகப்பு 18-ம் மாறும் (கை கண்டதாம்)

***

சிகப்பில் நீர்கட்டுகளுக்கு கஷாயம் (நிம்பாதி)

வட்டலிமட்டை, சீலாந்திப்பட்டை, திரிப்பன்புல், விஷ்ணு கிராந்தி, நல்துளசி, செம்பக நெரிஞ்சி, ஆடாதோடை வேர், அமுதவள்ளி, வெள்ளைச் சுண்டைவேர், வேப்பம் பட்டை பேய்புடோலம் வகைக்கு க. ½ திரிபலைத்தோடு, வறட்டு மஞ்சள், சுக்கு, அமுக்கூரம், மதுரம், மாயக்காய், கருஞ்சீரகம், நல் சீரகம், சித்தரத்தை ஈருள்ளி கருஞ்சூரைப்பட்டை குக்கில் வகைக்கு க. ½ 3 நாள் 6 நேரம் மேல்பொடி கோரோசனையும் குளிகையும். (சாதாரண பத்தியம்).

***

சிகப்புக் குளிகை (நல்லதாம்)

சீனப்பா பலம் 1 கருஞ்சூரைப்பட்டை பலம் ½ இரத்த சந்தனம், பூலாவி விருஷம் சாஸ்திர பேதி பீதி ரோகணி, கருஞ்சீரகம், அதிமதுரம், நல்சீரம் வகைக்கு க. 3½ இடித்து பொடியாக்கி நிழல் தீண்டான் பச்சிலைச்சாற்றில் அரைத்துருட்டி மஞ்சாடி குன்றி தரம்.

***

சிரந்தி, சொறி, சிரங்கு, விகற்பத்துக்கு (கை கண்டதாம்) அதி மதுரம், வேப்பநெட்டு, திற்பிலி மூலம், ராமிச்சம் செங்கழுநீர் கிழங்கு, கொட்டம், இருவேலி, கருஞ்சூரை வேர், நொச்சிக்குருந்து, கடுகுரோகணி, வகைக்கு க. 2 நல்சீரகம் முந்திரிங்காப்பழம் வகைக்கு க. 1 கருஞ்சீரகம் க. 2 கஷாயமிட்டு 3 நாள் 6 நேரம்.

***

இதற்கு எண்ணெய்.

நல்ல மிளகு, க.2. கருஞ்சீரகம் க.2 அதி மதுரம் க.2 திரிசாதி க.1 உலத்திக் குருந்து க.4 காரை இலைச்சாறு + உருக்கு நெய் x காரை வேர் – மணல் பருவம் கரப்பன் விகற்பம் மாறும்

***

புழுக்கடிக்கு.

நொச்சி இலையைச் சவைத்துப்பிழில் புழு உடன் விழும். புழுக் கடிக்கிற இடத்தில் அரைத்தும் பூசலாம்.

அசுவகெந்தாதி பொடி.

ஐங்கரன் தன்னுடை பாதம் பணிந்திட்ட
சங்கயென்னியெ அசுவ கெந்தம் கதிக்குவன்
நல்ல மிளகு கழஞ்செட்டு திற்பிலி சொல்லுவேன் சொட்சம்
நிஷ்கம் புளருடன் சுக்கு நிஷ்கம் முதலெட்டு சேர்க்குக.
[illegible] : not legible.
இடிச்சு பொடிச்சு நாளாகிட்ட் சர்க்கரை கூட்டி வெருகடி சேவிக்குக்
காசங்களும் எந்நிவ் பீனிசம் குன்மம் க்ஷயம் பித்தமதிகரிக்குள்ளொரு வாயுக்
களும் நஷ்டமாய் மந்தாக்கினி திறந்து பெலம் வரும் ஒட்டுமே சமுசயம்
வேண்டா எந்றுமுனி சதமன் கும்பவன் அருள் செய்து

– நல்ல மிளகு க.8 திற்பிலி க.16 சுக்கு க.32 அமுக்கிரம் 64 ஏலம் 4 கிரும்பு 4 சிறுநாகப்பூ 4 பொடியாக்கி சர்க்கரையில் வெருகடி – இச்சாபத்தியம் பால் சுத்திக்கும் ஆகும். (purifying mother's milk)

நீருக்கு கஷாயம்.

கன்னியின், சருகு, முளை, இலை முசளை நீர்முள்ளி கடலாடி, முள் நெரிஞ்சில் கருவிலாஞ்சிக் குடம் முள்ளுக்கீரை சிறு பிள்ளை, கருது சதா வேலி மூலம், அன்னமே செம்மரிக்கிழங்கு சிற்றுமணக்காதன்வேர் கொன் னைக்குருந்தும் ஆகாசதாளிவேர் பிரமி வகையோர் கழஞ்சாக நிறுத்துள்ளி கன்னி கன்னல் மொழியே பனங்காச்சி முள் நெரிஞ்சி கடலாடி முளை நீற்றின சாம்பல் கடுரோகணி திரிபலை சிவதை திற்பிலி மூலம் கரிய சிரிஞ்சி மிளகு முன்னமது போலாகும் நாரமிருப்படியிலிட்டு உழகாக்கவே குறுக்கி மூன்று நாளருந்த விஷபாக நீர்களைகளும் நில்லாதோடும் என்ற கஸ்தீரஞர் நிகழ்த்து முறை கை கண்டதே.

***

சிகப்பு 18-க்கும் குளிகை.

முருங்கைப்பூ, முருக்கின்பூ, தாமரைப்பூ, மாதளம்பூ, தெற்றிப்பூ, செம்பருத்திப்பூ, சிறுபுள்ளடி வேர், செம்பநெரிஞ்சி தீண்டா

நாவி சிவனார் வேம்பு ~~செம்ப நெரிஞ்சி தீண்டா நாவி சிவனார் வேம்பு~~

கெருடக் கொடி வேர், நஞ்சறுத்தான் வேர் சின்னிவேர் நிலவிளாதி

சீலாந்திக்காய் இசங்கின் வேர், திரிசாதி செஞ்சந்தனம் கோரோசனை

அதிமதுரம், ஏலம் புலாவிருக்ஷம், இலவங்கம், கருஞ்சீரகம், பீதிரோகனி

குங்குமப்பூ, கஸ்தூரி, கருஞ்சூரைப்பட்டை, சீனப்பா சாஸ்திர

பேதி வகைக்கு கி 1 ஆட்டின் பால்1 முலைப்பால் 2. செந்தெங்கிள நீர் 1

ஆக சாமம் 4 சுன்றிதரம் - எல்லா சிகப்புக்கும் ஆகும்.

மேற்படிக்கு கஷாயம் - கெருடக் கொடி வேர் சீலாந்திப்

பட்டை, கருஞ்சீரகம் நல் சீரகம் நல்ல மிளகு (பேதி நீர் உடன் போகும்)

***

தோஷதிறக்கு.

சிறு புள்ளடி வசம்பு கீழ்காய் நெல்லி சேரவே மூன்றும் ஒன்றாய்

நயம்பெற அரைத்துச் சீலை முன்கையில் முடிந்து கட்ட

வயம்பெற தோஷம் தீர்ந்து வன்மையாய் இருக்குமென்று

பயம்பெற முனிவன் சொன்னபரிகாரம் அறிந்து செய்யே.

***

சன்னிக்கு,

நஞ்சறுத்தான், வேளை வேர், வெள்ளுள்ளி வகைக்கு சமன் - வேப்பெண்

ணெயில் ஒற்றவும் - கண்ணுக்கு மை - நல்ல மிளகு, திற்பிலி ரண்டும்

அகத்தி இலைச்சாற்றில் அரைத்து மாத்திரைகள் போலாக்கி வைத்துக்

கொண்டு முலைப்பாலில் உரைத்து கண்ணில் ஊற்றவும் (உள்ளுக்கு)

(~~வேளா வயித்தியர்~~)

***

தோடகை கரப்பனுக்கு. (~~Vadr. Velor.~~)

துத்தம், துருசு, வேம்பாடப்பட்டை கருஞ்சீரகம், கஸ்தூரிமஞ்சள், புவ

முப்புற்று வெள்ளைக்குந்திலிக்கம், வகைக்கு சமன் பசுவின் நெய்விட்டு அரைத்து

தோடகை கரப்பனில் பூசி சோப்பு போட்டு கழுவவும்.

***

குக்குடப்பாவு.

பெரிய முறை. (~~Van. Velor~~)

சீனப்பாவு பலம் 4 (சங்குக்குப்பிச்சாற்றில் 5 நாள் ஊறப்போட்டு

சுத்தி செய்துக் கொள்ளவும்) ரசம், கெந்தகம், காந்தம், திரிகடுகு,

லிங்கம், கெந்தகம் அளதாரம் பொன்காரம் (-சீனக்காரம்) ஓமம்,

கன்னரம், திரிசாதி, கார் கோல், துருசு, துத்தம், குரோசானி,

நவசாரம், குக்கில், ஏலம் இலவங்கம், கடுகு, சித்தரத்தை, இருசீரகம்,

கல்மதம், சேங்கொட்டை, சித்திர மூலம் அபின், அரிசி ஆறு, மரமஞ்சள்,

சோமண உப்பு, சிவதை, ரோகனி, ரசகற்பூரம், குடமச்சள் வகைக்குப்

பலம் கால், இதில் அபின் ஒரு கழஞ்சி சேர்த்தால் போதும் மற்ற மருந்துகளை சுத்தி செய்ய வேண்டியதில்லை எல்லாவற்றையும் இடித்து சூரணம் செய்து ஒரு மாமிசம் கறுத்த கோழியைக் கீறி குடலை எடுத்து விட்டு அதற்குள் மருந்துகளைச் செலுத்தி தைத்துக்கட்டி ஆமணக்கிலையால் பொதிந்து கட்டி வைக்கவும் - அவிக்கும்முறை - ஒரு பெரிய பானையில் -காணச்சாறு பதினாழி கழச்சி இலைச்சாறு, தேவதாளைச்சாறு, நொச்சிச் சாறு, தி சித்திரமூலச்சாறு, பெர்டுதலைச்சாறு, சிறுதும்பைச்சாறு, குமரி கல்சாறு வகைக்கு நாழி வீதம் சேர்த்து அதற்கு மேல் பானைக்குள் பருத்திக்கம்புகளைப்பரப்பி பிறகு பானையின் வாய்க்கு சமீபத்தில் ஒரு முருங்கைக் கம்பை வைத்து அதில் கோழியைக்கட்டி அடியில் வைத்திருக்கும் பருத்தி மாறுக்கு மேல் தொங்கக் கூடியதாய் வைத்து பானையை மூடி ஏழு சீலைமண் பெலமாய் செய்து முதலாவது தீபாக்கினியும், பிறகு கமலாக்கினியும் கடைசியில் ஔ காடாக்கினியுமாக எரித்து ஐந்து மணி நேரம் எரித்து ஐந்து மணி நேரம் இருந்து நன்றாய் ஆறின பிறகு எடுத்து உலர்த்தி இடித்து சூரணம் செய்து கொள்ளவும் - தேனில் சுண்டைக்காய் பிரமாணம் சாப்பிட்டு வரவும்-

கடும்பத்தியம்---- தாகத்துக்கு ஆட்டின் பால் கஞ்சி ஒரு மண்டலம் சாப்பிடவும் - குஷ்டம், கிரந்தி, சூலை

காணச்சாறுக்கு பதிலாய் 2 பக்கா காணம் அவித்த தண்ணீரையும் சேர்த்துக் கொள்ளலாம்.

பேதி பிடிக்க.

கோரங்கிழங்கு, முருங்கைப்பூ, வெள்ளுள்ளி, ஓமம், இஞ்சி, இவைகளை - தேன் விட்டு வறுத்து கஷாயமிட்டு அநுபானங்களும் சேர்த்துக் கொடுக்கவும்.

வறுத்த மருந்துகளை கொஞ்சம்எடுத்து சுடுதண்ணீரில் புழிந்து அநுபானங் கள் சேர்த்தும் கொடுக்கலாம் - தேன் விட்டு வறுத்தால் மருந்துகள் நன்றாய் வெந்திருப்பதினால் சுடுதண்ணீரில் புழிந்தால் போதும - வயற்றுப் பொருமல் கபம் இருந்தால் கஷாயம் சேர்த்துக் கொள்ளலாம்.

(மார்த்தாண்டன் வயித்தியன் செய்யும் முறை)

இரைக்கு குழம்பு.

இந்துப்பு, ஏலம், காயம் பொரிகாரம் சீனகாரம் வெடியுப்பு; வகைக்கு சமன் (இந்துப்பு, காயம் ரெட்டி)(நவசாரம் பாதி) வெடியுப்பும் நவசாரமும் சுண்ணாம்புத் தண்ணீரில் போட்டு (எடுத்து?) வெள்ளுள்ளித் தயிலத்தில் அரைக்கவும் - மஞ்சாடி அளவு அநுபானத்தில் கொடுக்கவும்

இரைக்கு

மாந்தம் இரை தீரும், இஞ்சி வெள்ளுள்ளி தல்லிப்புழிந்து அதில் சேர்த்து கொடுத்தால் மாந்த சன்னி உடன் விடும்.

மாந்தத்துக்கு தயிலம்.

இந்துப்பு, ஏலம், காயம் வெள்ளுள்ளி வகைக்கு ரூ.1 தேங்காய் மூன்று நில வேர் பலம் 1 கொடுவேலிக் கிழங்கு சுத்தி செய்து (சுண்ணாம்பு தண்ணீரில்) பெருமரத்துப்பட்டை பலம் 6 இடித்து வெந்நீர்விட்டு புழிந்து பாலில் சேர்க்கவும் குண்ட ஊப்பா ஊல இஊல21 தவிடு போல் அரிந்து சேர்க்கவும் - முதிர்பருவம் - அரைக்கரண்டி அளவு - நல்லது.

தோஷ மாந்த நெய்.

கொட்டம், வசம்பு திரிபில் காயம் வால் மிளகு, மதுரம் நல் சீரகம் தேங்காய் ... நாழிக்கு ஒரு பலம் சின்னி சுடலாவரை நில விளாத்தி நண்டு வகைக்கு சாறு ஆழாக்கு (கூடுதல் சளி இருந்தால் நண்டுச் சாறு கூடுதல் சேர்க்கவேண்டும் கடைமருந்தை சாற்றில் அரைத்துக்கலக்கி மெழுகு பதம்-தேய்க்கவும் உள்ளுக்கு கொடுக்கவும் ஆகும்.

சிறுதேக்கு வாய்விளங்கம் வால்மிளகு கடுகுரோகணி சுக்கு ஏலம் தி இலவங்கம் தானிக்காய் தற்கோலம் திற்பிலி நல்லமிளகு வகைக்கு ரூ 3 இருநாழி தண்ணீரில் கஷாயம் போட்டு உழக்காக்கி ரண்டுநேரம் குளிகை சேர்த்தோ சேராமலோ கொடுக்க வேண்டும்-விஷ மாந்தம்-கணைச்சுரம்-பொருமல், நீர், கபம், கை,கால்-சுவாசம்-வீக்கம் இவைகளுக்கு கை கண்டதாம்.

சுர ஏலாதி எண்ணெய்.

கொடுப்பை தாரு, சிறு கீரை, நறு நட்டி குறுந்தொட்டி கோரங்கிழங்கு /// ஏலம் இலவங்கம், ராமிச்சம் சித்தரத்தை, அதிமதுரம், குங்குமப்பூ, சதகுப்பை கடுகு ரோகணி, சீரகம், சிறு நாகப்பூ, செவ்வள்ளி வகைக்கு ரூ.1 தேங்காய் எண்ணெய்படி. 1

***

முள்ளெலித் தயிலம்.

ஆழியந்தமே நிறைந்த சோதி பாதம்

அருளடைந்த ஸ்ரீ ரிஷிகளுடைய பாதம் போற்றி

வாதி மகன் வயித்தியரே சொல்லக் கேளு

வாளுன விலாச்சுழியன் பிரதோஷ திதிற்கு

நாதியென்ற வயித்தியா உரைகரக்கேளு

போதிலிக்கத்தயிலமொன்று புகலக்கேளு

புகழான நிலவேர் முசிய முட்டை

முட்டையொடு கோழி யொன்று முருங்கைப்பூவும்
(அப்பட்டு) (இண்டு)
முறையான முள்ளெலியும் அயினி இண்டில்

சட்டையுடன் தூதளையும் ஆடாதோடை

சதுரங்கம் உத்தமதாளி பத்தும்

கட்டாக வார்த்தெடுத்து சாறுபடி ~~அரையும் சேர்த்து~~ ரண்டு

கனமான நிம்பெண்ணெய் படி அரையும் சேர்த்து

நெட்டையொடு கற்கவகை சொல்லக்கேளு

நிலையான கோலரக்கு தேவதாரம்

தாரமொரு மரமஞ்சள் மஞ்செட்டியும்

தகையடங்கும் அதிமதுரம் அரத்தை அக்கிரு

காரமுள்ள திற்பிலி கற்கடக சிங்கி

கடியதொரு வால்மிளகு கடுக்காய்தோடு

ஊரிலுள்ள உள்ளியொடு வசம்பு சுக்கு

உற்றச விளாயமொடு கொட்டந்தானும்

பேரான வேர்க்கொம்பு வயம்பு தானும்

பிசகாமல் ஏலம் இலவங்கம் சேரே.

சேர்த்திடித்துச் சாறுதனில் அரைத்துக் கொண்டு

செயலாகக் கலக்கியெல்லாம் தீயெரித்து

வார்த்திடுவாய் முதிர்பருவம் மதலையோர்க்கு

மாறுமல் இருநேரம் அருந்தினக்கால்

கோர்த்ததோர் இழைப்பிருமல் குளிர் சீதங்கள்

கொடியதொரு சன்னிகளும் தீர்க்குமென்று

காத்திருந்த வேல்முருகன் அகஸ்தீசனுக்கு

காதில் உபதேசமதாய் காண்பித்தாரே

(from சித்திரை ~~வைத்திய~~ வாத்தியார் - பாளையம்)

தோடகைக்கு.

குருக்கின் அரிசி சிற்ங்கை அரை

கஸ்தூரி மஞ்சள் கூ. 2

உருக்கு நெய் உழக்கு.

பொடித்திட்டு மணல் பருவம்

From father-in-law's Book.

***

கண்ணில் பூலை நீர் புழுவெட்டு நீர் பாச்சலுக்கு மை.

நாரங்கா புளிப்பைத் துணியில் ஊட்டி நிழலில் உலர்த்தி

திரிமட்டுக்கு கீரி எடுத்து, நரிவிரட்டி வேர் எடுத்து
ஊசி முன் கிரிக்குள் வைத்து சுருட்டி நல்லெண்
ணெய் நனைத்து தமுகை பிறத்தமை பற்றிச்சு

நல்லெண்ணெய் இரும்புகரண்டியில் விட்டு தீயில் காட்டி தீ கரண்டியில் பற்றப்பற்ற அணைத்து அணைத்து கலிப்பு மாற்றின பின் பச்சு வெள்ளத்தில் அதை ஊற்றி மேலே படர்ந்த என்ணையை அரிச்சு தமுகைப் பிறத்து பற்றின மையில் விட்டு நன்றாய் சாலிச்சு மை எழுதும் போலெ கண்ணின் கீழ் இமையில் எழுதவும்.

(சிகப்புக்கு) பேதிநீர் உடன் போக குளிகை.

நல்ல மிளகு, சீனப்பா, கருஞ்சூரைப்பட்டை, கெருடக் கொடிவேர், கெருடக் கொடி சாற்றிலும், குறுத்தி சாற்றிலும் அரைக்கவேண்டும்-பயறளவு-கொத்தமல்லி சீரகம் கஷாயம் போட்டு அதில் கொடுக்க வேண்டும்.

பித்த சோகைக்கு நெய்.

கையாந்தகரை	எலுமிச்சம்பழச்சாறு உரி
ஏமாசுளமாக்கை	
கற்றாழைச்சருகு	நெல்லிக்காய்சாறு படி 2
நருநட்டி	பசுவின் கோமியம்படி 5
சதாவேலி கிழங்கு	பசுவின் பால் படி 2
நீர்முள்ளி வேர்	நெய்படி 2
பிரமி	காந்தம் கு 3
பொடுதலை	நல்லமிளகு படி அரை
முள் நெரிஞ்சி	
தூதளை - வகைக்கு சாறு நாழி	

-- சாற்றில் அரைத்துக் கரைத்து மெழுகு பருவம்-இச்சா பத்தியம்.

***

வற்மதிக்கு.

ஒருவொடுக்கி இலையைச்சதைத்து நாசி, செவி, உச்சியில் ஊத மயக்கம் விடும்

***

நால் பாமர என்ணெய்.

அத்தி இத்தி ஆல் அரசு ஞாமிச்சு சந்தனம், மருதம் வறட்டு மஞ்சள் சதா வேலி நன்னாரி கதளி மாலும் அமிர்து இருவேலி குறந்தொட்டி திரி பலை இவைகொண்டுள்ள கஷாயத்தில் என்ணெய்ம், நெய்யும் பாலும்,

சமன் கூட்டி, இளநீர் நாழி, உழுந்து ராயிச்சு கற்கம் சேர்த்து தேய்த்
தால் வாத பித்தம் தொண்ட பிரமேகத்தைக்களையும் - தேன்கொஞ்சம் தேக்கரண்டி
இஞ்சி பலம் 3 திற்பிலி ௳ 3 நல்சீரகம், மதுரம் ௴ வகைக்கு ௳ 2 முந்தி) ஆகார
ரிங்காபழம் பேரீந்திப்பழம் தாளிசபத்திரி வகைக்கு ௳ 1½.) தகனத்துக்கு.

***

வாதத்துக்கு தயிலம்.

வேப்பின் பட்டை பலம் 25 கொடுவேலி கிழங்கு பலம் 5 பூலாவிருக்ஷ்ம்
தேவதாரம் வகைக்கு பலம் 2 நல்ல மிளகு படி கால் சீனப்பா பலம் 2
வசம்பு பலம் 1 இந்த மருந்து ஏழும் சதைத்து ஆறு மரக்கால் தண்ணீரில்
கஷாயமிட்டு குறுணியாக்கி எட்டுத் தேங்காய் புழிந்து பால் எடுத்து
முன் கஷாயமும் பாலும் ஒன்றுய் சேர்த்து மாமிசம் கறுத்த பிடைக்கோழி
ஒன்றை தூவல் கால் தலை நீக்கி குடல் எடுத்து உருக்கி கழுகி வயற்
றுக்குள் வைத்து வெள்ளுள்ளிப்பருப்பு உழக்கு கடுகு உழக்கு வேப்பின் கொழுந்து
உழக்கு முருங்கைக் கொழுந்து உழக்கு நொச்சிச் கொழுந்து உழக்கு
இந்த வகை 5 மருந்தும் அரைத்து கோழி வயிற்றில் அடைத்து ஆமணக்
சிலை பொதிந்து பனை நார்கொண்டு வரிந்து கட்டி பானையில் முன் கஷாய
மும் பாலும் விட்டு முருங்கைக்கம்பு கொண்டு பறணு பரத்தி கோழியைக்
கெட்டி தூக்கி மேல் சட்டி கழுத்திமூடி சீலை மண்செய்து தீயிட்டு கோழி
வெந்தால் எடுத்து நாரும் இலையும் நீக்கி உரலிலிட்டு பஞ்சு போல்
இடித்து அடியிலிருக்கும் கஷாயத்தையும் இதையும் ஒன்றய் கலக்கி ஒன்றரைப்
படிவேப்பெண்ணெய் சேர்த்து திரிகடுகு நல்சீரகம் கருஞ்சீரகம் வெப்பா
லரிசி காயம் வகைக்கு 2 அரைத்துக் கலக்கி மெழுகு பருவத்தில்
வடித்து, ஆறுநாள் 12 நேரம் ௳ குடிக்கவும். பத்தியம் முருங்கை இலை
யும் கூழ் சோறும்.

***

சோகைக்கு எண்ணெய்.

தானென்ற நல்லெண்ணெய் படிதானென்று
தவறாத இசங்கு கரிசாலை நொச்சி
வானென்ற தாம்பூலம் தேசிக்காயோர்
வகைக்குழக்குச் சாறுக வாங்கியே தான்
கோனென்ற மிருசுதவும் கழஞ்சு எட்டு
குறையாமல் முன்சாகமதிலாட்டி
வானென்ற எண்ணெய் தனில் கரைத்து வார்த்து
வளமாக அடுப்பேற்றி தீயை மூட்டே.

மூட்டியே காய்ந்து பதம் மெழுகதானல்

முறையான கலசமதில் வடித்திறுத்து

தாட்டிகமாய் ஒன்றைவிட்டு ஒருநாளாகத்

தேன் தேய்த்து மூன்று முழுக்கப்பால் பின்றும்

ஒட்டிவே முழுகிடுவாய் வாரந்தோறும்

உத்தமனே பத்தியமாய் முழுகிக்கால்

சாட்டி நின்ற விஷ நீர்கள் தலையின் நோவு

தவழ்ந்த பீனிசமும் தணிந்துபோமே.

***

(Chelliah, physician of Kalkurichi advised as follows on 12-8-1102)

ஒருபலம் அன்னபேதி அரைப்பலம் வெடியுப்பு கால்பலம் நவசாரம் இவை

களைக் கொண்டு வந்து முதலாவது சீனிச்சட்டியை அடுப்பில் வைத்துக்

காய்ந்தவுடன் அன்னபேதியைப்போட்டு உருகினவுடனே வெடியுப்பைப்

போட்டு அதவும் உருகின பிறகு

நவசாரத்தைப் போட்டு 30 நாழிகை நேரம் கமலாக்கினியாக

எரிக்கவும். அப்படி செய்துவரவே மேற்படி மருந்து கல் செந்தூர

மாகும் அதை எடுத்து கையாந்த கரைச்சாறுவிட்டு அரைத்து வில்லை தட்டி

காய்ந்த பிறகு ஓட்டில் வைத்து சீலை மண் செய்து 50 எருவில் ஒரு

புடம் போட்டு எடுத்த செந்தூரத்தை கொஞ்சம் சிறு தேனை

(புற்றுத் தேன் நல்லது) சட்டியில் விட்டு காய்த்துக் கொண்டிருந்தால்

இறுகும் அந்தச் சமையம் எடுத்து கம்பிபோல் நீட்டி வைத்துக் கொண்டு

ஆமணக்கெண்ணெயில் நனைத்து பேதிக்கு மூலத்தில் வைக்க உடன் வெகு

சுலபமாய் பேதி போகும்.

கபம் இழைப்புக்கு.

அன்னபேதி அரைப்பலம் துருசு அரைப்பலம் ரண்டையும் காட்டு மேதிப்

பால் விட்டு ரண்டு நாழிகை நேரம் அரைத்து பிறகு சுத்தி செய்த

தலைமுடி ரண்டு கழஞ்சு கூட சேர்த்து 5 நாழிகை நேரம் அரைத்து

உருட்டி வைத்துக் கொண்டு ஐந்து சீலை மண் செய்து திருகு கள்ளி

விறகைச்சுட்ட சாம்பல் ரண்டுபடியும் சேகரித்து வைத்துக் கொண்டு

மேற்படியாரைககண்டு பின்னுள்ள பாகத்தை அறிந்து கொள்ளவும்.

***

சாதிலிங்க செந்தூரம் சன்னியை மாற்ற வெகு நல்ல மருந்தாம்—அதை

நீற்றுவது சாதிலிங்கத்தில் அமைந்திருக்கும் ரசம் (மெர்க்குரி) உருகிப்

போகாமல் கட்டுப்படுத்தி வேலை செய்ய வேண்டுமாம்—அந்த முறையை

ஆராய்ந்து அறியவேண்டும்.

இரை மாந்த ஜன்னிக்கும் இரைக்கும் கறியுப்பு செந்தூரம்

நல்லதாம்.

6.9.1105 From Chelliah, Physician, Karamanai

கெந்தகத்தை குமரிக்குள் வைத்துத் தைத்துக்கட்டி ஒரு சட்டிக்குள் வைத்து கீழும் மேலும் உவர் மண் போட்டு நடுவில் வைத்து சட்டியை மூடி வைத்து ஒரு சாமம் சிறு தீயெரிக்கவும்-ஆறி எடுத்து கெந்தகத்தை கழுதைப்பால் விட்டு அரைத்து வில்லையாக்கி வெய்யிலில் உலர்த்தி ஆறுபடி சுண்ணாம்பு சங்கும் எடுத்துவைத்துக் கொண்டு கொஞ்சம் கொதும்பும் சேகரித்துக் ~~கொண்டு கொஞ்சம் கொதும்பும் சேகரித்து~~ வைத்துக் கொண்டு அவரைத் தெரிவிக்கும்படி சொல்லியிருக்கிறார். மேலுள்ள பாகங்களை அவர் கூட இருந்து செய்து காண்பித்துத் தருவாராம்.

சாதிலிங்க செந்தூரம் செய்ய-சாதி லிங்கத்தைக் கட்டியாக எடுத்து கத்திரிப்பழத்தை துவாரம் செய்து அதற்குள் சாதிலிங்கக்கட்டியை வைத்து மேற்படி துவாரத்தை மூடி/ 3படி உமியை கீழும் மேலும போட்டு தீ வைக்கவும். உமி நீறின பிறகு ஆறி எடுத்துக் கொள்ளவும். இப்படி நூறு கத்திரிப்பழங்களில் மாற்றி மாற்றி வைத்து எடுத்த பிறகு மேற்படி வயித்தியரைத் தெரியப்படுத்தி அதற்கு மேலுள்ள பாகங்களை அறிந்து கொள்ள வேண்டும் என்று சொல்லுகிறார்.

கழுத்தில் வரும் நீர்கட்டுகளுக்கு மத்திப்பு.

(Generally தலை நீருக்கு) இது ஜன்னிக்கும் நல்லதாம். ~~(தலை நீருக்கு)~~

நிலவேர்-அரிசனி ஞாயறு, எலிப்புழுக்கை, குரியானை, இவைகளை முலைப்பால்விட்டு அரைத்து கொதிப்பித்து தலையில் வைக்கவும்.//(மேற்படி நீர்கட்டுகளுக்கு மேல் போட தயிலம்) ஒரு பலம் தேவதாரக்கம்பில் அரைப்பலம் வெள்ளுள்ளியை அரைத்து தேய்த்து கருத்தநூல் கொண்டு சுற்றிக் கட்டி கால் படி வேப்பெண்ணெயில் சுடர்த்தயிலம் வடித்து வைத்துக் கொண்டு மேற்படி தயிலத்தை துணியில் நனைத்து நீர்கட்டின்மேல் போட நீர்சிதறி பிறகு வற்றும்.

***

வயிற்ற ளைச்சலுக்கு.

சாதிலிங்கம் 2 சீனக்காரம் பலம் 1 அபின் ரூ 1 இதன் செய் பாகத்தையும் மேற்படி வயித்தியரிடத்திலிருந்து அறிந்து கொள்ள வேண்டியது.

நாவல் காட்டு வயித்தியர் முறை.

அபின், 1, சாதிலிங்கம் 2இ சீனகாரம் 4, சட்டியில் அடியின் சீனம் அதன்மேல் சாதிலிங்கம் அதின் மேல் அபின் பிறகு லிங்கம், பிறகு சீனம், பொரித்தி எடும்.//பெரியோருக்கு மஞ்சாடி அளவு தேனில், பிள்ளைகளுக்கு-குறைத்

சாதிலிங்கத்தையும் சீனக்காரத்தையும் வெவ்வேறாய் பொடித்து வைத்துக கொண்டு ஒரு சட்டியைக் அடுப்பில் வைத்து அதில் முதலாவது

சீனக்காரத்தில் பாதியைத்தட்டி அதற்கு மேல் லிங்கத்தைப் போட்டு அதற்கு மேல் மீதி சீனக்காரத்தையும் போட்டு பொரிந்த பிறகு எடுத்து கால் கழஞ்சு அபின் சுட்டு சேர்த்து அரைத்துக் கொள்ளவும்.

***

வாயுவுக்கும் மந்தத்துக்கும்.

சீமை நிலவாகை பலம் 1 சுக்கு க 4 சீரகம் க 2.

நிலவாகையிலையை அரைப்படி பசுவின்பாலில் போட்டு கால் மணி நேரம் வைத்து பிறகு அதிலிருந்து பாதி பாலைத் தெளித்து கீழே விட்டு விட்டு மீதிப்பாலோடு வெய்யிலில் வைத்து காயவைத்து நன்றாய் உலர்ந்த பிறகு மற்ற ரண்டு மருந்துகளையும் சேர்த்து சூரணித்து வஸ்திர காயமும் செய்து சமன் சீனி சேர்த்து பரணியில் அடைத்து வைத்துக் கொண்டு சாப்பாட்டுக்கு மேல்வெருகடிசாப்பிட்டு பால் குடிக்கவேண்டியது. நன்றாய் பேதியாகிவரும். இந்தப்பொடியை பால்விட்டு புட்டவியல் செய்து உலர்த்தி வைத்துக் கொண்டால் மிகவும் நல்லது. — W. Chelliah.

* *

இரைபோக தயிலம்.

கிருமிசத்துருக்கு பலம் 1 ரண்டு படி தண்ணீரில் கஷாயமிட்டு எட்டி லொன்றாய் குறுக்கி ரண்டு தேங்காயின் பாலோடு சேர்த்து காய்ச்சு மெழுகு பருவமாகி வரும் பொழுது ஒரு தேக்கரண்டியளவு கொடிக்கள்ளிப் பால் கூடச் சேர்த்து மெழுகு முதிர்ந்த பருவத்தில் வடித்து வைத்துக் கொண்டு ஒருவயசான பிள்ளைக்கு முலைப்பாலில்-10, 12 துளி விட்டுக் கொடுக்கவும் ரண்டு மூன்று வயசான குழந்தைகளுக்கு ஒரு கரண்டியளவு கொடுக்கலாம். — W. Chelliah.

***

இரைக்கு, திராவகம்.

முளை இலை பலம் 2, மூட்டைத்தண்டு பலம் 2, வெள்குள்ளி பலம் 2, இஞ்சிப்புல்கிழங்கு பலம் 2, சுக்கு நாறிப்புல்வேர் பலம் 2, கறியுப்பு பலம் 1, பழங்கருப்பு கட்டி பலம் 1, இந்துப்பு பலம் 1, காயம் பலம் 2, சூடம் பலம் 3/4 (முக்கால்) இவைகளைச் சேர்த்து திராவகம் எடுத்துக் கொள்ளலாம். குப்பித்தாளில் தவாரம் செய்து எடுக்கிற பாகம் பொருமலையும் ஜன்னியையும் மாற்றும்.

***

பஞ்ச லோகம்.			பஞ்ச பூதம்:-
அயம் ...	ரெத்தத்தில்	...	பிரதி (மண்)

வங்கம் ... அஸ்தியில் ... அப்பு (தண்ணீர்)

பொன் ...) வாயு (காற்று)
) நரம்பில் ,,, ~~வாயு (காற்று)~~
வெள்ளி ...) தேயு (நெருப்பு)

செம்பு ... சதையில் ,,, ~~தேயு (நெருப்பு)~~
ஆகாசம்.

தாதுகள் ஏழு:- தோல், ரசம், ரெத்தம், நரம்பு, சதை, அஸ்தி, சுக்கிலம். உபதாதுகள் நாகம், பித்தளை.

***

அரியுஞ்சத்தியும் அருஞ்சிவன் ரண்டுமாய்
அக்கிரமித்தில் ஐவரும் கூடியே
குறியுங் கெற்பக் கருவறைக்குள்ளதாய்
கூண்டெழுந்தது கொண்டதுந்தீது கேள்
நெறியும் தோல் சதை மூளையுமுதிரமும்
நேரயிர்தமுமன்னையின் பங்குதாம்
நறி நரம்பு எலும்பு குடல் விந்து
நகமும் ரோமமும் பிதாவுடல் பங்கதாம்
பங்கு இந்தப்பதினொன்றுங் கூடியே
பையதான கருவறைக்குள் புக்கி
தங்கி நாழு கடிகை நாழுமாம்
தான் வலமாண் இடமாகில் பெண்ணதாம்.

***

சிரகணிக்கு குழம்பு.

கடுக்காய் தோடும் காசிக்கட்டியும் தேன்
விட்டு வறுத்து அபினம் சேர்த்து தேன்
விட்டு அரைத்து குழம்பாக்கி வைத்துக் கொண்டு
தேகபலம் அறிந்து கொடுத்து வரவும் - கடுககாய்
தோடும் காசிக் கட்டியும் வகைக்கு பலம் அரை அபின் கழஞ்சு கால்.

கெந்தகம்.

ரண்டு பலம் கெந்தகத்தை நெய்விட்டு உருக்கி வில்லை தட்டி கொவ்வை இலையை ~~த~~ அரைத்து கவசம் செய்து சட்டிக்குள் வைத்து நீர் மருதன் பட்டை சுட்டசாம்பல் ஐந்து படி எடுத்து சட்டிக்குள் மருந்தின் கீழும் மேலும் பரப்பி மேல் சட்டி மூடி சீலை மண் செய்து ரண்டு சாமம் சிறு தீ எரிக்க நீரும்.

வீராசாமி வயித்தியர், 31.10.1103, மங்காடுகுழிவிளை.

ரசம்.

ரசத்தை முட்டை வெள்ளைக் கருவிட்டு அரைத்து முட்டைத் தோட்டுக்குள் வைத்து மூடி ஏழு சீலை மண் செய்து குக்குட புடம் போட

-- வீராசாமி வயித்தியர், 31.10.1103இ 13.6.1928.

சிரப்.

1. நாரகம், சாதிக்காய், கிராம்பு, சந்தனம், கொட்ட, இவைகளின் இலைகள்.

2. ராமிச்சு அருகு, வில் லே, மாதளை, இருமிச்சு இவைகளின் வேர்.

3. புளியாரை, வல்லாரை, விஷ்ணுகிராந்தி ஒரிலைத்தாமரை, பால் கிழங்கு, (அடவதியன்) இவை சமூலம். (அமுதவள்ளிசேர்க்கவும்) பச்சிலை, துளசி.

4. பிரண்டை, மூட்டைவள்ளி, கருவேப்பிலை, தாமரைப்பூ, தாமரை மூலம் (தாமரை வளையம் அல்லது தாமரைக்கிழங்கு) நெல்லிக்காய் தென்னம்பூ, நறுநட்டி, சுக்கு நாறிப்புல், இவைகளும்

5. சீரகம், கிராம்பு, சோம்பு, ஏலம், திரளி, தேவ்தாரம், சாதிக்காய், பத்திரி மிளகு, மதுரம் காயம், ஓமம் இருவேலி, சுக்கு, திப்பிலி, இவைகளும் இலவங்கம்

சேர்த்துக் கஷாயம் செய்து (வாற்றி எடுத்து) முந்திரிக்கப் பழத்தை ஊறப்போட்டு புழிந்த சாரம் செவ்விள நீரும-எலுமிச்சம்பழச் சாறும் மாதளம்பழச்சாறும் சேர்த்து காய்த்த சீனி சேர்த்து பாகு செய்து

கஷாயத்தோடு கலந்து குப்பியில் அடைத்து வைத்துக் கொண்டு கால் அவுன்ஸ் வீதம் வென்னீரிலாவது பாலிலாவது விட்டு ஆகாரத்துக்கு மேல் சாப்பிட்டு வர உஷ்ணநோய் சகலத்தையும் நீக்கும்.

நறுநட்டியும் இலவங்கமும் கூடுதல் சேர்க்கவும் - நறுநட்டி பச்சை நல்லது-மருந்துகளை நமது அநுபவப்படி கூட்டியும் குறைத்தும் சிலதை நீக்கியும் சேர்த்துக் கொள்ளலாம்.
பாகு கட்டியாயிருக்க வேண்டும்.

- நல்லவே - இரும்பையா நாடார் திட்டு விளை.

நறுநட்டி அதிகம் கூடுதல் அவசியம்.

A good Blood purifier. – H. Daniel 31.10.1103.

தேமல் படை மாற,

கருஞ்சீரகம், விஷ்ணு கிராந்தி, சிவனார் வேம்பு இவற்றை சூரணம் செய்து சீனியில் வெருகடி பிரமாணம் சாப்பிட்டு வரவும் (நல்ல மருந்து)

***

சர்த்தலுக்கு குளிகை.

நெல்லி சர்க்கரை நெற்பொரி திற்பிலி
நல்ல சந்தனம் நாரிமான் கொம்பதும் (நன்னாரி)

மல்லி சீரம் மதுரம், துடி, சோலம் (ஏலம்)

புல்வநு நாறி புத்தகம் சுடுகரி (சுக்கு நாறிபுல்) (மயிலிறகு)

கரியும் சுக்கு தி சிராம்பொடு வில் லை வேர்

குறிய தாம் குழந்தோட்டியின் வேரதும்

வரிசையாய் நீ வகைக்கு சமனெடு

அரிவை பாலில் அரைப்பாயொரு சாமம்

சாமம் மாதளம் சாறிவ மேயரை

ஓமித ஊ உருட்டி தீ தேறு போல் (தேற்குன்பரல்போல்)

தாமசியாமல் சர்த்தலிருந்திடில்

ஆமித ஊன்யே தேனில் கொர்டுத்திட்டே

கொடுத்துப்பாரு குரல் கம்மல் ! தாகமும்

எடுத்த விக்கல் எழும்புங் கபங்களும்

அடுத்து நில்லாது ஐந்து சர்த்தல்களும்

தருக்கும் சஞ்சீவி சர்த்திகிரத்தாகுமே.

எஸ்.வி. ******************

Verified, corrected with original

8/6/62

8/6/62

M.P.S.C. 9—4,00,006—8-10-60.

MADRAS PUBLIC SERVICE COMMISSION.

ADDITIONAL BOOK.